Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly

சங்கீத நூல்கள்

★

	ரூ.	அ.
கந்தகானமுதம் (2-பாகம்) (N. கோடீச்வரய்யர்)	5	0
புரந்தர மணிமாலை (கானகலா பூஷணி லலிதாங்கி)	2	4
முருகன் மதுர கீர்த்தனைகள் (T. R. விச்வநாத சாஸ்திரியார்)	2	4
தக்ஷிணாத்ய கானம் (C. R. S. அய்யங்கார்)	2	4
சங்கீத தத்வப் ப்ரதர்ச்னி I (Prof. வேதாந்த பாகவத.)	2	0
குருகுஹ கானாமிர்த வர்ஷனி	1	8
கானமஞ்ஜூஷா	1	0
பேரின்ப கீர்த்தனங்களும் பதிகங்களும் (N. கோடீச்வரய்யர்)	1	0
மிருதங்க் ஸ்வபோதினி (துரைராஜ அய்யர்)	1	0
வேதபுரிக் கீர்த்தனைகள் (T. R. விச்வநாத சாஸ்திரியார)	0	2

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தக்சாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A. at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 17 24-5-'42 Price 2 Annas

சென்றவார நிகழ்ச்சிகள்

பத்திரிகைக் கட்டுப்பாடு உத்தரவு

பத்திரிகைகள் அதிக பக்ஷமாக எத்தனைப் பக்கங்களை வெளியிடலா மென்பதை நிர்ணயம் செய்து இந்திய சர்க்கார் பத்திரிகைக் கட்டுப்பாடு உத்தரவு ஒன்றை வெளியிட்டிருப்பதாக சர்க்கார் அறிக்கை ஒன்று கூறுகிறது.

கப்பல் போக்குவரத்து நிலைமை முன்னைக் காட்டிலும் மோசமாகி விட்டதாலும், அதன் காரணமாக பத்திரிகைகள் காகிதத்தை உபயோகிப்பதில் மிகுந்த சிக்கனம் அனுஷ்டிக்க அவசியமேற்பட்டிருப்பதாலும் மேற்படி நடவடிக்கையை எடுக்கவேண்டியிருக்கிறது.

திருத்தி அமைக்கப்பட்டுள்ள உத்தரவுப் பிரகாரம் 'ஏ' வகுப்புப் பத்திரிகைகள் (குறைந்த பக்ஷமாக ஒரு அணு விலையுடன் கூடியவை) 4 பக்கங்களுடன் அதிகப் பக்ஷமாகத்தானிருக்கும்: பி. ஸி. வகுப்புப் பத்திரிகைகள் (அதே விலையுடன் கூடியவை) முறையே 6, 8 பக்கங்களுடன் வெளியாகும். தினசரிப் பத்திரிகைகள், வாராந்தப் பத்திரிகைகள், வார மிரு முறைப் பத்திரிகைகள், வார மும்முறைப்பத்திரிகைகள், 15 தினங்களுக்கொரு முறை வெளியாகும் பத்திரிகைகள் இவை அதிகப் பக்ஷமாக எத்தனைப் பக்கங்களை வெளியிடலாமென்பதும் பலவேறு அளவுகளையும், விலைகளையும் பொறுத்து நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது.

தனித்தனி இதழுக்குப் பதிலாக ஒரு வாரத்தில் இவ்வளவு பக்கங்களுக்கு மேல் வெளியிடக் கூடாதென்று தினசரிகளுக்கும் ஒரு மாதத்தில் இவ்வளவு பக்கங்களுக்கு மேல் வெளியிடக் கூடாதென்று வாரப் பத்திரிகைகளுக்கும் ஏற்பாடாகியிருக்கிறது.

வாராந்த அதிக பக்ஷம் சம்பந்தப்பட்ட மட்டில், தினசரிப் பத்திரிகைகளின் விசேஷப் பதிப்புகள் அதிகப்படியான வெளியீடுகளாகக் கருதப்படும்.

தினசரிப் பத்திரிகைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் பத்திரிகைகளை வெளியிட்டாலும் அல்லது விசேஷ வாராந்திர வெளிவீடுகளை வெளியிட்டாலும் அவை சம்பந்தமாக உத்தரவைப் பிரத்யேகமாகக் கவனிக்கும்படி இந்திய சர்க்கார் கோருகின்றனர். தங்கள் பிரத்தியேக வாராந்திர வெளியீடுகளைத் தனிப்பட்ட பத்திரிகைகளாகப் பதிவு செய்துள்ள பத்திரிகைகளுக்கு அவை சம்பந்தமாகப் பிரத்யேகமாக மாதாந்திர அளவுப் பிரகாரம் பத்திரிகைக்காகிதம் கிடைக்கும். தனிப்பட்ட பத்திரிகைகளாகப் பதிவு செய்துகொள்ளாத பத்திரிகைகளைக் காட்டிலும் மேற்படி அளவு அதிகப் படியாகக் கிடைக்கும்,

1942-ம் வருஷம் ஏப்ரல் 30-ந் தேதியுடன் முடிவான 12 மாதங்களில் வாரமொன்றுக்கு ஏழு நாட்களில் சகஜமாகப் பிரசுரிக்கப்பட்டு வந்த பத்திரிகைகள் தங்களுடைய வெளியீடுகளில் ஒன்றை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுவதில் பெயர்களில் அவசியமான மாறுதலுடன் இந்திய சர்க்காருக்கு எவ்வித ஆக்ஷேபணையுமில்லை. அப்படிச்செய்தால் மேற்படி சௌகர்யம் அவற்றிற்குக்கிடைக்கும். ஆனால் அவை இவ்வருஷம் ஜூலை முதல் தேதிக்குள் ரிஜிஸ்தர் செய்துகொள்ள வேண்டும்.

பத்திரிகைக் கட்டுப்பாடு உத்தரவு இவ்வருஷம் ஜூன் முதல் தேதியிலிருந்து அமுலுக்கு வருமென கெஜட் அறிக்கை ஒன்று கூறுகிறது.

* * * *

பத்திரிகைகள்-ஸர்க்கார் தொடர்பு

இப்பொழுது யுத்த நெருக்கடி முற்றி வருவதால் தனிப்பட்ட விஷயங்களில் தங்களுடைய ஆலோசனைக் கமிட்டிகளைக் கலந்தாலோசிக்கும் பொறுப்பினின்றும் விலகி நடக்க சர்க்கார்களுக்குச் சுதந்திரம் இருக்க வேண்டுமென்ற தங்கள் யோசனைப்படி-தற்காலிகமாக வாவது-நடப்பதில்லை என்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

இந்திய சர்க்கார் உள்நாட்டிலாகாவிடமிருந்து இம்மாதம் 11-ந் தேதி அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டுத் தலைவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் மேற் கண்டவாறு உறுதி கூறப்பட்டிருக்கிறது. 7, 8-ந் தேதிகளில் மேற்படி மகாநாட்டின் தலைவர் சர்க்காருக்கு எழுதிய கடிதங்களுக்குப் பதில் என்ற முறையிலேயே மேற்படி கடிதம் விடுக்கப்பட்டது. சர்க்கார் உத்தேசத்தைப் பற்றிப் பத்திரிகாசிரியர்கள் மகா நாட்டின் நிரந்தரக் கமிட்டிக் கூட்டத்தில் நீண்ட நேரம் விவாதம் நடந்ததற்குப் பிறகே தலைவர் மேற்படி கடிதங்களை எழுதினர்.

இம்மாதம் 6-ந் தேதி சர்க்கார் மேற்படி மகாநாட்டுத் தலைவருக்கு ஒரு கடிதம் அனுப்பினர். பத்திரிகை ஆலோசனைக் கமிட்டியின் பிரயோஜனத்தை அங்கீகரிப்பதாகவும், எனினும் இப்பொழுது நிலைமையில் மாறுதல் ஏற்பட்டிருப்பதால் அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியுடன் செய்துகொண்ட ஒப்பந்தப் பிரகாரமான நடைமுறையைப் பூரணமாக அனுஷ்டிக்க இனிச் சாத்தியப்படாதென்றும் சர்க்கார் தெரிவித்தனர்.

இக்கடிதத்தைப்பற்றி நிரந்தரக் கமிட்டி விவாதித்தது. பிறகு தலைவர் சர்க்காருக்கு ஒரு கடிதம் எழுதினர். நெருக்கடி என்ற பெயரால் தற்போதைய நடைமுறையில் தலையிடுவது ஸர்க்காருக்கும் பத்திரிகைகளுக்குமிடையே அதிக ஒத்துழைப்பு இருக்க வேண்டிய சமயத்தில் அத்தகைய ஒத்துழைப்பு இருக்குமென்பதை உறுதி செய்வதாக இல்லை என்றும், பொது ஜன உறுதியும். கட்டுப்பாடும் குலையாமலிருக்க மேற்படி ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப் பட்டது. சாதாரண விஷயங்களுக்குக்கூட இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் 41 (1) வது விதியை அனுஷ்டிப்பது முற்றி வருவதைக் கமிட்டி பலமாகக் கண்டித்து தராதரமின்றி இங்ஙனம் தீவிர நடவடிக்கையில் இறங்குவதன் காரணமாகப் பத்திரிகைகளின் அநுதாபமும், நல்லெண்ணமும் கிடைக்காமலே போய்விடலாமென்றும் ஆகவே நடைமுறையிலிருந்து சர்க்கார் பூராவாகவோ அன்றிச் சொற்ப அளவிலோ விலக உத்தேசிப்பது சரியான யோசனையாகாதென்றும் கமிட்டி எடுத்துக் காட்டியது.

மத்ய கிழ்த்திசை மந்திரி

மத்ய கிழ்த்திசை பகுதிக்காக புதிதாக நியமிக்கப் பட்டிருக்கும் மந்திரி மிஸ்டர் ரிச்சர்ட் கேஸி. இவர் சமீபத்தில் கெய்ரோ வந்த போது இந்தப் படம் எடுக்கப்பட்டது கெய்ரோவில் இவர் தமது புதிய பதவியை ஸ்வீகரித்தார்.

ஐரோப்பியச் செய்திகள்

ரஷ்யா மீது யுத்தம்

ருஷியாவில் டார்னெட்ஸ் அரங்கத்தில் ஜெர்மானியர் இருந்து 20 லக்ஷம் துருப்புகளுகளுடன் யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். 24 யந்திர சாதனப் படைகள் அடங்கிய ஒரு பெரிய ராணுவ இயந்திரத்தை ஜெர்மனியர் அப்பிரதேசத்தில் உபயோகித்து வருவதாக மாஸ்கோவிலிருந்து வந்துள்ள செய்திகள் கூறுகின்றன. வடபக்கத்தில் நீப்ரோ—பெட்ரோகஸிலிருந்து கர்ச் தீபகற்பம் வரையில் 250 மைல் தூரத்திற்கு யுத்த அரங்கத்தை ஏராளமான காலாட்படைகளுடனும் சுமார் இரண்டாயிரம் முன்னேறித் தாக்கும் விமானங்களுடனும் கடுமையாகத் தாக்கி வருகிறார்கள். லெனின்கிராட் முனையில் ருஷியர்கள் முன்னேறித் தாக்கி வருவதாகவும், ஸ்மாலன்ஸ்க் முனையில் ஜெர்மன் துருப்புகள் நடமாட்டம் அதிகமாக விருப்பதாகவும், சமீப காலத்தில் மத்திய முனையில் ருஷியர்கள் பலமாகத் தாக்கப்படலாமென்றும் அபிப்பிராயம் இருக்கிறது.

* * * *

கெர்ச்சில் தாக்குதல்

இம் மாதம் 8-ந் தேதி கிரிமியாவிலுள்ள கெர்ச் தீபகற்பத்தில் ஜெர்மன் ருமேனியத் துருப்புகள் பலமான விமானப் படைகளின் உதவியைக்கொண்டு தாக்குதலை ஆரம்பித்து விட்டன. யுத்தம் தீவிரமாக நடந்து வருகிறது.

* * * *

நாஸிக் கூற்று

கெர்ச் தீபகற்பம் ஜெர்மன் வசமானதாகக் கூறலாம் என்று பொருள்படும்படி ஜெர்மன் ராணுவ அறிக்கையொன்று வெளியாகியிருக்கிறது.

ஸோவியத் அறிக்கை கூறுவதாவது:—கெர்ச் தீபகற்பத்தில் எதிரிகளின் அதிகபலம் காரணமாக ரஷ்யத் துருப்புகள் புதிய இடங்களுக்குப் பின்வாங்கின. கெர்ச்சில் போர் முடிந்துவிட்டதாகவும், ஏராளக் கைதிகளையும் பீரங்கிகளையும் பிடித்ததாகவும் ஜெர்மனியர் கூறுவது பொய். எதிரிகளுக்கு ஏசாளமான சேதம் விளைத்துக்கொண்டு ரஷ்யர் கட்டுப்பாடாகப் பின் வாங்குகின்றனர்.

கார்காவ் பகுதியில் நமது துருப்புகளே தாக்கி, முன்னேறி வருகின்றன. ஓர் ஊரில் பாதி கைப்பற்றப்பட்டது.

(28-ம் பக்கம் பார்க்க)

“நான் கலகக்காரன் அல்ல”

கோகலே ஹாலில் ஒரு பெரிய கூட்டத்தில் ஸ்ரீமான் ஸி. ஆர். தமது கருத்தை விஸ்தரித்து ஒரு பிரசங்கம் புரிந்தார்.

வாதம் வலுவூட்டும்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

தீர்மானம் தோற்றுவிட்டது. தீர்மானம் எழுப்பிய பிரச்னை தீரவில்லை. சத்துள்ள தீர்மானம் என்பதற்கு அதுவே சாக்ஷி. காங்கிரஸ் வட்டாரங்களில் கவலையும் கலக்கமும் கண்கூடு. வாதத்தை வெல்ல வேகம் காணுது. வாதத்தை அடக்கக் காய்தாவும் கட்டுப்பாடும் உதவாது. தீர்மானம் தோற்றதில் ஆச்சர்யமில்லை. தோற்றவர் தோல்வி காணவில்லை. ஆச்சர்யம் அது தான். வெற்றிக்குறிகளே ராஜாஜியின் கண்ணுக்குப் புலப்படுகின்றன. விஷயம் அறிந்தவர் தன்னை ஆதரிப்பர் என்ற நம்பிக்கை அவருக்கு; விளக்கம் கண்டவர் தன்னை அநுசரிப்பர் என்ற தைர்யம் அவருக்கு; பிரசாரத்தில் இறங்கி விட்டார்.

பிரசாரம்செய்ய அவருக்கு உரிமையுண்டா? உண்டு. அதையே அன்று கோகலே ஹாலில் நன்ருக விளக்கிக் கூறினுர். காங்கிரஸ் தீர்மானங்கள் இருவகைப் பட்டவை. ஒன்று அபிப்பிராயத்தை வெளியிடுவது; மற்றென்று அநுஷ்டானத்தை குறிப்பிடுவது. அபிப்பிராயத்தை மாற்ற காங்கிரஸ்காரர் முயலலாம். அநுஷ்டானத்தை மறுக்க முயல்வதற்கில்லை. அபிப்பிராயம் மாறும்போது அநுஷ்டானமும் மாற நேரிடும். தனிப்பட்ட சத்தியாக்கிரஹம் கைவிடப்பட்டதை இதற்கு சிறந்த உதாரணமாகக் கூறலாம். சாதாரண மக்கள் நுட்பமான வேற்றுமைகளை அறிந்து கொள்வது எளிதல்ல. விவகாரப் பிரியர்கள் ஒழுக்கக் குறைவு ஒன்றுமில்லை என்று அறிந்து கொண்டால் போதும்.

காங்கிரஸின் சக்தியையோ செல்வாக்கையோ குறைக்க ராஜாஜி கிளம்பவில்லை; பலப்படுத்தவே பிரயாசைப்படுகிருர்.

காங்கிரஸின் பலம் மக்களுடைய ஆதரவைத் தழுவியது. அந்த ஆதரவை வலுப்படுத்தவேண்டும். பூரண வலுப்பெற்ருல் தான் சுயராஜ்ய சித்தி சாத்தியம். அதற்கு வழியென்ன? காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமையை முக்கியமாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். குறிப்பிட்டு பல வருஷங்கள் ஆகியும் ஒற்றுமை காணவில்லை. பரஸ்பர நம்பிக்கையோ நல்லெண்ணமோ பிறக்கவில்லை. வேற்றுமைகளே வளர்ந்து வந்திருக்கின்றன. சுதந்திர வாழ்வுக்கு விக்னம் விளைவித்து வருகின்றன. தோஷம் யாருடையது என்பதை ஆராய்வதில் கார்யமில்லை. நிலைமை திருந்த வேண்டும். அதுவே பிரதானம்.

முஸ்லிம் லீகுடன் சமரஸம் செய்துகொள்ள வேண்டும் என்கிருர் ராஜாஜி. காங்கிரஸ் அதை ஆக்ஷேபிக்கவில்லை. சமரஸம் பேசவும் முயன்றது. பலிககவில்லை. எந்த வழியில் சென்ருல் சமரஸம் சாத்தியம் என்பதைக் காட்டுகிருர் ராஜாஜி. அதையும் காங்கிரஸ் ஆக்ஷேபிப்பதற்கில்லை. பழய தீர்மானங்களில் மறைமுகமாக இருந்தவையே நேர்முகமாக எழுப்பப்பட்டிருக்கின்றன. பிரிவி

இன்னும் ஏன் வரவில்லை?

“மித்திரன்” ஆசிரியர் ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன், டாக்டர் பி. சுப்பராயன் முதலியவர்கள் கோகலே ஹாலில் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியின் வருகைக்காக கார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

தள் எழுதிய புத்தகங்களைக் கரைத்துக் குடித்தவர் நான் புரொபஸர் ஆண்ட்ரூஸ் என்பவரின் ப்ரியசிஷ்யன், பிற்காலத்தில் பிரசித்தி பெற்ற சார்லி ஆண்ட்ரூஸுக்கும் இவருக்கும் சம்பந்தம் கிடையாது என்பதை மறக்காதீர்கள். புரொபஸர் ஆண்ட்ரூஸ் கூடமில் எழுதிய புத்தகங்களை மிகவும் மதித்தவர். விஷ்ணு நாராயணரின் வியாசங்களைப் பன்முறை அவர் என்னிடம் பாராட்டிப் பேசியதுண்டு. மில், மற்றும் அவர் வழியைப் பின்பற்றியவர்கள் எழுதிய புத்தகங்களைப் படிப்பதில் எனக்கு ருசி பிறக்கும்படிச் செய்தவர் புரொபஸர் ஆண்ட்ரூஸ் தான். சில வருஷங்களுக்கப்பால் எனக்கும் விஷ்ணு நாராயணதாருக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அவருடன் மில், ஸ்பென்ஸர், ஹக்ஸ்லி, மாத்யூ ஆர்னுல்ட் முதலியோர் வெளியிட்ட கருத்துகளைப பற்றி பல சமயங்களில் நான் சர்ச்சை செய்திருக்கிறேன். இதன் காரணமாக அந்தக் கருத்துகள் யாவும் என் உள்ளத்தில் குடிகொண்டுவிட்டன.

தொழில் ஆரம்பம்

கலாசாலைப் படிப்பு பூர்த்தியானதும் 1896-ல் மோரடாபத்தில் நான் நியாயவாதத் தொழிலை நடத்த ஆரம்பித்தேன். ஒரு கிரிமினல் வழக்கில் ஆஜராக பண்டிட் விஷ்ணு நாராயண தார் அங்கு வந்தார்; என்னுடன் அவர் சில தினங்கள் தங்கியிருந்தார். அவர் என்னுடன் தங்கியிருந்த இரண்டு வாரகாலமும் எனக்கு மிகவும் இன்பகரமாகவே இருந்தது. அவர் என்னுடன் தங்கியிருந்தபோதே நான் அலஹாபாத்திற்கு வந்து தொழில் நடத்தத் தீர்மானித்தேன். மோரடாபாத்தில் எனக்கு அத்ருப்தி ஏற்பட்டது.

ஐக்கிய மாகாண ராஜீய வாதிகளில் பண்டித மாளவ்யா தான் சிறப்புடன் சோபிப்பார் என்று எதிர் பார்க்கப்பட்டது. அவரது திடமான ஆசார முறைகள் மாறுதல் விரும்பாதவர்களுக்கு திருப்தியாயிருந்தன. சுதந்திரத்தைக் கோரி அவர் செய்த உருக்கமான பிரசங்கங்கள் யுவர்களைத் திருப்தி பண்ணின. அவரது உயர்ந்த நடத்தை எல்லோருடைய மதிப்பையும் அவரிடம் சமர்ப்பித்தது.

அலஹாபாத் வதந்தி

அலஹாபாத்தில் என் வாழ்க்கை ஆரம்பித்ததைப் பற்றியும் இங்கு நான் சந்தித்த பலரைப் பற்றியும் பிரஸ்தாபிக்கு முன் ஸர் ஸையத் ஆமத் கானையும் அவரது பிரசித்தி பெற்ற புதல்வர் மிஸ்டர் மாமூத்தையும் குறித்து சில வார்த்தைகள் நான் கூற வேண்டும். எனது பாட்டனுர் ஸர் ஸையது ஆமத் கானின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர். சிப்பாய்க்கலகத்தின் போது பிஜ்னேரில் இருவரும் ஸர்க்கார் உத்யோகத்தில் இருந்தனர்: உத்தியோகத்தை விட்டு விலகிய பின், அவர்கள் அந்யோந்யமாகவே இருந்தனர். எனது பாட்டனுருடன் நான் பல தடவைகள் அலிகாருக்குப் போய் ஸர் ஸையத் ஆமத் கானுடன் தங்கியிருந்திருக்கிறேன். அங்கு அந்நாளில் முஸ்லிம் சமூகத்தில் பிராபல்யம் பெற்ற ஹாலி, மோஷின் உல் முல்க், விகார் உல் முல்க் முதலியவர்களைச் சந்தித்தேன். எனது பாட்டனுரும் நானும் ஹிந்துக்கள் என்பதும் அவர்கள் முஸ்லிம்கள் என்பதும் எங்களது தொடர்பை ஒரு விதத்திலும் பாதிக்க வில்லை. ஸர் ஸையது எத்தகைய மேதாவி என்பதை அப்போது தான் நான் கண்டு கொண்டேன். அவரது கிருஹத்தில பெர்ஸிய உருது கவிதைகளைப்பற்றி மிகவும் ரசமாக பலர் பேசுவதை நான் கேட்டேன். இப்போதும் எனக்கு அதில் இருக்கும் ப்ரீதி அதிகம்: இந்து சரித்திரம், பழைய டில்லி இவற்றைப்பற்றியெல்லாம் அவர்கள் பேசுவது எனக்கு இன்பமளித்தது. ஸர் ஸையதுக்கு சமமாக எவரையும் குறிப்பிடமுடியாது! அப்பெரியார்களது பேச்சுகளில் சதா ஹாஸ்யம் நிரம்பியிருந்தது, மிஸ்டர் மாமூத்தும் அடிக்கடி பேச்சில் கலந்துகொள்வார். எவரிடம் அதிக ஆச்சர்யம் கொள்வது? தகப்பனுரிடமா தனயனிடமா என்பதில் எனக்கு அப்போது அதிக சங்கடம் ஏற்படும்.

ஸ்ரீ ரானடே

இந்த இடத்தில் இந்திய ராஜீய சமூகப்பிரச்னைகள் விஷயத்தில் உருவான யோசனைகளையும் நிஷ்பக்ஷபாதமான அபிப்பிராயத்தையும் ஒவ்வொருவரும் எவரிடமிருந்து எதிர்பார்த்தனரோ அவரையும் குறிப்பிட வேண்டும். அவர் தான் ஸ்ரீ ரானடே: இந்தியாவில் தோன்றிய மகோன்னதமான மேதாவி: சிந்தா சக்தி நிரம்பிய நிபுணர். அந்நாளில் அவர் எழுதிய ஒவ்வொரு வியாசத்தையும் நான் மிகுந்த ஆவலுடன் படித்தேன். 1899-ல் லக்ஷ்மணபுரி இந்திய சமூகச் சீர்திருத்த மஹாநாட்டில் அவர் செய்தபிரசங்கத்தை நேரில்கேட்டேன்: அப்போது ஹிந்து-முஸ்லிம் கலாஸாரத்தைப்பற்றி அவர் பிரஸ்தாபித்தது கூடியிருந்தவர் பிரமிக்கத்தக்கதாயிருந்தது. அந்தப் பிரசங்கத்தை இப்போது அச்சிடுவது எவ்வளவு நலமாயிருக்கும்!

ஜஸ்டிஸ் மாமூத்

என் தொழிலை ஆரம்பித்த பின்புதான் மிஸ்டர் மாமூத்துடன் நான் நெருங்கிப் பழகினேன். அலஹாபாத் ஹைக்கோர்ட்டு நீதிபதியாயிருந்து அவர் அளித்த தீர்ப்புகளையெல்லாம் நான் பல விசைகள் படித்தேன். சட்ட புத்தகங்களை எப்படிப் படிப்பது, எந்த புத்தகங்களைப் படிப்பது, எவற்றைப் படிக்கக் கூடாது என்பதையெல்லாம் அவர் எனக்கு விவரித்தார். சென்ற 70 அல்லது 80 வருஷ காலத்தில் இந்தியாவில் உதித்த சொற்ப புத்திமான்களுள் மிஸ்டர் மாமூத்தும் ஒருவர். சட்டத் துறையில் மட்டும் அவர் உன்னத ஸ்தானம் வஹிக்கவில்லை. நம் தேசத்தைத் தவிர இதர தேசத்திய சரித்திரத்தைப்பற்றியும், மற்றும் தத்துவ விஷயங்களைப் பற்றியும் அவர் பேசுவதைக் கேட்டால் தான் அவரது திறமை புலனுகும். அவருக்கு கவிதையில் அதிக மோகம் இருந்தது; டென்னிஸன் எழுதிய, ஞாபகார்த்தம் என்ற கவிதையில் 70 பாடல்களை அவர் மனதிலிருந்து ஒப்புவித்தது. எனக்கு இன்னும் ஞாபகத்தில் நிற்கிறது; அவர் ஒரு சிறு பிழையும் செய்யவில்லை. பிர்தூஸியின் ‘ஷாநாமா’விலிருந்தும் மற்றுமொரு சமயம் அவர் இவ்விதம் பாடல்களை ஒப்புவித்தார். ஒரு பண்டிதர் போல் ஸ்வரப் பிழையின்றி அவர் ராமாயண ஸ்லோகங்களை வாசித்தது எனக்கே ஆச்சர்யமாக இருந்தது. இந்திய நீதிபதிகளுள், சென்னையில் இருந்த முத்துசாமி அய்யர், பாஷ்யம் அய்யங்கார், சுப்ரமணிய அய்யர் ஆகியவர்களுக்கும், கல்கத்தாவிலிருந்த துவாரகாநாத் மித்தர், ஆசுதோஷ் முகர்ஜி ஆகியவர்களுக்கும், அலாகாபாத்தில் இருந்த ப்ரமோத சரண் பானர்ஜிக்கும் தான் அவரை ஒப்பிடலாம், இதனுல் வேறு எந்த நீதிபதியையாவது குறைத்துக் கூறினேன் என்று எண்ணலாகாது. ஆங்கில நீதிபதிகள் கோஷ்டியில், சென்னையிலிருந்த ஹாலோவேயும் பம்பாயிலிருந்த வெஸ்ட்டும், கல்கத்தாவிலிருந்த பார்னஸ் பீகாக்கும், அலாபாத்திலிருந்த ஸ்ட்ரெயிட்டும் தான் அவருக்கு சமம் எனக் கூறலாம். மாமூத் தேகசுகத்தை அசட்டை பண்ணியதுதான் அவரது வாழ்வு சீக்கிரம் முடிந்ததற்குக் காரணமாம். அவரைப்போன்ற மஹா மேதாவி இம்மாகணத்தில் இதுவரை பிறந்ததில்லை என்றுதான் கூறவேண்டும். அவரது ஞாபகம் என்மனதில் நிலைத்து நிற்கிறது.

மற்றொரு முஸ்லிம் அறிஞர்

இதற்கப்புறம் எனக்கும் மற்றொரு முஸ்லிம் அறிஞரான மௌலானா ஷிப்ளிக்கும் சிநேகம் ஏற்பட்டது. நான்பின்பு சட்டமாக நிறைவேற்றப்பட்ட முஸலிம் வாக்பு அங்கீகாரமசோதாவைத் தயாரித்துக்கொண்டிருந்தபோது அவரை என்னிடம் ஜஸ்டிஸ் மிஸ்டர் காமத் ஹுஸேன் அனுப்பினுர். அவரால் பிரசுரிககப்பட்ட கடிதங்களில் என்னைப்பற்றிய பிரஸ்தாபம் காணப்படுகிறது. காலப்போக்கில நானும் அவரும் சிநேகர்களானேம். அவர் அலஹாபாத்திற்கு வந்தால், அலஹாபாத் ஹைக்கோர்ட் சீப் ஜட்ஜின் மாமனுரான தமது சகோதரர் வீட்டில் அவர் தங்குவது வழக்கம். நாங்கள் அடிக்கடி சந்திப்போம், எனக்கு அவரிடம் ப்ரீதி ஏற்பட்டது. சில வருஷங்களுக்குப் பின்பு கேம்பிரிட்ஜ் புரொபஸர் ப்ரவுன் அவரது அபார படிப்பைப்பற்றிப்பேசி, இந்திய ஸர்க்கார் அவரை சரிவரக் கௌரவிக்காதது விசனகரமானது என்றுர்.

ஜஸ்டிஸ் மாமூத்

பிரசித்த நியாயவாதிகள்

1898-ல் அலஹாபாத் ஹைக்கோர்ட்டில் நான் தொழில் நடத்த முற்பட்டதைப் பற்றி இப்போதும் பிரஸ்தாபிப்பேன். நான்தொழிலைஆரம்பித்த போது, பிரசித்திபெற்ற எழுபது வயது நிரம்பிய கான்லன், கீர்த்திமிகுந்த கிரிமினல் அட்வகேட் ஸர் வால்டர் கால்வின், கிரிமினல் அட்வகேட் என நற்பெயர் எடுக்க ஆரம்பித்த ஸர் சார்லஸ் அல்ஸ்டன், பண்டிட் சுந்தர் லால், முன்ஷி ராம் பிரசாத், ஸ்ரீ யுகேந்திர நா[illegible] சவுதரி, பண்டித மோதிலா[illegible] நேரு, இவர்களுக்கு முன் வ[illegible] படி நிற்பது என்ற கூச்சம் எனக்கே ஏற்பட்டு விட்டது. சுந்தர் லாலின் ஞானத்தைக் கண்டு நாங்கள் யாவரும் பிரமித்தோம். வாதம் சிறந்து விளங்காதாயினும் அதில் விஷயம் அதிகம். சுருக்கமாய்ப் பேசும் முன்ஷி ராம் பிரசாத் மிகவும் கௌரவமானவர். ஸ்ரீ யுகேந்திர நாத் சவுதரி போல் பிரகாசித்தவர் இல்லை; அவரது பாஷையும் பிரயோகமும் கேட்டவர் வியக்கும்படியானவை. பண்டித மோதிலால் நேரு அப்போதுதான் முதல் ஸ்தானத்தை எட்டி வந்தார். வந்தவர்களை இனிமையாய் வரவேற்கவல்லவர்; புத்தி கூர்மை அதிகம்; புதிய புதிய கட்சிகளை ஜோடிப்பதில் சமர்த்தர். நான் தொழிலை ஆரம்பித்த சில வருஷங்களுக்குள் சிவில் தரப்பில் அவரும் சுந்தர் லாலும் தான் மு[illegible]

இரண்டு தலைவர்கள்

தேனும்பேட்டை காங்கிரஸ் மாளிகையில் ஸ்ரீ ஸி. ஆர். பிரசங்கம் புரிந்த போது கனம் புலுஸு சாம்பமூர்த்தி தலைமை வகித்தார்.



னக் கொள்கையை சுய நிர்ணய சுதந்திரத்தில் அடங்கியிருப்பதாக எல்லைப்புற காந்தி குறிப்பிட்டிருக்கிறார். இன்னும் தெளிவாக மகாத்மா காந்தி ஒப்புக்கொண்டிருக்கிறார். கொள்கை அளவில் பிரிவினையை ஒப்புக்கொள்வது பிரிவினையை ஆதரிப்பதாகாது. பிரிவினையை யாரும் வேண்டவில்லை. தவிர்க்கவே எல்லாரும் முயல்வர். பரஸ்பர நம்பிக்கையில்லாத நிலைமையில் நியாயம் சொன்னாலும் தவருகவே படும். நமபிக்கை பிறந்தால் பிரிவினைப் பேச்சு தானுக மறைந்துவிட இடமுண்டு. இது தான் ராஜாஜியின் கக்ஷி.

இன்றைக்கு இந்தப் பிரச்னையை எழுப்பிக் குழப்புவானேன்? யுத்த நெருக்கடி தான் காரணம். யுத்தத்தில் பிறருக்கு உதவுவதா இல்லையா என்ற பிரச்னை மாறிவிட்டது. யுத்தம் இந்தியாவுக்கு வந்துவிட்டது. தற்காப்புக்கு வழி தேடும் நிர்ப்பந்தம் பிறந்துவிட்டது. இந்திய மக்கள் ஒன்றுபட்டால் தான் வழியுண்டு. அதிகாரம் மாறும்; மறுக்கமுடியாது. அதிகாரம் மாறினல், மாறும் அளவுக்கு லாபமுண்டு. இதை அறிவுறுத்தவே ராஜாஜி முயல்கிறார். அவர் ஏற்றுக்கொண்டுள்ள பணி மகா சிரமமானது. அறியாதவர்கள் கேவலமாகப்பேசலாம். அறிந்தவர்கள் தாங்கத் தயங்கலாம். காங்கிரஸுக்கு இன்று அவர் செய்யும் தொண்டுதான் பிரசஸ்தமானது. காங்கிரஸின் லக்ஷியமே பெரிது. கட்டுப்பாடு அதை கெடுக்கக்கூடாது. இடைப் பிரச்னைகளில் அடிப் பிரச்னையைக் காங்கிரஸ் பக்தர்கள் மறக்கக்கூடாது. ராஜாஜியின் பிரசாரம் காங்கிரஸுக்கு வலுவூட்டுமே யொழியக் குலைக்காது. அறிவை வளர்த்து அறிவை யொட்டி ஆராய்வதே மக்கள் விமோசனம் பெற வழி:

இன்றைய பிரச்னை

ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார் சென்ற வாரம் நகரில் தமது கருத்தை விளக்கி மூன்று பிரசங்கங்களைப் புரிந்தார். கோகலே ஹாலிலும், மயிலை ஒய். எம். ஐ. எ. கிளைச்சங்கத்திலும், தேனும்பேட்டை காங்கிரஸ் மாளிகையிலும் அவர் செய்த பிரசங்கத்திலிருந்து முககிய பகுதிகள் நம் நேயர்களுக்காக அடியில் பிரசுரமாகினறன.-

கட்டுப்பாடும் பிரசார உரிமையும்

"அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தீர்மானம் தோற்ற பிறகும் பிரசாரம் செய்யப் போகிறீர்களாமே. இது கூடாது, இது தேசத்திற்கு அபாயம், காங்கிரஸ் கட்டுப்பாடு குறைந்து போகும்" என்று என்னைப்பற்றி பேசப்பட்டு வருவதால் சிறிது குழப்பமும் கலவரமும் ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸ் அமைப்புக்குக் காரணமாக இருந்து, அதனுடன் நீண்ட காலமாகச் சம்பந்தப்பட்டு தொண்டு செய்து வந்த நான் காங்கிரஸ் தீர்மானத்திற்கு விரோதமாகப் பேசினல் பயம் உண்டாவது நியாயம், அதைத் தீர்ப்பது என கடமை: காங்கிரஸ் காரியங்கள் இரண்டு விதமாகும். ஒன்று அப்போதைக்கபபோது தேச நிலைமையைக் கவனித்து அபிப்பிராயம் தெரிவிப்பது; இரண்டாவது சில தீர்மானங்கள் செய்து இப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று தேசத்திற்குச் சொல்வது. அவ்விதம் செய்ய வேண்டிய கிரியாம்சைக்கு விரோதமாகச் செய்யும்படி நான் சொல்லப்போவதில்லை. அவ்விதம் தேசத்தில் யாரையும் கேட்கவும் போவதில்லை. மற்றொரு விஷயத்தையும் நீங்கள் கவனிக்க வேண்டும். தலைவர்கள் ஒன்று சேர்ந்து விவாதித்து ஒரு முடிவுக்கு வந்த பிறகு அதற்கு விரோதமான அபிப்பிராயம் கொண்டிருந்து அவர்களுடன் விவாதித்தவர் மேற்படி முடிவு காரணமாக உடனே தமது அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டுமென்பதில்லை. தகுந்த காரணங்கள் இருந்தால் மாறுமே தவிர, உடனே கருப்பு வெள்ளையாகாது, வெள்ளை கருப்பாகாது, காங்கிரஸ் முடிவுக்கேற்றபடி உடனே அபிப்பிராயம் மாருமவிருந்தால் அவன் காங்கிரஸ்காரனில்லை என்று புதிதாகக் காங்கிரஸில் சேர்ந்தவர்கள் தான் சொல்லுவார்கள். ரொம்ப நாளாக இருந்தவர்கள் சொல்லமாட்டார்கள்."

"காங்கிரஸ் ஒரு ஆயுதம்"

"ஸ்வராஜ்யம் அடைய காங்கிரஸ் ஒரு நல்ல ஆயுதம். அந்த ஆயுதத்தைத் துரு பிடிக்காமல் கவனித்துச் சரியாக உபயோகிக்கவேண்டும், காங்கிரஸ் சரியாக இருந்து வருகிறதா வென்பதை சதா சர்வகாலமும் கவனிக்க வேண்டும். நமக்கு காங்கிரஸே முடிவல்ல, ஸ்வராஜ்யம் தான் முடிவு. நான் காங்கிரஸைத் தாக்கவில்லை. அதைச் சரியாக உபயோகிக்கவேண்டுமென்கிறேன்." கோகலேஹால் பிரசங்கத்தில்.

* * * * *



த. நா. கா. கமிட்டி

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக் கமிட்டி சமீபத்தில் கூடியபோது அகில இந்தியக கமிட்டித் தீர்மானததை ஆதரித்தது இக்கூட்டத்தில் ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியாரும் விசேஷ அழைப்புக்கிணங்கி பிரசன்னமா இருந்தார். ஸ்ரீ கே. காமராஜ் தலைமை வகித்தார்.

யுவர்கள் மஹாநாடு

சென்ற வாரம் ஜிஞ்ஜியில் யுவர்கள் வருஷாந்த மகாநாடு நடைபெற்றது. ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அச்சமயம் தலைமை வகித்தார். அவர் 51 காளைகள் பூட்டிய ரதத்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.



"நான் கலகக்காரன் அல்ல"

"கலகக்காரன் என்று என்னை சொல்வது தவறு. காங்கிரஸ் விரும்பாத ஒரு காரியத்தைச் செய்யும்படி நான் உங்களைக் கேட்கவில்லை. காங்கிரஸ் உங்களைச் செய்யக்கோரும் எந்தக் காரியத்தையும் செய்யவேண்டாம் என்றும் நான் சொல்லவில்லை. விஷயத்தை உள்ளபடிச் சிந்தனை செய்து பாருங்கள் என்றும் அதன் மீது அபிப்பிராயம் வளர வேண்டுமென்றும் தான் நான் சொல்லுகிறேன். அந்த அபிப்பிராயத்திற்குச் சாதகமாகக் காங்கிரஸின் மனதை மாற்ற விரும்புகிறேன். காங்கிரஸ் ஒரு பாஸிஸ்டு கக்ஷி ஸ்தாபனமல்ல. அது பலாத்காரத்தினுலும் பயமுறுத்தலினுலும் தனது காரியத்தைச் சாதித்துக்கொள்ளும் ஸ்தாபனமல்ல. ஜனநாயகக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட பொது ஜன அபிப்பிராயம்தான் காங்கிரஸ் ஸ்தாபனத்தின் அஸ்திவாரமாகும். காரிய திட்டத்தைப்பற்றி எதிர்பிரசாரம் செய்வது தப்பு. அது விஷயத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கு முறையும் அவசியம் வேண்டும். ஆனல் அபிப்பிராயத்தைப்பற்றி விவாதிக்கவும், பிரசாரம் செய்யவும், வற்புறுத்தவும் ஒவ்வொரு நபருக்கும் பூரண சுதந்திரம் இருப்பதுதான் ஸ்தாபனத்திற்கே பலமான அம்சமாகும். அதைத்தான் நான் இப்பொழுது செய்து வருகிறேன். எல்லா அம்சங்களையும் நன்ருகப் பரிசீலனை செய்து பார்த்து ஜனங்கள் முடிவுக்கு வரவேண்டுமென நான் விரும்புகிறேன். முடிவைத் தீர்மானித்துக் கொண்டு நீங்கள் நினைப்பதை தைரியமாக வெளியிட வேண்டும். உங்கள் மனதில் தோன்றும் முடிவான எண்ணத்தை நீங்கள் வெளியிடப் பயந்தீர்களானல் அது ஆத்ம நாசத்தை உண்டுபண்ணும்."

ஒற்றுமையின் அவசியம்

'தேசத்தைப் பிரிக்கும் பிரச்னையைப் பிரஸ்தாபித்துக்கொண்டு ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றி வேதாந்தம் பேசுகிருரே என்று நீங்கள் நினைக்கலாம். ஆனல் பிரிவினைக்குச் சம்மதம் கொடுப்பதே ஒற்றுமையை உண்டாக்கும் என்பது என் உறுதி. பண்டைக்கால ஹிந்துக்களின் புத்திசாலித்தனமான வழியை நான் உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தில் ஒருவர் பிரிவினை செய்து கொள்ள விரும்பினல், அதற்கு யாதொரு காரணமும் கேட்காமலேயே அவர்கள் குடும்பத்திலிருந்து பிரிந்து விட ஹிந்து தர்ம சாஸ்திரத்தில் அனுமதி அளித்துள்ளார்கள். குடும்பத்திலுள்ள இதர மெம்பர்களின் அனுமதிகூட அதற்குத் தேவையில்லை. இப்படியே ஈஸ்வர உபாசனையிலும் மக்களுக்கு ஹிந்து மதத்தில் சுதந்திரம் உண்டு. ஈஸ்வரனை எல்லோரும் அவரவர்கள் இஷ்டப்படி உபாஸிக்கலாம் என்ற கொள்கை எவ்வளவு புத்திசாலித்தனமான தென்பதைக் கவனியுங்கள். இம்மாதிரிப் பிரிவினை சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்டிருப்பதால், நமது குடும்பங்கள் இன்னும் பலமாகவே இருந்து வருகின்றன. நமது மதமும் செழித்து ஓங்கி வளர்ந்துகொண்டிருக்கிறது. குடும்ப உதாரணங்கள் தேச விஷயத்தில் பொருந்தாதெனச் சிலர் கூறலாம். அது வேறு, இது வேறு என்று பொது உண்மையை ஆராயாமல் பிரித்துக் கொண்டு போனல் உண்மை விளங்காது. இதை உபதேசம் செய்கிறபடி. எல்லா விஷயங்களிலும் அடிப்படையாக விளங்கி வரும் உண்மையை நாம் மறந்து விடக் கூடாது. கட்டாயத்தைச் சிறிது உபயோகிக்க விடமிருக்கும் குடும்பங்களில் நாம் பிரிவினை அனுமதிக்கவேண்டியிருக்க, கட்டாயத்திற்கே இடமில்லாத பெரிய சமூகத்தினரிடையே நாம் எப்படி அதை அனுமதிக்காமலிருக்க முடியும்? அரசியல் பொருளாதாரப் பிரச்னைகள் யாவும் அவர்களுக்கும் நமக்கும் ஒன்ருகவிருக்கலாம். ஆனல் மதம், தினசரி வாழ்க்கை முதலியன சம்பந்தமாக அவர்களுக்கும் நமக்கும் சில பேதங்கள் இருப்பதை நாம் மறக்க முடியாது. இவைகளிருந்தபோதிலும், நாம் இந்தியாவை ஒரே தேசமாகச் செய்ய முடியும். ஆனல் ஒரு பெரிய சமூகத்தினர், ஒரே அரசாங்கத்தின் கீழ் தாங்கள் இருக்க இஷ்டப்படவில்லை என்று சொன்னல், அவர்களை நாம் கட்டாயப்படுத்த முடியாது. அது தவறு என்று நாம் கோபித்துக்கொள்வதில் பிரயோஜனமில்லை. (மயிலை ஒய். எம். ஐ. ஏ. கிளையில்.)

* * * * * * * * *

"என்ன இந்த பாகிஸ்தான்?"

"பாகிஸ்தானை உடனே கொடுத்துவிட வேண்டுமென்று நான் சொல்லவில்லை. என்ன இந்த பாகிஸ்தான்? பாகிஸ்தான் வேண்டாம் என்று இவ்வளவு நாள் நாமிருந்ததால் இதைப் பற்றி அதிகமாக யாரும் விசாரிக்கவில்லை. இத்தனை நாளாக விசாரித்தறியாத ஒரு விஷயத்தைக் 'கொடுத்துவிடப் போகிருேம் என்பதாக பயம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே பாகிஸ்தான் என்ன என்பதை தெளிவாக அறிந்துகொள்வது நல்லது. நான் சொன்ன தீர்மானம் என்ன? இந்தியாவில் சில இடங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாயிருக்கிருர்கள். அப்படி யிருக்குமிடங்கள் இரண்டு. வடமேற்கில் ஆப்கனிஸ்தானத்துக்கும் பஞ்சாபுக்கும் இடையிலுள்ள பிரதேசத்திலும், வங்காளத்துக்கு வடகிழக்கிலும் அவர்கள் பெரும்பான்மையாயிருக்கிருர்கள். தேசத்தில் மத்திய அரசாங்கம் ஒன்று ஏற்படவேண்டி யிருக்கிறது. அதில் முஸ்லிம்கள் சேர்ந்தால் மேற்படி இடங்களில் பெரும்பான்மையாயுள்ள இடங்கள் தேச நிர்வாகம் சம்பந்தப்பட்டவரையில் சிறுபான்மையாகிவிடுவார்கள். ஆகவே முடிவாக அரசாட்சி ஏற்படும்போது, மேற்படி இடங்களிலுள்ளவர்கள் தனித்துத் தானிருப்போம் என்று சொன்னல், நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டும் என்று முஸ்லிம் லீக் கேட்கிறது. இதுதான் பாகிஸ்தான் என்பது. நான் எனது தீர்மானத்தில் சொன்னது இதுதான். நமது அரசாட்சி ஏற்படும்போது முஸ்லிம்கள் தனித்துத்தானிருப்போமென்று சொன்னல் அப்படிச் செய்வது சரியல்லவென்று நாம் சொல்லியும் கேளாவிட்டால், அவர்கள் கோரிக்கையை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். பலாத்காரமாக அவர்களை நாம் நம்முடனிருக்கும்படி நிறுத்தமுடியாது. இது தான் நான் சொன்னது. சாம்பமூர்த்தி ஐயர் அவர்



ஆட்சேபக் கூட்டம்

ஸ்ரீ ஸி. ஆர். கருத்தை ஆக்ஷேபித்து மயிலை ரானடே ஹாலில் ஸ்ரீ சத்தியமூர்த்தி தலைமையில் ஒரு ஆட்சேபக் கூட்டம் நடைபெற்றது.

பம்பாயில் மஹாத்மாஜி

சென்றவாரம் மஹாத்மாஜி பம்பாய் வந்து சேர்ந்தார். ஸர்தார் படேல், ஜனுப் மேஹரலி, மிஸ் மணிபென் படேல், ஸ்ரீ புலபாய் தேசாய் முதலியோர் அவரை வரவேற்றனர்.



க்ள் என்ன சொன்னுர்? இத் தேசத்தின் சுதந்திரம் அடியிலிருந்து கிளம்பவேண்டும்; தனி மனிதனிடத்திலிருந்து ஊருக்கும் ஊரிலிருந்து பிராந்தியத்துக்குமாக சுதந்திர உணர்ச்சி ஏற்படவேண்டும் என்றுசொன்னுர். சுதந்திர ரஸம் அதற்கு மேல் ஏருமல் ஒரு பிராந்திய வாசிகள் தனித்துத்தானிருப்போமென்று சொன்னுல் அப்படியிருக்க அவர்களுக்கு உரிமையுண்டு. அதுநாம் கொடுக்கிற தான மாகாது. அவர்கள் பிறப்புரிமை அது. ஆகவே ஸ்ரீமான் சாம்பமூர்த்தி சொல்லுகிற தத்வம் நான் சொல்கிற காரியக்கிரமத்திற்குச் சரியானது. இதில் காங்கிரஸ்காரருக்கு ஒருவித சந்தேகமும் இருக்க முடியாது. இருந்ததும் கிடையாது."

மஹாபாரத படிப்பினை

"இதைப்பற்றி எங்தெந்த சமயத்தில் சர்ச்சை யெழுந்ததோ அப்பொழுதெல்லாம் மகாத்மாஜி என்ன சொல்லியிருக்கிருர். "ஒன்ருயிருப்பது நல்லது; பிரிவது பிராந்தி; ஆனுல் தனியாகத்தானிருப்பேனென்று முஸ்லிம்கள் சொன்லை நாம் சண்டை போட்ட வேண்டாம்" என்று சொல்லியிருக்கிருா. இதை நான் ஏதோ புதிதாகச் சொல்லிவிட்டேன், காங்கிரஸுக்குக் கலகக்காரனுகப் போய்விட்டேன் என்று பேசுகிருர்கள். காங்கிரஸில் யார் கலகக்காரன்? பலாத்காரத்தால் ஒருவனை அடக்கிவைத்திருக்கலாம் என்று சொல்லுகிறவன் கலகக்காரன். அதுவும் ஒரு பெரிய சமூகத்தை பலாத்காரத்தால் அடக்கி வைத்திருக்கலாமென்று சொல்லுகிறவன் பெரிய கலகக்காரன். அதுவும் இந்த பிளவு ஏற்படுவதென்ருல் எப்பொழுது ஏற்படவேண்டியதென்று சொல்கிருேம்? நாமும் முஸ்லிம்களும சேர்ந்து ஜயித்து திரும்பிவந்தும் அப்பொழுதும் அவர்கள் அவசியமென்று சொன்னுல்தான் இந்த பிரிவு. ஜயக்கொடி. ஒன்ருயிருந்தாலென்ன, இரண்டாயிருந்தால் என்ன? இரண்டாயிருந்தால் என்ன கெடுதல்? சண்டை வந்த போது ஒன்றுபடலாம், மற்ற விஷயங்களில் தனித்திருக்கலாம் என்று சொன்னுல் என்ன தவறு? யுதிஷ்டிரர் அந்தக் காலத்தில் "ஐந்து கிராமமாவது கொடு, தனியாயிருக்கிறேன்" என்று கேட்டார். துரியோதனன் மாட்டேனென்று சொன்னதால் மஹாபாரத யுத்தம் சம்பவித்தது. அந்தக் காலத்தில் கூட, கேட்டவனை தர்மிஷ்டனுகவும். கொடுக்கமாட்டேனென்று சொன்னவனை துரியோதனனுகவும் வைத்திருக்கிருர்கள் ஒரே குடும்பமாயிருந்தால் நல்லது. ஆனுல் தம்பியாயிருப்பவன் "எனக்கு குடிசை போதும்; நானும் என் பெண்சாதியும் தனியாக இருந்தால் தான் சந்தோஷமாக இருப்பேன்" என்று சொன்னுல் என்ன செய்வது? ஒரு வேளை அவனை "ஆனுல் சரி போ" என்று சொன்னுல் இன்னும் பத்து நாளைக்கு நம்முடன் இருந்தாலும் இருப்பான்."

உண்மை ஒன்று

"உலகத்தில் உண்மை ஒன்று. அது பலவிதமாகத் தோன்றலாம் இரண்டும் இரண்டும் நாலு; இரண்டு மாடும் இரண்டு மாடும் சேர்த்தாலும் நாலுதான். வேறு பிராணிகளையோ பதார்த்தங்களையோ இரண்டிரண்டாகச் சேர்த்தாலும் நாலுதான். சில பதார்த்தங்களை சில சமயங்களில் பிரிக்கலாம். சிலவற்றை எப்பொழுதும் பிரிக்க முடியாது. இதோ கடிகாரமிருக்கிறது, இதைப் பிரியென்று சொன்னுல் "வேண்டாம், இரண்டு பேருக்கும் உதவாது; கெட்டுப்போகும்" என்று சொல்லலாம். வேறு சில பொருள்களைப்பற்றி அப்படிச் சொல்ல முடியாது, பிரித்துத் தீர வேண்டுமென்ருல் பிரித்துத்தானுகவேண்டும். எல்லாம் சமய சந்தர்ப்பங்களைப் பொறுத்தது. பிரிட்டிஷாரோடு சேர்ந்திருக்கும் இந்தியா பிரிந்து போகலா மென்று கிரிப்ஸ் திட்டத்தில் சொல்லவில்லையா? அம்மாதிரி நமக்கும் நம்மை ஆள்பவருக்கும் பிரிவு ஏற்படும்போது முஸ்லீமகள் தனியாகத்தான் போவோமென்று சொன்னுல் நாம் ஒப்புக் கொள்ளவேண்டியது. இதற்கு ஒப்புக் கொண்டால் ஜப்பானியரை எதிர்க்க முஸ்லீம் லீகை ஒப்புக் கொள்ளும்படி செய்வது என் கடமை.

ஒற்றுமையும் பிரிட்டிஷ் ஆதிக்கியமும்

"தேச ஒற்றுமையைப்பற்றி காந்தி என்ன சொல்கிருர். பிரிட்டிஷ் சர்க்கார் போனுல்தான் ஒற்றுமை வரும் என்று சொல்கிருர். ஒற்றுமை வராவிட்டால் அவர்கள் போக மாட்டார்கள் என்று நான் சொல்கிறேன். பைத்தியம் தெளிந்தால் தான் கலியாணம். கலியாணமானுல்தான் பைத்தியம் தெளியும். காந்திஜி ரொம்ப கெட்டிக்காரர். நானும் கொஞ்சம் கெட்டிக்காரன்தான். பிரிட்டிஷ்காரனும் போய் வேறு நாட்டாரும் வராதிருந்தால் நமக்குள் ஒற்றுமை ஏற்படுமென்று காந்தி சொல்கிருர். அவர் சொல்வது பூரண ஒற்றுமை. அமிருதம் போன்றது. நான் சொன்னது என்ன? ஒற்றுமையில்லாவிட்டால் பிரிட்டிஷ்காரன் போகமாட்டான். ஜப்பான்காரனும் வராதிருக்க மாட்டான். அவர்களைத் தாக்க ஒற்றுமை வேண்டும். ஆனுல் அமிருதத்தைப் போன்ற ஒற்றுமை அதற்கு வேண்டியதில்லை. சாதாரண ஒற்றுமை போதும்! பிரிட்டிஷ்காரனைப் போகச் சொல்லக்கூடிய, ஜப்பானியரை எதிர்க்கக் கூடிய ஒற்றுமை ஏற்பட்டால், இது இரண்டு உபத்திரவமும் போய் அந்த பரிபூரண ஒற்றுமை ஏற்படும். இது என் கக்ஷி. இதில் ஜனங்களுக்குப் பரபரப்பு! கட்டுப்பாடு போய் விடுகிறதே என்கிருர்கள். என்ன கட்டுப்பாட்டுக்கு நான் அடங்கவில்லை. இரண்டு பெரிய சமூகங்களைப்பற்றிய ஒரு விஷயத்தில் ஒரு வழி நிச்சயமென்று தெரிந்தால் என்னைப் போன்ற ஒரு மனிதன் அதை பகிரங்கப்படுத்தாவிட்டால் காரியம் எப்படி நடக்கும்? இதற்கு இன்னொருவர் கூப்பிட்டுச்சொல்ல வேண்டியதில்லை அவர்களாகச் செய்ய வேண்டும். மதுவிலக்கை மகாத்மாஜியைக் கேட்காமலே சொன்னேன். தீண்டாமையை விலக்க வேண்டுமென்று எல்லாருக்கும் முன்பு சொன்னேன். இம்மாதிரி கலகக்காரன் நான். கஷ்டங்களை மேற்கொள்ளாமல் நான் சுலபமாகக் கீர்த்தியை சம்பாதித்துக் கொண்டு போயிருக்கலாம். நான் அப்படிச் செய்கிறவனல்ல."

வல்லவனுக்குப் புல் ஆயுதம்

"மத்திய சர்க்கார் இல்லாமற் போனுலென்ன? மாகாணசர்க்காரைக்கொண்டு காரியம் நடத்த முடியாதா? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். நமது கிராமத்தை யெல்லாம் ராஜ்யங்களாக்குவோம் ஜப்பானியர் முன்னேறவேண்டுமானுல் ஒவ்வொரு கிராமமாக எதிர்த்துப் பிடித்து, முன்னுல் எதிர்ப்பு பின்னுலும் அபாயம். என்ற ஸ்திதியில் தான் சண்டை போட வேண்டியிருக்கும். காங்கிரஸ் சம்மதமின்றி நீ தவருக மந்திரி சபையை திருடிக்கொண்டு போய்விடுவாயோ—என்று கேட்கிருர்கள். அப்படிச்செய்ய நான் உங்கள் முன்வருவானேன்? ஜன சம்மதமின்றி மந்திரி சபையை அமைத்தால் காரியம் தான் நடக்குமா? அதிகாரம் சம்பாதிக்க வழிகளிருக்கின்றன. எனக்கும் அது தெரியும். ஆனுல் அது பிரயோசனமில்லை. பிரிட்டிஷ்காரன் பேரிலிருக்கிற கோபத்தால் ஜப்பானுக்கு நாம் இடங்கொடுக்கக்கூடாது. கோபத்தினுல் ஆத்மநாசம் ஏற்படுகிறது. இவன் பேரிலிருப்பது பழய கோபம். நம்மை எதிர்நோக்கி வருவது புது நாசம். பழய கோபத்துக்காக புது நாசத்திற்கு ஆளாகக் கூடாது. முன்பு இப்படித் தான் செய்தோம். அந்த ராஜா போனுல் போகட்டும், பிரிட்டிஷ்காரன் நல்லவன் வரட்டுமென்று நினைத்தோம். இப்போது பலனை அனுபவிக்கிருேம். இந்த அவசரத்தால் இந்தப் பிரசாரம். காங்கிரஸை நான் அடித்தால்கூட என்னுல் தான் அதற்கு உதவி. மஹா விஷ்ணுவை ஒரு பக்தன் உதைத்தார். அதனுல் மார்பு கறையாயிற்று. அதை பெருமையாக மதித்து மஹா விஷ்ணு அந்தக் கறையைக் காப்பாற்றி வருகிருர். அம்மாதிரியான எதிர்ப்பு தான் இது. நான சொல்வதை ஒப்புக் கொண்டால் உங்களுக்கும் நன்மை தேசத்துக்கும் நன்மை.

* * * *

குடந்தையில் கும்பாபிஷேகம்





இம்மாதம் 7-ம் தேதியன்று காலை கும்பகோணத்தில் விசேஷ உத்சாகத்தினிடையே ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரஸ்வாமி கோவில் கும்பாபிஷேகம் சிறப்புடன் நிறைவேறியது. இந்த விழாவுக்காகதென்னுட்டின் பல பாகங்களிலிருந்து பல்லாயிரக்கணக்கில் பக்தர்கள் குழுமியிருந்தனர். இந்த கும்பாபிஷேகத்தை அமோகமான விதத்தில் நடத்திவைத்தார். திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண பண்டார சந்நிதிகள். ஆதீன கர்த்தரின் படம் இவ்வார இதழின் அட்டையில் பிரசுரமாகியிருக்கிறது,

இந்த விழா சம்பந்தமாக மற்ற படங்கள் இதே பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. இடது பக்கத்தில் மேல் படம் ஸ்ரீ ஆதி கும்பேஸ்வர ஸ்வாமி கோவிலின் ஆதி கோபுரத் தோற்றம். இது தான் கோபுர வாயில். இங்கு வெகு அழகாக ஒரு பந்தல் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. (இரண்டாம் படம்) கோபுரத்தின் தென் வாயிலான மொட்டை கோபுரம். இடது புறத்தில் பெரிய யாகசாலை அமைக்கப்பட்டிருப்பதையும் பல பக்தர்கள் கூடியிருப்பதையும் காணலாம். (மூன்ரும் படம்) இந்த கும்பாபிஷேக வைபவத்திற்காக ஸ்ரீ மஹாமஹக் குளத்திலிருந்து தீர்த்தம் பல வித மரியாதைகளுடன் கொண்டுவரப் படுகிறது. (அடியில் இருக்கும் படம்) கர்ப கோபுரத்தில் கும்பாபிஷேகம் நடக்கும் காட்சி. (போட்டோக்கள் பி. என். எ.)



பேடன் பவல் வேவுக் கதை

லார்ட் பேடன் பவல்

"நியாயவாதி"

எழுதியது

காலஞ் சென்ற பேடன் பவல் பிரபு சாரணியத்தின் பிதா என்பதை உலகம் அறியும். அவர் தனது இளமையில் ராணுவத்திலும் வேவு இலாகாவிலும் தனது நாட்டுக்கு அரிய சேவை புரிந்தார். அவர் தனது வேவு அனுபவங்களை விவரித்து ஒரு புஸ்தகம் எழுதியுள்ளார். அதில் பல ரஸமான சம்பவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு கூறுவோம்.

1

ஒரு சமயம் அவர் ஒரு அன்னிய நாட்டில் அமைக்கப்பட்ட ஒரு புதிய கோட்டையைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பிய வேவு இலாகாவால் அனுப்பப்பட்டார். அவர் அந்த மர்மக்கோட்டையின் சமீபமுள்ள ஊரில் ஒரு சத்திரத்தில் தங்கி தாம் மேற்கொண்டகாரியத்தில் எப்படி பிரவேசிப்பது என்று சிந்தனை செய்தார். அந்நாட்டின் சட்ட திட்டங்கள் மிகவும் கடுமையானவை. தாம் வேவு பார்க்க வந்திருப்பது நிரூபிக்கப்பட்டால் நீண்ட சிறைவாஸம் அந்த நாட்டில் தமக்கு சித்திக்கும் என்பதை அவர் நன்கு அறிவார்.

வேவு பார்க்க வரும் அன்னியரை விரட்டுவதில் கண்ணும் கருத்துமாயிருந்த கோட்டை ராணுவத்தாரை எப்படி ஏமாற்றுவது? அவர்களது கண்களில் மண்ணைத் தூவுவதற்கு பேடன் பவல் பூண்ட வேஷம் அவருக்கு நன்கு பொருந்தியிருந்தது. பிராணி நூல் சாஸ்திரியாக நடித்த அவர் தன் கழுத்தில் ஒரு நீண்ட வலையை மாட்டிக் கொண்டு, கையில் ஒரு பூதக் கண்ணாடியுடன் கோட்டையை நோக்கி கிளம்பினார். அதன் சுற்றுப்புறமுள்ள சோலைகளிலும், வயல்களிலும் பட்டுப் பூச்சிகளைத் தேடுவார் போல் போக்கு காட்டினார். வெகு சிக்கிரத்தில் அவருக்கு அநேக விதமான பட்டு பூச்சிகள் கிடைத்தன. அவற்றை தன் பையில் போட்டுக் கொண்டு மற்றும் வேறு நிறமுடைய பூச்சிகளைத் தேடித் திரியலானார். உண்மையில் அவரது நாட்டம் கோட்டையின்மீதும் அது சம்பந்தமான பாதுகாப்புகள்மீதும் அதில் அமைக்கப்பட்டிருந்த பீரங்கிகள்மீதும் இருந்தன. கோட்டையிலுள்ள உத்தியோகஸ்தர்கள் அவரை விசாரித்தனர். அவர் பிடித்த பூச்சிகளையும் அவர் தயாரித்த படங்களையும் பரிசிலனை செய்து விட்டு, அவர் ஒரு பூச்சி நூல் புலவர் என்று எண்ணினர். அவரால் வரையப்பட்ட சித்திரங்கள், பூச்சிகள் சித்திரங்களாக வே காணப்பட்டன. ஆனால் உண்மையில் அவை அக் கோட்டையின் வெவ்வேறு பாகங்களைக் குறிக்கும் படங்களேயன்றி வேறல்ல. பிராயம் வெளி வேஷத்தால் ஏமாந்த கோட்டை காவலாளிகளுக்கு இந்த உண்மை எப்படிப் புலப்படக் கூடும்.

தமது நாட்டுக்குத் திரும்பினபின் பேடன் பவல் தாம் கண்டறிந்த விஷயங்களை குறிப்பிட்டு ஒரு யாதாஸ்து தயாரித்தார். அந்த யாதாஸ்தும் அவரால் வரையப்பட்ட படங்களும் அரசாங்கத்தாருக்கு மிகவும் உபயோகமாக இருந்தன.

2

மற்றொரு சமயம் பேடன் பவல் வேறொரு நாட்டில் வேவு புரிவதற்காகச் சென்றார். அந்நாட்டிலுள்ள மலைப்பிரதேசத்து துருப்புகளுக்கு அளிக்கப்பட்ட ராணுவப்பயிற்சியை நேரில் அறிந்துகொள்ள விரும்பிய அவர் மலையை அடுத்த ஒரு ஊரில் தங்கினார். அதன் சமீபத்தில் தங்கியிருந்த ஒரு பட்டாளத்துக்கு ரகசியப் பயிற்சி அளிக்கப்பட்டுவந்தது.

மிகவும் உயரமும் தனிமையாயும் இருந்த ஒரு பாறையில் ஒளிந்துகொண்டு அவர் சற்று தூரத்தில் தாழ்ந்திருந்த குன்றில் அணிவகுத்து நின்ற பட்டாளத்தின் போர் அப்பியாஸங்களை கவனித்துக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்திற்குப் பின் பட்டாளத்தின் ஒரு பிரிவு அவர் இருந்த பாறையை நோக்கி வரலாயிற்று. அதைக் கண்ட அவர் பீதியடைய வில்லை; புத்தியை இழக்கவில்லை. சந்தர்ப்பத்துக்கு தகுந்தாப்போல் நடிப்பதில் நிபுணரான அவருக்கு தம்மையணுகிய படை வீரர்களை ஏமாற்றுவது ஒரு பிரமாதமா? தாம் கொண்டுவந்திருந்த ஒருநீண்டகாகிதத்தைஎடுத்தார் எழுதுகோலையும் வர்ணக் கருவிகளையும் பக்கத்தில் வைத்துக்கொண்டார். தம்மைச் சுற்றுமுள்ள இயற்கை காட்சியை சித்தரிக்கும் வேலையில் ஈடுபடலானார்.

சில நிமிஷங்களுக்குப் பின் அவர் பக்கம் வந்த படை வீரர்கள் அவரை ஓவியக்காரராகவே எண்ணினர். அவர்களது தலைவன் அவரை பரிவுடன் உபசரித்தான். அவருக்குச்சிற்றுண்டியும் வழங்கினான். அவனும் அவனது ஆட்களும் அங்கே வெகு நேரம் தங்கியிருந்தனர். தாம் எழுதிய சித்திரத்துக்கு வர்ணங்கள் தீட்டிக்கொண்டிருந்த மனிதர் உண்மையில் ஒரு வேவுகாரர் என்பதை அவர்கள் கனவிலும் சந்தேகிக்க மாட்டார்களன்றோ? அங்கே விச்ராந்தி செய்த அவர்கள் தங்களுக்கு அளிக்கப்பட்ட ராணுவப் பயிற்சியைப்பற்றி பேசிக்கொண்டிருந்தனர். அதை பேடன் பவல் கவனமாய் செவியுற்றுக்கொண்டிருந்தார், மூடு மந்திரங்களாய் மதிக்கப்பட்ட ராணுவ ரகசியங்கள் அவருக்கு நன்கு புலனாயின.

3

ஒரு ஐரோப்பிய வல்லரசு புது மாதிரியான பீரங்கியைக் கண்டுபிடித்திருப்பதாயும் அதை அதன் ராணுவம் உபயோகித்து வந்ததாயும் வதந்தி பரவியிருந்தது. அது விஷயத்தில் உண்மை தெரிந்து வருவதற்கு பேடன் பவல் அந்நாட்டுக்கு அனுப்பப்பட்டார்.

அந் நாட்டிலுள்ள ராணுவ உத்தியோகஸ்தர்கள் சிலரை அவர் அறிவார். உல்லாச யாத்திரையாய் வந்தவர் போல் நடித்த அவர் அவர்களுடன் தங்கி அளவளாவலானார். அவர்களுடன் நெருங்கிப் பழகிய அவர் அவர்கள் நடத்திய ராணுவ ஒத்திகைகளை நேரில் காண விரும்பினார். ஆனால் அதற்கு அவர் அனுமதிக்கப்படவில்லை. அவருக்கு மரியாதையும் மதிப்பும் காட்டிய அந்நண்பர்கள் எங்கள் ராணுவ ஒத்திகைகளை அன்னிய நாட்டார் யாரும் பார்க்கக்கூடாது. இது கண்டிப்பான விதி என்று கூறி அவரை தனியே விட்டு ஒத்திகைகளுக்குப் போவது வழக்கம். எவ்வளவு சிரமம் ஏற்பட்ட போதிலும் அதை பொருட்படுத்துவதில்லை என்று தீர்மானித்த பேடன் பவல் ஒரு நாள் ஒத்திகை ஸ்தலத்துக்குச் சென்றார். அதன் சுற்றும் நீண்ட பலகைகளால் மறைக்கப்பட்டிருந்தது. வெளி வாசலில் இரண்டு காவற்காரர்கள் ஆயுதபாணிகளாய் நின்றனர். அவர்களைக் கடந்து செல்ல முடியாது என்பதை அவர் நன்கு உணர்ந்துகொண்டார்.

எனினும் ஊக்கமான ஸ்வபாவத்தினரான அவர் சோர்வடையவில்லை. காவலாளிகளது கண்களுக்கு எட்டாத ஒரு இடத்தை யடைந்தார். அங்கேயுள்ள பலகையின் அடிபாகத்தை பெயர்த்து விட்டு உள்ளே நோக்கினார். ஒத்திகை ஸ்தலம் அவருக்கு நன்கு புலனாயிற்று. அங்கே நடைபெற்ற பீரங்கிப் பயிற்சியை கவனமாய்க் கண்ணுற்றார், அப் பீரங்கியின் பரிமாணம், அது உபயோகிக்க படும் முறை, அதன் சக்தி முதலியவற்றைப் பற்றிய உண்மைகள் அவருக்கு ப்ரத்யக்ஷமாயின.

ஒத்திகை பூராவையும் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைக்கவில்லை. ஏனெனில் சற்று நேரத்துக்குப் பின் காவலாளிகளில் ஒருவன் ரோந்து செல்லப்புறப்பட்டான். அவன் வந்துகொண்டிருந்ததை தூரத்திலேயே கண்டார் வேவுகாரர். நல்ல வேளையாய் அவர் தமது நிதானத்தையும் சூக்ஷ்ம புத்தியையும் இழக்கவில்லை. சரேரென்று பலகையை இருந்த இடத்தில் வைத்து மூடிவிட்டு தம்மிடமிருந்த சாராயப் புட்டியை எடுத்து, அதிலுள்ள சாராயத்தை தம் சட்டைமீது கொட்டிக்கொண்டார். அவர் வாயில் சாராயத் துளிகள் இருந்தன. போதையில் இருந்தவனைப்போல் அவர் தரையில் கிடந்தார், அவரை நெருங்கிய காவல்காரன் அவரது தோற்றத்தைக் கண்டு ஏமாறிச்சென்றான், குடி வெறியுடன் கிடந்த ஒருவரை அவன் லக்ஷியம் செய்வானா? உண்மையில் அவர் குடியரல்ல. அன்னிய நாட்டிலிருந்து வந்த வேவுகாரர் என்ற உண்மை அந்த மந்த மதியனுக்கு எப்படி புலப்படக் கூடும்."

4

வேறொரு சமயம் ஒரு அன்னிய நாட்டில வேவு புரிந்து கொண்டிருக்கையில் பேடன் பவல் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தனால் கைது செய்யப்பட்டார். அவரை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ற அவ்வுத்தியோகஸ்தன் அவரை சிறைக்கு அனுப்ப வேண்டும் என்று ஆவல் கொண்டான்.

போலீஸ் ஸ்டேஷனில் சிரம பரிகாரம் செய்து கொண்ட அவர் தாம் வேவுகாரனல்ல என்றும் பொழுது போக்குக்காக அந்த ஊருக்கு வந்த பிரயாணி என்றும் கூறினார். ஆனால் அவன் அதை நம்பவில்லை. அவர் மீது குற்ற வழக்குத் தொடர வேண்டும் என்று விரும்பினான்.

அமைதியுடனும் பொறுமையுடனும் உட்கார்ந்திருந்த அவர் "நான் சுருட்டுக்குடிப்பதில் உங்களுக்கு ஆக்ஷேபணையில்லையே?" என்று தம்மைக் கைது செய்தவனை வினவினார். அவன் இல்லை என்று தலையை யாட்டினான்.

உடனே அவர் தம் சட்டைப் பையிலிருந்து சுருட்டுகளை எடுத்து ஒவ்வொன்றாய் பற்ற வைத்து அவற்றின் புகையைப் பருகலானார். அவரது குற்றத்தை எப்படி ருஜுப்படுத்துவது என்பதைப்பற்றிச் சிந்தனை செய்துகொண்டிருந்த போலீஸ் உத்தியோகஸ்தன் அவர் சுருட்டு குடித்ததை லக்ஷியம் செய்யவில்லை.

உண்மையில் அவர் தன்னைக் காட்டிக் கொடுத்து தனது குற்றத்தை நிரூபிக்கக்கூடிய ருஜுக்களை சாம்பலாக்கிக் கொண்டிருந்தார். வேவு புரிகையில் தாம கண்ட விஷயங்களை அவர் காகிதங்களில் எழுதி அவற்றை சுருட்டுகளில் மறைத்து வைத்திருந்தார். அந்த ருஜுக்களை அவர் தமது குற்றத்தை நிரூபிக்க விரும்பிய அதே உத்தியோகஸ்தன் முன்னிலையில் சுருட்டுக் கொளுத்திக்கொண்டிருந்தார். அவர் முகம் புன்னகையுடன் விளங்கியது. அதில் தென்பட்ட பரிஹாஸத்தை அந்த முட்டாள் போலீஸ்காரன் எப்படி அறிந்துகொள்ளக் கூடும்?

முடிவில் அவர் குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்டார் என்பதை நாம் குறிப்பிட வேண்டியதில்லை.

5

ஐரோப்பாவிலுள்ள ஒரு நாட்டில் ராணுவ அதிகாரிகள் இரவில் யுத்தக்களத்தில் வெளிச்சமூட்டும் புதிய முறை ஒன்றை நடைமுதலுக்கு கொண்டு வந்திருந்தனர் என்றும் அது பரம ரகசியம் என்றும் தெரிய வந்தன, அந்த விஷயத்தை அறிந்துகொள்ளுவதற்காக பேடன் பவல் அந்நாட்டுக்குச் சென்றார்.

ராணுவ ஒத்திகை ஸ்தலத்துக்குள் அன்னியர்களை விடக்கூடாது என்று அதன் வெளியே காவல் புரிந்து கொண்டிருந்த சேவகர்களுக்கு கண்டிப்பான உத்தரவு இருந்தது. எனினும் அவர்களை ஏமாற்றுவது கடினமல்லவென்பதை பேடன் பவல் அறிந்துகொண்டார். அந்நாட்டு ராணுவ வீரன் உடையில் பிரவேசித்த அவரை காவலாளிகள் தடுக்கவில்லை. அவரும் ராணுவத்தைச் சேர்ந்தவர் என்றே அவர்கள் நினைத்தனர். யாதொரு தடையுமின்றி இரவு காலங்களில் அங்கே பிரஸன்னமாயிருந்த அவர் வெளிச்சம் ஏற்றப்படும் ரகசியத்தை தெரிந்து கொண்டார். ராணுவ ஒத்திகைகளையும் கவனிக்கலானார்.

ஒரு நாள் இரவு அந்த தேசத்து அரசர் ஒத்திகைகளைப் பார்க்க வரப்போவது அவருக்குத் தெரியவந்தது, அன்று தாம் கட்டாயம் அங்கே செல்ல வேண்டும் என்று அவர் தீர்மானித்தார். ஒத்திகைகள் ஸ்தலத்துக்கு அவர் செல்லுகையில் அரசரின் வண்டி வந்து கொண்டிருந்ததைக் கண்டார். அதிலுள்ளவர்கள் தம்மைக் கவனிக்கக் கூடாது என்று எண்ணி அவர் தமது முகத்தை மறைத்துக் கொண்டார்.

ஆனால் வண்டியிலுள்ளவர்கள் அவரது செய்கையைக் கவனித்து விட்டனர். அவர் மீது சந்தேகம் உதிக்கவே அவர் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார். தலை நகரத்துக்கு இட்டுச் செல்லப்பட்ட அவர் மீது பலமான மோசூல் வைக்கப்பட்டது.

உண்மையில் அவர் வேவு பார்க்க வந்தவரா இல்லையா என்பதை அதிகாரிகளால் நிஷ்கர்ஷை செய்ய முடியவில்லை. அந்த நிலையில் அவர் சிறையிலிடப்படாவிடினும் அவர் நடவடிக்கைகளை ராஜாங்க வேவகாரர்கள் கவனித்துக் கொண்டிருந்தனர். இது அவருக்குத் தெரியும்,

தமது அலுவல்களின் மீது மோசூல் செய்துகொண்டிருந்த உளவாளிகளை ஏமாற்றிவிட்டு தமது நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என்று அவர் முடிவில் தீர்மானித்தார். அவரிடம் மதிப்பு கொண்ட ஒரு அன்னிய நாட்டு உத்தியோகஸ்தன்-அவன் அந்த நகரத்திலுள்ள ஸ்தானிகர் காரியாலயத்தைச் சேர்ந்தவன்-அவருக்கு உதவியளிக்க சம்மதித்தான்.

ரயிலில் ஏறிக் கொண்டு ஊரை விட்டு ஓடுவதாக போக்குக் காட்ட வேண்டும் என்பதே பேடன் பவலின் யோசனை. அப்படி காட்டி விட்டு நதியில் தயாராய் இருந்த மோட்டார் படகில் ஏறிக் கொண்டு நாட்டை விட்டுச் செல்ல வேண்டியது என்று அவர் நிச்சயித்தார், அவரது நண்பன் உதவியால் அவருக்கு நதிக்கரையில் ஒரு மோட்டார் படகு அவரது ரகசிய பிரயாணத்துக்கு அமர்த்தப்பட்டது. ரயிலில் புறப்பட்டு பிரயாணம் செய்யப்போவதாய் அவர் சொல்லிக்கொண்டார். அது அவர்மீது மோசூல்செய்த வேவுகாரர்களுக்குத் தெரியவந்தது. ரயில் ஸ்தலத்தில் அவரைக்கைது செய்ய தயாராய் இருந்தனர். ஆனால் அவர் ரயில் வண்டியில் ஏறினால் தானே! மோட்டார் படகில் ஏறி யாருக்கும் தெரியாமல் நாட்டை விட்டு நீங்கினார். வெகு நேரமாகியும் ரயிலுக்கு அவர் வராதது கண்டு வேவுகாரர்கள் ஏமாற்றமடைந்தனர். தன்னை கைது செய்ய காத்துக் கொண்டிருந்தவர்களை ஏமாற்றி விட்டு மறைந்த அவரது திறமையை என்னென்று கூறுவது?

★

இந்த இதழில் பேடன் பவல் பிரபு செய்த வேலையைப்பற்றிய பிரமிக்கத்தக்க கதைகள் பிரசுரமாகியிருக்கின்றன. வெளிவந்திருக்கும் ஐந்து கதைகளும் மிகவும் ருசிகரமானவை. சித்திரமெழுதுவோன் போலும், குடிகாரன் போலும் அவர் நடித்து எதிரிகளிடமிருந்து தப்பியதுடன், அவர்களது ரகசியத்தை உளவறிந்து தமது நாட்டிற்கு அது பயன்படுமாறு செய்தது பெரிய சேவையாகும். அவர் சுருட்டு பிடித்த கதையும் படிப்பவர்களுக்கு ஆனந்தமளிக்கும்.

புதிய க்ரூய்ஸர் டாங்கி

"விமார்க்" என்ற பெயர் கொண்ட க்ரூய்ஸர் டாங்கிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன. இவை வெகு வேகமாக முன்னேறுவதுடன் எதிர்ப்பை மிகவும் திறமையாக சமாளிக்க முடியுமாம்: படத்தில் இந்த ரகத்தைச் சேர்ந்தவை இருப்பதைப் பார்க்கலாம்.

முதலில் தேறினர்



சென்ற வருஷம் நடந்த ஆர். எ. பரீட்சையில் இம்மாகாணத்தில் முதன்மையாகத் தேறிய செங்கோட்டை ஸ்ரீ எஸ். அனந்தக்ருஷ்ணன். இவருக்கு சென்னை சர்க்கார் வர்த்தகப் படிப்புப் பரிசு அளிக்கப்படும்.

அபார சக்திவாய்ந்த டானிக்!
S.K.M.
Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்
ஸித்தகல்ப
மகரத்வஜம்
60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.
விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151. (ஸ்தாபனம் 1915௵) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

பொறுமைக் கண்கள்

★

எல். வி. எஸ். மணி எழுதியது

ஆதவன் அப்பொழுது தான் அஸ்தமித்தான். இன்னும் இரண்டு மூன்று தினங்களே பௌர்ணமிக்கு இருந்ததால் சந்திரன் பிரகாசித்துக் கொண்டிருந்தான். டில்லியில் மொகலாய சக்ரவர்த்தி அக்பரின் அரண்மனைக்கடுத்த பூந்தோட்டம். சந்திரன் தன் கிரணங்கள் பட்ட அந்த அழகிய நந்தவனத்தை பொன்னுலானதோ என்று ஐயுறுவண்ணம் செய்துகொண்டிருந்தான். பூங்காவில் ஒரு பசும் புற்றரை, மரகத மேடை போலிருந்தது. அம்மேடையை மரங்களிலிருந்து விழுந்த பூக்கள் இன்னும் அழகுறச் செய்தன. புல்தரையின் நடுவில் உட்காருவதற்காக ஒரு அழகிய கற்பாறை இடப்பெற்றிருந்தது, உல்லாஸமாக உலவிக்கொண்டிருந்த . இளவரசர் ஸலீமும், நண்பன் நஸீமும் அம்மேடையில் வந்து உட்கார்ந்து அளவளாவிக்கொண்டிருந்தனர்.

"இளவரசே, இம்மாதிரி நாம் பேசிக்கொண்டே இருந்தால் நமக்கு பொழுது போவதே தெரியாது. , பிறகு இன்றைய நடனத்திற்குச் செல்ல நேரமாய் விடும்" என்று அன்று நடக்க விருந்த நடனத்தை ஞாபகப் படுத்தினன் நஸீம்.

"இந்தத் தென்றலேயும் சந்திரிகையையும் விட்டுப் பிரிய மனம் வரவில்லை. அவசரமானுல் நீ போ. என்னுல் சற்று பொருத்துத்தான் வர முடியும்" என்று அவன் செல்வதை விரும்பிய இளவரசன் கூறினன்.

"தெரியுமே! காரணமின்றி இவ்வளவு நேரம் இளவரசர் இங்கு தங்கமாட்டாரென்று. காதலியைச் சந்தித்து சீக்கிரம் சம்பாஷணைகளே முடித்துக் கொண்டு நாட்டியத்திற்கு வந்து விடுங்கள். இல்லையேல் சக்ரவர்த்தியின் சந்தேகத்திற்கு ஆளாக நேரும். நானும் வீட்டிற்குச் சென்று சீக்கிரம் வருகிறேன்" என்று சென்றுன் தோழன் நஸீம்.

தோழன் சென்றதும், எதிரிலிருந்து சிறிய குளத்தின் பளிங்கு போன்ற நீரில், நிஷ்களங்கமான ஆகாயத்தில் பிரகாசிக்கும் சந்திரன் ப்ரதிபலிப்பதைக் கண்டு, வெள்ளிக் கிண்ணம் போல் காணப்படுவதைப் பார்த்து அதிசயத்த வண்ணமிருந்தார் இளவரசர்.

அச்சமயத்தில் பின்புறமாக அவரது கண்களை இரு அழகிய மெல்லிய கரங்கள் பொத்தியது.

"அனர்" என்று பொத்திய கைகளைப். பற்றிக்கொண்டு, கண்களை அந்த மிருதுவான கைகளின் மூடுதலினின்றும் விடுவித்துக் கொண்டார் ஸலீம்.

ஆம். அனர் தான் கண்களை மூடியது. அவள் ஒரு மோஹனச் சிரிப்புடன், "தண்ணீரில் என்ன கூர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்?" என்று இளவரசனின் மார்பில் சாய்ந்த வண்ணம் உட்கார்ந்தாள் அனர்.

இளவரசர் "அதோ பார். அனர், தண்ணீரில் பிரதி பலிக்கிறதே சந்திரன், அதற்கும் உன்னுடைய இந்த முகத்திற்கும் உள்ள ஒற்றுமையை கவனித்துக்கொண்டிருந்தேன்" என்று முத்த மீந்தார், அம்முகத்திற்கு.

"அதோ பார்த்தீர்களா? உங்களுடைய முகத்தினழகிற்கு முன் நிற்க தைரியமின்றி, மேகங்களிடையே மறைந்துகொள்கிருன் சந்திரன்" என ஆகாயத்தை சுட்டிக் காட்டினுள் அனர்.

"அதிருக்கட்டும், அனர்; நீ வருவதற்கு ஏன் இவ்வளவு நாழிகை. உனக்காக எவ்வளவு நேரமாக நான் காத்துக்கொண்டிருப்பது?

"இன்றைய தினம் நாட்டியமில்லையா? அதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டு வருவதற்கு நாழிகையாகிவிட்டது. ஏற்கனவே சக்ரவர்த்திக்கு என் மேல் சந்தேகம். இன்னும், நாட்டியத்திற்கு. நேரங்கழித்தோ, போகாமலோ இருந்தால் சந்தேகம் அதிகரிக்குமல்லவா?"

இவ்விதம் காதலிருவரும் இன்பமாக அளவளாவிக் கொண்டிருந்தனர்.

2

அதே நந்தவனத்தின் மற்றொரு புறம்! "சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி என்று எல்லோரும் சொல்கிறுர்கள் அபுல் பேஸல். சக்ரவர்த்தியாக இருந்தாலல்லவோ தெரியும் அவர்களுக்கு அதன் கஷ்டநிஷ்டூரங்கள். எப்பொழுது பார்த்தாலும் ராஜ்யத்தைப்பற்றிய கவலையே. ஒழிவென்பதே சிறிதும் கிடையாது. மன நிம்மதியுமில்லை என்று மன சந்துஷ்டிக்காக நந்தவனத்திற்கு உலாவ வந்த மொகலாய மன்னன் அக்பர் கூறினுன்.

"சிறிது நேரம் தனிமையாக இப்பூங்காவைச் சுற்றி வந்தீர்களானுல் மனச்சாந்தியேற்படும் அதற்குள் நானும் எனது அலுவல்களை முடித்துக்கொண்டு நடனசாலைக்கு வருகிறேன்" என்று உத்தரவு பெற்றுச் சென்றுர் கவி அபுல் பேஸல்.

அந்நிலவொளியில் அவ்வழகிய நந்தவனத்தைச் சுற்றி வந்தார். அக்பர், இதற்குமுன் இவ்வளவு சோபையுடன் விளங்கவில்லையே இந்தச் சோலை, நிலவொளியும் குளிர்ந்ததென்றலும், நறு மலர்களின் பரிமளமும் குழம்பிக்கிடந்த மன்னனின் மனதிற்குச் சாந்தியை அளித்தன.

தூரத்தில் சிரிப்பு சப்தம்; நந்த வனத்தின் அமைதியைக் குலைத்தது. யாரது? இந்தச் சமயத்தில் இங்கு சிரிப்பானேன்? நடனத்திற்குச் சென்றிருக்க வேண்டிய சமயத்தில் இங்கு யார் இவ்வளவு குதூகலமாக இருப்பது?

சிரிப்பு வந்த திக்கை நோக்கிப் போனுன் வேந்தன். செடிகளிடையே தூரத்தில் நிலவொளியில் கட்டியணைத்த வண்ணம் காதலரிருவர் தம்மையே மறந்திருப்பது தெரிந்தது. அருகில் போகவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் அக் காதலர் ஒருவரையொருவர் பிரிய மனமின்றிப் பிரிந்து செல்லல் தெரிந்தது. அங்கு தூரத்தில் தெரிந்த ஆணுருவம் தன் மைந்தன் ஸலீம் என்று தெரிய வந்தது. மன்னன் அருகிலிருந்த செடியின் பக்கமாகச் சென்றபோது அப்படித் தன் மகனைக் கட்டியணைத்து முத்தமீந்த அந்தப் பெண் யார்? அக்பருக்கு அது சரியாகப் புலப்படவில்லை. மானென மறைந்து போனுள் மடந்தை.

ராஜ்ய வியவகாரங்களில் ஈடுபட்டிருந்ததால், சஞ்சலமடைந்திருந்த தனது மனதிற்கு ஓய்வு கொடுக்க எண்ணி நல்ல குளிர்ந்த காற்றை நாடி அரண்மனைத் தோட்டத்திற்கு வந்த அக்பருக்கு மேலும் சஞ்சலத்தை உண்டுபண்ணியது தனது மகன் கள்ளக் காதல் புரிவது தெரிந்ததும். தனக்குப் பிறகு ஹிந்துஸ்தானத்திற்கே சக்ரவர்த்தியாக வேண்டிய ஸலீம் பேர் ஊர் தெரியாத பெண்ணுடன் கள்ளக் காதல் புரிவது அக்பருக்குக் கிஞ்சித்தும் பிடிக்கவில்லை. அதுவும் தன் கண்களினுலேயே கண்ட பிறகு கோபமும் மூண்டது. முளையிலேயே களைத் தெறிய விரும்பினுன் அந்த மொகலாயன், ஆழமாக வேரூன்றிப்போனதை அவன் கண்டானு என்ன?

அந்த மங்கை யாரென்று தெரியவில்லையே. அவளுக்கும் எவ்வளவு துணிவு. அரண்மனைத் தோட்டத்திலேயே திருட்டுக் காதல் புரிய! ஆம். அவள் யாராயிருந்தாலென்ன? தன் மகனின் மனதை மாற்றியவள். தன் கண்ணெதிரிலேயே அவன் மகன் ஸலீமைக் கட்டியணைத்துக்கொண்டாள். அவளைக் குறை கூறிப் பயனென்ன? தன் மைந்தன் சக்ரவர்த்தியாகப் போகிறவன் சற்றும் பொருப்பற்று நடந்துகொண்டால். நல்ல சந்தர்ப்பம் பார்த்து மன்னன் ஸலீமின் இந்நடத்தையைக் கண்டிக்கக் கருதினுன்.

3

நடனசாலை: தேவேந்திரனின் நடனசாலையைப் போலத் தோன்றியது. இக்காலத்தைப் போல, அக்காலத்தில் மின்சார விளக்குகள் ஏது? நாம் மசூதிகளில் பெரிதாகத் தொங்கிக் கொண்டிருக்கும் மெழுகு வர்த்திகளால் ஏற்றப்பட்ட பெரிய கண்ணுடி விளக்குகளைப்பார்க்கிருேமே "க்ளோப்" விளக்குகள், அத்தகையவை தான் அதிகம் அந்நாளில். அவ்வித மெழுகு வர்த்திகளால் கொளுத்தப்பட்ட விளக்குகள் நடன சாலையை அலங்கரித்துக் கொண்டிருந்தன. அவைகளினின்றும் வீசும் ஒளி, இரவா பகலா என்று திகைப்புறச் செய்தது. மந்திரிப் பிரதானிகள் அணிந்திருந்த முத்து மாலைகளும் சரிகை ஆடைகளும் விளக்கொளியில் கண்களைப் பறித்துக் கொண்டு போயின.

அக்பர் சிங்காதனத்தில் திண்டுகளில் சிறிது சாய்ந்த வண்ணம் அமர்ந்திருந்தார் சற்று தூரத்தில் இளவரசர் ஸலீம். அவர் பக்கலில் அவர் நண்பன் நஸீம். மற்றும் ஏனைய பிரதானிகளும் நடனசாலையில் குழுமியிருந்தனர்.

அரண்மனையில் நடனக்கலையில் தேர்ச்சி பெற்றவர்களெல்லாம் தங்களது கைவன்மையைக் காட்டிப் பரிசு பெற்றுப் போய்க்கொண்டிருந்தனர்,

சாய்ந்து நடனத்தை ரஸித்துக் கொண்டிருந்த அக்பர் நிமிர்ந்து சிங்காதனத்தில் அமர்ந்தது அவர் அதிகமாக நடனத்தை ரஸிப்பதைக் காட்டியது. காரணமின்றி நிமிர்ந்து உட்காரவில்லை மொகலாயன்.

அனர்கலியின் முறை நடனமாடிக்கொண்டிருந்தாள். என்ன தளுக்கு. மினுக்கு, ஒய்யாரம்! மயில் போன்ற சாயல், குயில் போன்ற் குரல், இந்நிலையில் கண்டிருந்தால் நடனமாது ரம்பையும் வெட்கியேயிருப்பள். அவளது நாட்டியத்திற்குப் பன்மடங்கு சோபையையளித்தது அவளது யௌவனமும், வசீகரம் பொருந்திய தேகக்கட்டும், அழகும், அணிந்திருந்த ஆபரணங்களும், ஆடையும்.

அனர்கலி பாரசீக தேசத்தினள். தாய் தந்தையற்ற அனதை. பல ஆண்டுகளாக அரண்மனை அந்தப் புரத்தில் ஊழியம் செய்யும் ஒரு தாதி. வயது சுமார் பதினெட்டென மதிப்பிடலாம். அவளது அழகிய வளைந்த புருவங்களும், கடைந்தெடுத்த கூர்மையான மூக்கும், மிருதுவான கன்னங்களும், கடலினும் பெரிய கருவிழிகளும், முல்லைச் சிரிப்பும், மதிமுகமும், முத்து போன்ற பற்களும் முதுமையெய்திய மொகலாய சக்ரவர்த்தியையே ஒரு ஆட்டு ஆட்டியது என்றுல், காளைப் பருவத்தினனுன ஸலீம் அவள் வயப்பட்டது ஆச்சர்யமல்லவே!

. அனர்கலியின் நடனம் முடிந்தது. சக்ரவர்த்தியைச் சென்று வணங்கினுள். தானணிந்திருந்த விலையுயர்ந்த முத்துமாலையை யெடுத்து அனர்கலியின் கரங்களைப் பிடித்துக்கொண்டு அளித்தான். அவ்வளவு காமம் தலைக்கேறியிருந்தது மன்னனுக்கு.

அடுத்தபடியாக, இளவரசனை வணங்கினுள். இரு அழகிய வளையல்களை (அவளுக்கென்று தான் செய்து வந்தானே என்னவோ இளவரசன், இல்லையேல் அவனிடமேது வளையல்கள்) பரிசாக அளித்தான், அதோடு நின்றுனு? ஏதோ உதடை அசைத்தான். புரிந்துகொண்டாள் அனர்கலி. எல்லாம் கண்ணிமைக்கும் நேரத்தில் முடிந்தது. காதலர் பாஷை காதலருக்கல்லவோ தெரியும்! தலையையும் அசைத்துத் தன்னுடைய சம்மதத்தையும் தெரிவித்து விட்டாள். அங்கு தான் அனர்த்தம் வந்தது.

தேன் குடித்த நரிபோல, விளக்குப் பூச்சி போல அனரின் எழிலில் மயங்கியவனய் அவளையே கண்ணிமையாமல் கண்ணுற்றிருந்த மொகாலய அரசன், இளவரசன் உதட்டை அசக்கியதையும். அனர் தலையையசைத்ததையும் கண்டு, மயக்கத்திலிருந்து விழித்துக் கொண்டான்.

4.

இப்பொழுது அரசனுக்கு விஷயம் விளங்கிவிட்டது. அரண்மனை நந்தவனத்தில் இரவில் காதற் களியாட்டங்களில் மெய் மறந்து மதுவுண்ட வண்டுகள்போல மயங்கிக் கிடந்தது யாரென்று தெரிந்தது.

மன்னவனின் கண்கள்கோபக் கனலைக் கக்கின. புருவங்கள் நெறித்தன. என்ன செய்வதென்று அரசனுக்குத் தோற்றவில்லை. கொஞ்ச நாளில் அரசாளப் போகும் ஸலீம் ஓர் அடிமையிடம் காதல் கொண்டானே என்றல்ல அச்சினம். தனக்குப் போட்டியாகத் தன் மகனே தோன்றினனே என்று தான் அந்த ஆத்திரம். வேறு யாராதவாவது இருப்பின், தான் சக்ரவர்த்தி என்ற ஹோதாவில், அவனை அச்சுறுத்தலாம், நாடு கடத்தலாம், சிறையிடலாம் அன்றேல் சிரச்சேதமும் செய்யலாம். ஆனுல், தான் பெற்ற, நாளைக்குப்பட்டத்திற்கு வரவிருக்கும் பிரஜைகளின் அன்பிற்குப்பாத்திரமான, தன் மைந்தனை என்ன செய்ய இயலும்? ஆகவே, அரசன் செயலற்று, ஆனுல் கோபம் தணியுமலிருந்தான்.

அக்கிழ வயதில் அனர்கலியைப்போன்ற அழகு பிம்பத்தை யாரும் அவனுக்குத் தர முன் வரமாட்டார்கள்: ஏதோ. அனர்கலி தனது அடிமையாக இருக்கிருளே, தன் வயப்படுத்திக்கொள்ளலாமென்று கருதியிருந்தான் காமப்பித்துக் கொண்ட காவலன். ஆனுல், அவனென்று நினைக்க 'அல்லா' ஒன்று நினைத்தார்.

அந்நிலையில், அரண்மனையிலிருந்தோர் யாரும் அவனையணுகிச் சமாதானம் செய்ய முன்வரவில்லை. அரண்மனையில் தமாஷ் பேர்வழியும், அக்பரின் நெருங்கிய நண்பனுமான ராஜா பீர்பால் சிறிது தைரியம் கொண்டு அரசனையணுகினுன். இவ்வளவு வயதான காலத்தில் யௌவன் பருவத்தின் இச்சைகளை வைத்துக்கொள்வது நன்றுயில்லையென்றும், யுக்தவயதினர்களான ஸலீமையும், அனரையுமே ஜோடியாக்குவது சிறந்தது என்றும், ஏற்றது என்றும் எவ்வளவோ எடுத்துரைத்தும் மன்னன் மனம் மாறவில்லை. வேறு வழியில்லை. என்ன செய்வது? அனரையும், ஸலீமையும் பிரித்துச் சிலகாலம் வைத்தல் நன்றெறன நவின்றுன் தோழன் பீர்பால். அதை உத்தமமான யோசனை என ஆமோதித்தான் அக்பர். அன்றே அனரைத் தக்க காவலுடன் லாகூர் கோட்டைக்குக் கொண்டு செல்ல ஆணையுமிட்டான். இப்போது தான் அவன் மனம் நிம்மதியுற்றது. பின்னல் வரப்போகும் புயலையறிய அவன் என்ன த்ரிகால ஞானியா?

காதலியின் வரவை எதிர்பார்த்து, எதிர்பார்த்து, கதலி வருக்ஷத்தினடியில் பளிங்கு மேடையில் வீற்றிருந்த இளவரசனின் கண்கள் பூத்துப்போய் விட்டது. ஏன் அவள் வரவில்லை வரச் சம்மதித்து தானே தலையசைத்தாள். அல்லது சம்மதமின்றி அசக்கிய அசைப்பா அது? இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது" என்று கருதினுன் ஸலீம். நெடுநேரம் காத்திருந்தான். காதலியிருந்தால் தானே அவள் வர.

பின்புறம் காலடி சப்தம் கேட்டது. வரட்டும், இன்று கெஞ்சி மன்னிப்பு கேட்கும் வரையில் பேசுவதில்லை என்று மனதைத் திடப்படுத்திக்கொண்டான் இளவரசன்.

பிடிக்க வந்த பறவையைப் பிடித்தும் பறந்து போய்விட்டது!— அடிமைப் பெண்ணிடம் அன்பு கொண்ட அரசகுமாரனின் சரித்திரம் பிரசித்தமானது. இந்து சரித்திரத்தில் ஜஹாங்கீர் சக்கிரவர்த்தி அனர்கலி என்ற அழகியிடம் கொண்ட ப்ரேமையும் காதலும் பலவிதமாகக் கதைகளில் கூறப்பட்டிருக்கின்றன. மிகவும் சிரேஷ்டமான காதல்! இந்தக் கதையில் சிருங்காரமும் சோகமும் சேர்ந்த இந்த சம்பவம் மிகச் சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது.

பத்திரிகாசிரியர்கள் கூட்டம்



புது டில்லியில் சமீபத்தில் அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் நிரந்தரக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றது. "அம்ருத பஜார் பத்திரிகை" "நேஷனல் ஹெரால்ட்" பத்திரிகையின் ஆசிரியர்கள் கூட்ட முடிவுக்கப்புறம் சம்பாஷிக்கின்றனர். (என். என். பி. எஸ்.)

நரஸூஸ் டீ, காபி
விலையிலும் தரத்திலும் நிகரற்றவை
ருசிக்கு ருசி
விலையும் மலிவு
எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானுலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.
மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—
நரஸூஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.
MNK-13 T.M.



கே. சுவாமிநாதன் & கோ
24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.
ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.
சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஓர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.
பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

வந்த காலடி சப்தம் அருகில் வந்ததும் நின்றது. "இளவரசே" என்றதும் திடுக்கிட்டான். இளவரசன், ஏன்? அது தோழன் நஸீமின் குரல். காலடி சப்தம் அனார்கலியினது அல்ல.

நஸீம் "இளவரசே, இனி நீர் அனாருக்குக்காகக் காத்திருப்பதில் பயனில்லை. காரியம் மிஞ்சி விட்டது. இனி மேல் நடக்க வேண்டியவைகளைக் கவனிக்க வேண்டும்" என்றான்.

"என்ன நஸீம், நீ கூறுவது எனக்கு விளங்கவில்லையே. என் அனாருக்கு என்ன நேர்ந்தது, ஏன் மறைமுகமாகக் கூறுகிறாய்."

"தாங்கள் நடனம் முடிந்த பிறகு அனாருடன் பேசியதையும் அனார் தலையை ஆட்டி தங்களுக்கு அவள் சம்மதத்தைத் தெரிவித்ததையும், சக்ரவர்த்தி அப்பொழுதே கண்டு விட்டார். அதனால் கடும் கோபம்கொண்டு அனாரை லாகூர் கோட்டைக்கு தக்க காவலுடன் அனுப்பிவிட்டார்."

"இது உனக்கு எப்படி தெரிந்தது நஸீம்? நீ கூறுவது உண்மை தானா. அல்லது விளையாடுகிறாயா?"

"நமது வேலையாட்கள் மூலம் தெரிந்தது. தங்களிடம் விளையாடப் போவது எனக்குத் தெரியாதா"?

குபீரென்று மொகலாய ரத்தம் கொதித்தெழுந்தது ஸலீமின் உடலில் சீரிய நாகமென எழுந்தான். கோபம் அவனுக்குக் கட்டுக்கடங்காமல் வந்து விட்டது. "அனாரைக் காக்க நாம் போயாக வேண்டும் நண்பா. அவளைக் கொலை செய்தால், என்னுயிருள்ளளவும், பழி வாங்கியே தீருவேன். தக்க ஏற்பாடுகள் செய்" என்றான்.

சந்தோஷப் பிரியனான ஸலீமுக்கு நண்பர்கள் அநேகம். ஒவ்வொரு வேலைக்காரனும் இளவரசனிடம் விஸ்வாசத்துடனிருந்தான், ஸலீமுக்காக உயிரையும் கொடுக்க எத்தனையோ பேர் சித்தமாகவிருந்தனர். அவ்வளவு பேரும் இப்பொழுது கைவிட்டுவிடுவார்களா? அதிலும் அக்பர் செய்தது அநியாயமென்று அறிந்த பிறகு அவர்களின் தைரியத்தினாலேயே இளவரசன் லாகூரை யடைந்தான்.

தந்தைக்கு எதிராக பகிரங்கமாகக் கலகம் செய்யத் தலைப்பட்டான் ஸலீம். அவனுக்கு உதவியாக இருந்தது ஒரு சேனா ஸமுத்திரம்.

6

லாகூர் கோட்டையைக் கலகக்காரர்கள் முற்றுகையிட்டனர், காதல் நோயால் தகிக்கப்படுபவர்களுக்கு, அதிலும் காதலி ஆபத்தில் சிக்குண்டு இருக்கும் சமயத்தில், உணவு செல்லுமா, உறக்கம் தான் வருமா? தனது நண்பனுடனும், மற்றும் சேனைத் தலைவர்களோடும் தனது கூடாரத்தில் கூடி ஆலோசனை செய்தான் இரவுபகலாக ஸலீம். வெறும் முற்றுகையில் பயனில்லை என்ற முடிவுக்கு வந்தனர். கலகம் அதிகமாக ஆக அரசன் அனாரின் உயிருக்கே உலை வைத்தாலும் வைத்துவிடுவான் என்று சந்தேகித்தனர். அதனால் கோட்டையை தகர்த்து உள்ளே பிரவேசிப்பதென தீர்மானித்தனர். மறு நாளே தீவிரமான போர் துவக்குவதென நிச்சயிக்கப்பட்டது.

சற்று நேரம் பொறுத்து ஒரு ஒற்றன் வந்தான். ஒற்றன் கூறிய கூற்று இளவரசனைத் திகைக்கச் செய்தது. இப்படியும் ஒரு ராஜ்யத்தில் நீதி உண்டா என்று சீறினான், அந்தக் கணமே கோட்டையைப் பிடித்தாக வேண்டும், இல்லையேல் அனாரை உயிருடன் காண்பதரிது என்று விளங்கியது, நாளைத் துவக்க நினைத்த போரை இன்றே துவக்க ஆக்ஞாபித்தான். பித்தனைப் போலப் போர்க்களத்தில் திரிந்தான். கோட்டை எப்போது பிடிபடும் என்றே கவலை அவன் முகத்தில் தோய்ந்து போயிற்று: கண்கள் கோவைப் பழமெனச் சிவந்து கோபாக்னியைக் கக்கின. அப்பொழுது அவனுக்கு வேறு ஒன்றும் லக்ஷியமில்லை. கோட்டையைப் பிடித்தாக வேண்டும். அங்கும் இங்கும் திரிந்து ஸேனாவீரர்களுக்கு உற்சாக மூட்டி கோட்டையைத் தாக்க ஏற்பாடு செய்தான். போரும் துவங்கியது.

7

கைகளிலும், கால்களிலும் விலங்கிடப்பட்டு உருக்குலைந்து காராக் கிருகத்தில் கவனிப்பாரற்று கிடந்தாள் ரதி போன்ற அனார்கலி. இரண்டு சிவந்த கைகளிலும் வளைகள் நிறைந்து கையாடும்போது 'கல கல' வென்று அழகிய சப்தத்தை உண்டாக்கிய அதே பட்டு போன்ற கைகளில் அவளாலே தூக்க முடியாத இரும்பு விலங்குகள் இரவு காலங்களில் அவைகள் உராயும் போது ஏற்படும் சப்தம் அவளை நடுங்குறச் செய்தது. டில்லியிலிருந்தபோது இளவரசரைச் சந்திப்பதற்காக நிமிஷத்திற்கொரு அலங்காரம் செய்து கொண்டாள். இப்போது யாரைப் பார்க்க வேண்டும் அவள். அவளைத்தான் சிறைக்காப்போனையும், சிறையதிகாரியையும் தவிர யார் பார்க்க வரப் போகிறார்கள். தலையின் கருத்த மயிர் அலங்கோலமாய்க் கிடந்தது, ஆனால் அப்போதும் அவள் முகத்தில் புன்னகை தவழ்ந்த வண்ணம் தானிருந்தது,

சிறைக் கதவு திறக்கும் சப்தம். அனார்கலிக்கு எதற்காக திறக்கிறார்கள் என்று தெரியும். ஏனெனில் அது உணவுகொண்டு வரும் சமயமல்ல. அந்தக் கடிதத்தைப் போன்று எழுதச் சொல்வார்கள், கலியாணம் செய்து கொண்டு எங்காவது கண்காணா தேசம் செல்லச் சொல்வார்கள். பல நாட்களாகத் தெரிந்த விஷயம் தான். இன்றைக்கும் அதைத்தான் சொல்ல வருகிறார்கள். அப்படி அனாருக்குப் பிடிக்காத கடிதத்தைக் கவனிப்போம்.

"இளவரசே,

தாங்களோ இளவரசர். இன்னும் சிறிது காலத்தில் ஹிந்துஸ்தானத்தில் சக்ரவர்த்தியாக விளங்கப்போகிறவர். நானோ தங்களிடம் ஊழியம் செய்யும் அடிமை. தங்களிடம் நான் காதல்கொண்டது நியாயமில்லையெனத் தோன்றுகிறது. தாங்கள் என்னை மணக்க தங்கள் பிதா சம்மதிப்பாரா? ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார். மற்றும் நான் தங்களது ஆசை நாயகியாக மட்டும் இருந்தால் வேசைப்பட்டமல்லவோ எனக்குக் கிட்டும். ஆதலால் எனது வாழ்நாளை வீணாக்காமல் எனக்குகந்த மணாளனை வரித்து விட்டேன். மணமும் செய்து கொண்டு விட்டேன் தங்கள் முன்னிலையிலிருந்து கொண்டு தங்கள் வாழ்க்கைக்கு இடையூறுயிராமல் எனது தாய் நாடு பாரசீகம் செல்கிறேன். அடியாளை மறந்து விடவும்.

இங்ஙனம், தங்கள் அடிமை
அனார்கலி."

இத்தகைய கடிதத்தை அனாரை எழுதித் தந்து அதில்கூறிய வண்ணம் நடக்கக் கட்டளையிட்டால் எழுதித்தர துணிவளா இளவரசரை உயிருக்குயிராய் காதலிக்கும் அனார்.

இந்த துரதிர்ஷ்டம் பிடித்த நாட்டிலே காதல் கொண்டோம். காதலித்த இருவரும் மணந்து இன்பமாக வாழ்ந்தோம் என்று கிடையாதே. இளவரசனானால் என்ன! ஏன் அவன் மேல் நான் காதல்கொள்ளக்கூடாது? 'நான் அடிமை தான்.' அடிமையின் காதலுக்கும் அரசகுமாரியின் காதலுக்கும் ஏதாவது வித்தியாசமுண்டா என்ன? காதலென்பது எல்லோருக்கும் ஒன்று தானே. அன்றி. அரசனும், அரசியும், அரச குமாரனும், அரச குமாரியும்: பணக்காரனும் பணக்காரியும்; பிச்சைக்காரனும், பிச்சைக்காரியும்; ஆண்டியும், ஆண்டிச்சியும்தான் காதல் கொள்ள வேண்டுமென்று ஏதாவது நியதி யிருக்கிறதா என்றெண்ணினாள் அனார். அப்படியில்லையென்றால் பாருங்களேன்! நாளை முடி துறக்கப்போகும் கிழவரசனை விரும்பாமல், இளவரசன்மேல் காதல் கொண்டதால் அனார்கலி படும் கொடிய தண்டனையை.

ஆனால் இளவரசன் தன்னை மீட்கப் போர்புரிகிறான்; அவனும் தந்தையின் வார்த்தையைக் கேட்டு தன்னைக் கைவிடவில்லையென்பதொன்று தான் அனாருக்கு சற்று ஆறுதலளித்தது. ஆனால் தன்னையென்னவோ இளவரசனால் தப்புவிக்க முடியப் போவதில்லை. அவர் கோட்டையைப் பிடிக்குமுன் இங்குள்ள அதிகாரிகள் (இல்லை. கொலையாளிகள்) தன்னை உயிருடன் விட்டு வைக்கமாட்டார்களென நிச்சயமாகக் கண்டுகொண்டாள் அனார். ஆனால் தான் இறக்கும் முன் இளவரசரின் புன்னகை தவழும் வதனத்தை ஒருதரமாவது காணும் பாக்யம் கிட்டுமா என்று எங்கினாள். இயலாத காரியத்தில் இறங்கி தந்தையை விரோதித்துக் கொள்வதில் என்ன லாபம். விதி அவ்வளவுதான். அடுத்த பிறவியிலாவது கணவனும் மனைவியுமாக வாழ "அல்லா" அருள் புரியவேண்டும் என்று அனார் பிரார்த்தித்தாள்.

சிறையின் கதவு திறக்கப்பட்டதும், சிறையதிகாரி உள்ளே நுழைந்தான். வழக்கம்போல, "அம்மா திரிகடிதம்எழுதிவிட்டு, மணம் செய்துகொண்டு ஓடிப் போகிறாயா" என்று கேட்டான்.

அழுத்தம் திருத்தமாக "முடியாது" என்றாள் அனார்.

மற்ற நாட்களில் அவள் அவ்விதம் கூறியதும் அதிகாரி போய்விடுவான். ஆனால் இன்று அவள் சொல்லியதைக் கேட்டதும். அவள் கைகளிலிருந்த விலங்கை நீக்கிவிட்டு, "என்னைத் தொடர்ந்து வா" என்ற உத்திரவை பிறப்பித்து முன்னால் நடந்தான்.

"எங்கு அழைத்துச் செல்கிறாய்" என்று அனார் கேட்க வாயெடுத்தாள். அதற்குள் அதிகாரியின் தூண் ஒத்த கைகளையும் கருத்தடர்ந்து முறுக்கி விடப்பெற்ற மீசையையும் இறக்கமற்ற கொடூர பார்வையையும் கண்டதும் பெட்டிப் பாம்புபோலாய் விட்டாள். கேட்க நா எழவில்லை. பேசாமல் அதிகாரியைத்தொடர்ந்து சென்றாள். சிறையைத் தாண்டி சிறிது தூரம் சென்றதும் சிப்பாய்கள் அவளைச் சூழ்ந்து கொண்டனர்,

உள்ளங்கை நெல்லிக் கனி போல் வெட்ட வெளிச்சமாக விளங்கிவிட்டது அனாருக்கு தன்னை எங்கே இட்டுச் செல்கின்றனர் என்று.

"அவளை உயிரோடு புதைக்க வேண்டும்; உயிரை வைத்துக் கொல்ல வேண்டும்" என்று நாம் வேடிக்கையாகவோ, ஆத்திரமாகவோ சொல்லக் கேட்டிருக்கிறோம். செயலில் கண்டதில்லை. ஆனால் கீர்த்தி வாய்ந்த, நீதி வழங்குவதில் வல்லவன் என்ற மொகலாய மன்னன் அக்பர் காலத்தில் உண்மையாகவே அவ்விதம் நடந்தது.

தனக்குக் கிடைக்கவேண்டிய அனாரை தட்டிப் பறித்துக் கொண்டு ஸலீம் சென்றதற்காக பொறாமையின் காரணமாய் அக்பர் சக்ரவர்த்தி அனாருக்கு விதித்த, எங்குமே கண்டிராத, கேட்டிராத கொடும் தண்டனையது.

அனாரைக் கடத்திச் சென்ற அதிகாரி கோட்டைச் சுவரின் வெடிப்பு ஒன்றின் நடுவில் நிறுத்தினான். அவளுக்கு சிக்ஷை விதிப்பதற்காகவே உண்டாக்கப்பட்ட பிளவு அது.

அவ்வளவுதான். அவளைச் சுற்றிலும் கற்கள் அடுக்கப்பட்டு உயிருடனேயே அவளை வைத்து ஸமாதி கட்ட ஆரம்பித்தனர், புற்றுபோல் வளர ஆரம்பித்தது கட்டிடம். தற்காலத்தில் தந்திர காட்சியினுதவியால் சினிமாவில் கட்டிடங்கள் கட்டுவதைக் காட்டுகிறார்களே அவ்வளவு துரிதமாகக் கட்டினார்கள் அனாரைச் சுற்றி. இடுப்புவரையில் வந்துவிட்டது; கழுத்தையும் எட்டிப்பார்த்துவிட்டது; இன்னுமொரு கல் தான் பாக்கி அனாரின் ஆவியை அள்ளிப்போக.

மறுபடியும் கடைசி முறையாக ஒரு சந்தர்ப்பம் அளித்தான் சிறையதிகாரி (இல்லை, கொலையாளி) அனார் உயிர் பிழைத்துப்போக. அதைப் பயன்படுத்திக்கொள்ள இசையவில்லை, உண்மைக் காதலின் முன் உயிரைத் திருணமாக மதித்த அனார்கலி,

கடைசீ கல்லும் அடுக்கப்பட்டது.

நூறு இடிகள் சேர்ந்து இடித்தது போன்ற சப்தம். ஆம்; கலக சேனை கோட்டை வாயிலைத் தகர்த்தெறிந்த சப்தம் தான் அது. கோட்டையினுள் முதலில் நுழைந்தது இளவரசர் தான். அவனைப் பின் பற்றினர் அவனது உற்ற தோழர்களும், நன்றியுள்ள பணியாளரும்.

இளவரசரிடம் உயிரையே வைத்திருந்த ஒற்றனொருவன், அனார்கலி அடக்கம் செய்யப்பட்ட இடத்தைக் காட்டினான். எங்கிருந்து அவ்வளவு பலம் வந்ததோ தெரியாது. ஆம்; காதலுக்காக மனிதன் தன் சக்திக்கு மீறிய காரியத்தை செய்வது இயற்கையென கதைகளில் படித்திருக்கிறோம். ஆனால் இளவரசன் செய்ததைக் கண்டதும் உண்மையாயிருக்க வேண்டுமென நம்பவேண்டியிருக்கிறது. விட்டான் ஒரு உதை இளவரசன். அனாரைச் சுற்றி கட்டிய கல் கட்டிடம் சிதறுண்டது.

மூச்சுத் திணறியிருந்த அனார், சாய்ந்தாள். தன்னிரு கைகளாலும் தாங்கிப் பிடித்துக் கொண்டான் அவள் காதலன். சிறிது ஜலம்கொண்டு காதலியின் முகத்தைத் துடைத்தான். கமலம் போன்ற கண்களைத் திறந்து பார்த்தாள். 'நாதா' என்றது அவளது பவளவாய்.

"அன்பே, அனார்," என்றான் இளவரசன். அதைச் செவி மடுத்ததும் கண்களை நிரந்தரமாக மூடிக்கொண்டாள் அனார். தனது காதலன் தன்னை மீட்டான். அவனது அழகிய கரங்களிலேயே தான் உயிர்துறக்கிறோம் என்ற எண்ணத்தினால் தானோ யாதோ, அவளது சந்திர பிம்பவதனத்தில் அவளுடன் பிறந்த—இரட்டை பிறவி போல — புன்னகை தவழ்ந்த வண்ணமிருந்தது.

8

பிடிக்க வந்த பறவையைப் பிடித்தும் பறந்துபோய் விட்டது. கரைகாணா துக்கத்தில் ஆழ்ந்து போனான் ஸலீம். அவன் கண்டானா என்ன வருங்காலத்தை! மறுபடியும் காதல் ஏற்படப்போகிறது. தனது குடியைத் தடுத்து தன்னை நல்வழிக்குக் கொண்டுவரப் போகிறாள் அவனது காதலி நூர்ஜஹான், உலக ஜோதி,' எனக் கனவிலும் அவன் கருதினான் இல்லை.

இவ்வளவு கஷ்டங்களுக்குள்ளாகி லாகூர் கோட்டையை வசப்படுத்தின காரியம் முடிந்து விட்டது. தனது ஆப்த நண்பர்களுக்கெல்லாம் விடை கொடுத்தனுப்பினான். இனி பிதாவைப் பகைத்துக் கொள்வதில் பலனென்ன! ஆகையால் பணிந்தான்.

அழுக்காறு கொண்டு செய்த செயலுக்காக ஒருவருக்கும் பயன்படாமல், இந்நாட்டையே சபித்த வண்ணம் சென்றது ஒரு உயிர்; அது தான் மிச்சம்.

தனக்குப் பிறகு முடி சூடப் போகும் மைந்தனை மன்னிக்காமல் யாது செய்ய இயலும் முதுமை யெய்திய மொகலாய மன்னன்?

மன்னவன் மன்னித்தாலும், அவன் செய்த கொடூரமான கொலையை மகன் மன்னித்தானா? அது தான் கிடையாது, அருமைக்காதலி அனார்கலியையிழந்த துக்கத்தை மறக்க மதுவைக் கைகொண்டான். தன் வெஞ்சினத்தையாற்றிக் கொள்ள தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தான். சமயமும் வாய்த்தது. பகையைத் தீர்த்துக் கொண்டான் அபுல் பேஸல் கொலையில் சம்பந்தப்பட்டு.

அபுல் பேஸலைக் கொன்று பழிக்குப் பழி வாங்கிக் கொண்டாலும், அவனது காதலி அனார்கலி உயிர் பெற்று வந்தாளா? இல்லையே! ஒரு வேளை நூர்ஜஹான் வடிவத்தில் சக்ரவர்த்தி ஜஹாங்கீருக்குத் தோற்றமளித்தாளோ, என்னவோ! யாரே அறிவர்.

"சருமத்தைப் பாதுகாற்பது வெகு எளிது" என்று
ஹஸ்னா பானு சொல்லுகிறார்

"சினிமா நடி தன்னுடைய சருமத்தை சுத்தமாகவும், மிருதுவாகவும், வைத்துக் கொள்ள வேண்டும். ஆகையினால் நானும் சருமத்தைப் பாதுகாற்க வேண்டும். லக்ஸ் டாய்லெட் சோப்பினால் இதைச் செய்கிறேன்."

மேலும் இந்த அழகிய இள நடி சொல்லுகிறார்: லக்ஸ் டாய்லெட் சோப்பினால் சருமத்தை அழகாகவும், சுத்தமாகவும், வைத்துக் கொள்வது எளிது. என் சருமத்துக்கு இந்த சோப்பு மிகவும் தகுந்தது. எல்லா பெண்மணிகளும் இதைஉபயோகிக்கலாமென்று நினைக்கிறேன். சருமத்தை சுத்தமாகவும், வழவழப்பாகவும், மிருதுவாகவும் செய்கிறது. அதன் நறுமணம் உங்களுக்கு இன்பமளிக்கும்.

லக்ஸ் டாய்லெட் சோப்
சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 56-169 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூட பல்பொடி
I. D. L. G. மேடிகேட்
பல வியாதிகளைத்தடுக்கவும். குணப்படுத்தவும்.

ஊக்கம். உற்சாகம் ஊட்ட	ஜிஞ்சர்	அஜீர்ண. பித்த சமனி
உஷ்ண சமனி	கூலாயில்	ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

அமிர்தாஞ்சன்



போலிகள் எச்சரிக்கை
"சுதேஹமித்திரன்"
எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.
அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

பாரதி நூல்கள்
(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ. 3 0 0
2.	வசனங்கள்	Vol II	,, 3 0 0
3.	கட்டுரைகள்	Vol III	,, 3 0 0
4.	பகவத்கீதை (காலிகோ)		,, 0 8 0
5.	Agni & other Poems & Translations		,, 1 0 0
6.	Essays & other Prose Fragments		,, 1 0 0
7.	சரித்திரம்		,, 0 4 0

பாரதி பிரசுராலயம்,
567, ஹைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

ஸர் ஸி. ஒய். சிந்தாமணி

நின்றனர். பண்டிட் சுந்தர்லால் ஹைக்கோட்டில்மட்டுமே வாதிப்பார். மோதிலால் வெளியூர்களுக்கும் போய் ஏராளமாக சம்பாதித்தார்; சில சமயம் அவர் சுந்தர் லாலுடன் சேர்ந்தும் மற்றும் சில சமயங்களில் அவருக்கு எதிராகவும் ஆஜரானார். 1918-ல் தாம் இறக்கும் வரை சுந்தர் லால் உன்னத ஸ்தானத்தில் இருந்தார்.

பண்டித மாளவியாஜி

இவர்களுக்கப்புறம் இரு இளைஞர்கள் முன் வந்தனர். அவர்களுள் ஒருவர் பண்டித மதன் மோஹன மாளவியா. 1910-அல்லது 1911-ல் அவர் தொழிலை விட்டு விலகாதிருந்தால், வெகு சீக்கிரம் அவர் முன்னணிக்கு வந்திருப்பார் என்பது நிச்சயம். மற்றொருவர் மௌல்வி குலாம் முஸ்தாபா; மிகப் பெரிய மனுஷ்யர்; ஊக்கமாக உழைப்பவர்; மனசாக்ஷிக்கு விரோதமின்றி நடப்பவர்; நல்ல புத்திசாலி. இதற்கடுத்தவர் டாக்டர் சதீச சந்திர பானர்ஜி. சில வருஷ காலத்திற்குள்ளாகவே அலஹாபாத்தில் அவரது தொழில் பெரிதும் விஸ்தரித்தது; எனக்கும் அவருக்கும் ஒரு விதத்தில் போட்டி இருந்தது; அடிக்கடி நாங்கள் ஒருவரையொருவர் எதிர்த்து நிற்போம்; ஆனால் எங்கள் சிநேகத்திற்குக் குறைவு கிடையாது. ஆங்கிலத்திலும் தத்துவ சாஸ்திரத்திலும் அவரது ஞானம் அபாரம்; சட்டத்தில் இருந்தது அதைவிட அதிகம் நியாயவாதம் பற்றிய மட்டில் அவரைக் காட்டிலும்மேலான நியாயவாதி அலஹாபாத் ஹைக்கோர்ட்டில் தொழில் நடத்தியதில்லை எனக் கூறலாம் ஒகானர் அப்போதுதான் முன்னுக்கு வந்து கொண்டிருந்தார்; அவரும் நானும்கூட அத்யந்த சிநேகிதர்கள். விஷயத்தை நன்கு கிரஹித்து அதைத்தெளிவாக எடுத்துக் கூறுவதுதான் அவரது சாமர்த்தியம். சுமார் 4 வருஷங்களுக்குமுன்பு தாம் மரிக்கும் வரை 30 வருஷ காலத்திற்கு மேலாகவே அவர் இத்தொழிலில் முதன்மை ஸ்தானம் வகித்தார்.

பொது வாழ்வு

இனி அலஹாபாத் பொது வாழ்வில் ஈடுபட்டவர்களைக் குறிப்பிட வேண்டும். என் வாழ்க்கையில் எனக்கு சகோதரர்போல் இன்றும் என் அதிருஷ்ட வசமாக இருக்கும் டாக்டர் சச்சிதாநந்த ஸின்ஹா என்னுடைய நீடித்த நண்பர். சம்பாஷணையில் வல்லவர்; அதிகம் படித்தவர்; அதைர்யப்படாதவர்; நன்கு பேசுபவர். எழுத்திலும் நிபுணர்: எல்ஜின் ரோட்டில் இருந்த அவருடைய ஏழாம் நம்பர் வீட்டில் ராஜீயத்திலும் இலக்கியத்திலும் சிரத்தை கொண்ட இளைஞர்கள் அந்நாளில் கூடுவது வழக்கம். இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாங்கள் சிலர் அவருடன் சேர்ந்து, இப்போது "ஹிந்துஸ்தான் ரெவிவூ" என வழங்கி வரும் "காயஸ்த சமாச்சார்" பத்திரிகையையும், பிறகு "இந்தியன் பீப்பிள்" என்ற பத்திரிகையையும் ஆரம்பித்தோம்: வேலையில் பெரும் பகுதி அவர் மீதே விழுந்தது: சதீச சந்திர பானர்ஜியும் நானும் அவருக்கு சகாக்களாக இருந்தோம்: வெகு சீக்கிரத்தில் "இந்தியன் பீப்பிள்" பத்திரிகைக்கு ஒரு ஆசிரியரை நியமிக்க டாக்டர் ஸின்ஹா விரும்பினார். "ஹிந்து" பத்திரிகாசிரியராயிருந்து பிரசித்தி பெற்ற காலஞ் சென்ற ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யருடைய உதவியினால், அதுவரை முன்பின் தெரியாத ஒரு இளைஞரை அந்த பதவிக்கு அவர் நியமித்தார். இந்த இளைஞரின் பெயர் ஸீ. ஒய். சிந்தாமணி- பிறகு ஸர் ஸீ. ஒய். சிந்தாமணி எனப் பிரசித்தி பெற்றவர்.

ஸர் சிந்தாமணி

டில்லியில் கர்ஸன் பிரபு நடத்திய தர்பாருக்கப்புறம் முதன் முதலாக ஸின்ஹாவின் வீட்டில் நான் அவரைப் பார்த்தேன். அவர் அதிவேகமாகப் பேசியதும், பலவிஷயங்களைப் பற்றி அவர் அறிந்திருந்ததும் எங்களுக்கு ஆச்சர்யகரமாக இருந்தன. அவரது ஞாபகசக்தி பிரமிக்கத்தக்கது என்பதை வெகுவிரைவில் நாங்கள் கண்டு கொண்டோம். ஆங்கில ராஜதந்திர நிபுணர்களும இந்தியத்தலைவர்களும் எந்தத்தேதியில்பிறந்தனர் எந்தத் தேதியில் இறந்தனர் என்பதை அவர் தப்பிதமின்றி உடனே சொல்லவல்லவர். பிரபல ஆசிரியர்கள் எழுதிய வாக்கியங்களையும் அவர் மறக்கமாட்டார். சில வருஷகாலத்திற்குள்ளாவே நானும் அவரும் நெருங்கிப் பழகலானோம். சில பொது விஷயங்களில் எனக்கும் அவருக்கும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டதுண்டு. ஆனால் அது எங்களது சிநேகத்தைப் பாதிக்கவில்லை. பிற்காலத்தில் அவர் பெரும் புகழ் எய்தினார்: அதற்கு அவரைவிடத் தகுதியானவர் இருக்க முடியாது. 1909-ல் பண்டித மதன் மோஹன் மாளவியா தலைமையில் "லீடர்" பத்திரிகையை நாங்கள் ஆரம்பித்தபோது, சிந்தாமணியையே அதன் கூட்டு ஆசிரியராக நியமிக்கத் தீர்மானித்தோம்: மற்றொரு கூட்டு ஆசிரியர் ஸ்ரீ என். என். குப்தா. சிறிது காலத்திற்கெல்லாம் சிந்தாமணிக்கு தேக அசௌக்யம் ஏற்பட்டது: அவர் பிழைப்பது அரிது என்றும் பயப்பட்டோம்: அவர் பிழைத்தது எங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுத்தது. திருப்பவும் உத்யோகத்திற்கு வந்து பத்திரிகையின் ஆசிரியரானார். ஒவ்வொரு பத்திரிகை ஆரம்பத்திலும் அதற்குப் பல இடையூறுகள் ஏற்படுவது சகஜம். சிந்தாமணி தமது ஊக்கம், சிரத்தை, விடாமுயற்சி, திறமை ஆகிய குணவிசேஷங்கள் காரணமாக "லீடர்" பத்திரிகையைப் பாதுகாத்துவந்தார்.

ராஜத்வேஷமா?

விரைவில் வட இந்தியாவில் "லீடர்" பத்திரிகைக்கு செல்வாக்கு அதிகரித்தது. "லீடர்" பத்திரிகையில் வெளியான பண்டிட் விஷ்ணு நாராயண தாரின் வியாசமொன்று ராஜத்வேஷம் விளைவித்ததாகக் கூறப்பட்டது: இதற்காக சிந்தாமணியைத் தண்டிக்க லார் ஜான் ஹிவட் விரும்பினார். எனது அபிப்பிராயம் இது சம்பந்தமாகக் கேட்கப்பட்டது. பின்பு கல்கத்தா மிஸ்டர் (ஸர்) ஆசுதோஷ சவுதரியின் ஆலோசனையும் நாடப்பட்டது. அந்த வியாசத்தில் ராஜத்வேஷத்திற்கான அம்சம் ஏதுமில்லை என்று நாங்கள் இருவரும் அபிப்பிராயப்பட்டோம். ஆயினும் பத்திரிகை டைரக்டர்கள் இங்கிலாந்தில் பிரசித்தி பெற்ற ஸர் எட்வர்ட் (பின்பு பிரபு) கார்ஸன், மிஸ்டர் (பின்பு ஜஸ்டிஸ்) ஆவரி ஆகிய இரு பிரபல கிரிமினல் லாயர்களது அபிப்பிராயத்தைக் கேட்டனர். அவர்களிருவரும் நாங்கள் கூறியதையே ஆமோதித்தனர். இந்த அபிப்பிராயத்தை நாங்கள் ஸ்ரீ கோகலேக்கு அனுப்பினோம்: அச்சமயத்தில் கோகலேயிடம் எனக்கு அதிகப்பற்றுதல் ஏற்பட்டிருந்தது; இன்றும் அவர் தான் சிறந்த ராஜ தந்திர நிபுணர் என்பது என் துணிபு; கோகலேக்கு அதை ஸர் வில்லியம் வெடர்பர்னுக்கு அனுப்பும்படி நாங்கள் எழுதினோம்; ஸர் வெடர்பர்ன் அதை மார்லி பிரபுவுக்கு அனுப்பி வைத்தார். மார்லி பிரபு அதைப் படித்துவிட்டு, பத்திரிகை மீது நடவடிக்கை எடுப்பது தகாது என்ற முடிவுக்கு வந்தார். இத்துடன் இவ்விஷயம தீர்ந்தது. இது சிந்தாமணியின் வெற்றி பின்னர் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களும் "லீடர்" பத்திரிகையை ஆதரித்தனர். ஐக்ய மாகாணத்தில், லக்ஷ்மணபுரியில் "அட்வகேட்" என்ற மற்றொரு இந்திய பத்திரிகை அப்போது வாரம் இரு முறை வெளி வந்து கொண்டிருந்தது; அதை நடத்தியவர் கங்காப் பிரசாத வர்மா; அக்காலத்தில் பெரிய தலைவர் அவர். அதிகாரிகளிடமும் தாலூகாதார்களிடமும் அவருக்கு அதிக சலுகை உண்டு. அந்தக் காலத்தில் "பயோனீர்" பத்திரிகைக்கு உத்யோகஸ்தர் ஆதரவு தான் பெரும்பாலும் இருந்தது, அதில் பிரதி வாரமும் வெளியான லண்டன் நிருபரின் கடிதத்தில் பல விஷயங்கள் பிரகாசித்தன.

திறமையைக் காட்டினார்

சில வருஷங்களுக்கப்புறம் சிந்தாமணி சட்டசபை மெம்பரானார்; எதிர்க் கட்சித் தலைவர் என்று அவரை மற்றவர்கள்கருதினர். அங்கு அவர் தமது வாதம் புரியும் திறமையையும், விஷய ஞானத்தையும், மிகுந்த சாமர்த்யத்துடன் நிரூபித்தார். அதிகாரிகளும் அவரது திறமையைக் கொண்டாட நேர்ந்தது சில சமயங்களில் அவர் விடுத்த நிஷ்பக்ஷபாதமான கண்டனம் அவ்வப்போது பலமாக மறுக்கப்பட்ட போதிலும், அவரது குண விசேஷத்தைப் பாராட்டாதவர்களே கிடையாது. அவரிடம் எல்லோரும் அன்பு காட்டினர். இரட்டையாட்சி முறை அமுலுக்கு வந்தபோது ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் என்னிடம் ரகஸ்யமாக சில விஷயங்களைக் கேட்டார். சிந்தாமணி மந்திரி பதவி யேற்பது பொருந்துமா என அவர் கேட்டார். நான் இந்த யோசனையை உடனே முழுமனதுடன் வரவேற்றேன்; என் மூலம் ஸர் பட்லர் சிந்தாமணிக்கு வேண்டுகோளை அனுப்பினார்.

சட்ட சபையில்

இந்தப் பதவியை யேற்கும்படி அவரைத் தூண்டுவது எனக்கு மிகவும் சிரமமாகி விட்டது. இரண்டு வருஷங்களுக்குச் சற்று அதிகமாகவே இந்த பதவி வஹித்த அவர், தமக்கு நீடித்து நிற்கும் நற்பெயரை சம்பாதித்துக் கொண்டார். ஸர் வில்லியம் மாரிஸுடன் ஒரு சிறிய விஷயத்தில் அவருக்கு அபிப்பிராய பேதம் ஏற்பட்டபோது அதை என்னிடம் வந்து சொன்னார்: அதற்குள் நான் ராஜப்பிரதிநிதி நிர்வாக சபையிலிருந்து விலகிக் கொண்டேன்: நான் அவர் கூறியதை ஆமோதித்தேன்: கடைசியில் என்னுடன் கலந்து பேசிய பின்பே அவர் மந்திரி பதவியை ராஜிநாமாச் செய்தார். கவர்னர் நிர்வாக சபையிலிருந்து வெளியே வந்த போதிலும், சட்ட சபையில் அவர் பிரபலராக இருந்தார். கடைசி வரை சட்ட சபையில் எதிர்தரப்புத் தலைவராகவே அவரை எல்லோரும் பாவித்தனர். 1936-ல் படித்தவர்களது வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி என் தலைமையில் கூடிய கமிட்டியின் யாதாஸ்தை சட்ட சபை விவாதித்தபோது, நான் ஸர் ஹாரி ஹேய்க் விருப்பத்திற் கிணங்கி அவருடன் சட்ட சபையில் இரண்டு தினங்கள் உட்கார்ந்திருந்

(28-ம் பக்கம் பார்க்க)

வெற்றிலை பாக்கு

★

தி. நா. சுப்ரமணியம்

எழுதியது

★

தாம்பூலம் தரிக்கும் வழக்கம் தென்னிந்தியாவில் மிகவும் சகஜமானது. இது ஒரு வழக்கமாக இருந்து வந்திருக்கிறதே தவிர இதன் உட்கருத்தை ஒருவரும் உணர்ந்தபாடில்லை. இந்த அனுஷ்டானத்தைப்பற்றி நம் நாட்டுக்கு விஜயம் செய்த அநேக யாத்ரீகர்கள் தங்களது புத்தகங்களில் பலவிதமாக எழுதியிருக்கின்றனர். தாங்கள் நேரில் கண்டவற்றைப் பற்றியும், அவற்றைப் பற்றித் தங்களுக்கேற்பட்ட மனோநிலை பற்றியும் அவர்கள் குறிப்பிட்டிருப்பது மிகவும் ருசிகரமாக இருக்கின்றன. இந்த சரித்திர சம்பந்தமான கட்டுரையில் வாசகர்களுக்குப் பல புதிய விஷயங்கள் வெளிப்படுவதுடன் திருப்தியும் ஏற்படும் என்பது திண்ணம்.

★

"எல்லாவற்றுள்ளும் நான் கண்ட ஒரு காட்சி மிக்க ஆச்சரியமானதாக இருந்தது. அநேகமாக ஒவ்வொருவரும் ரத்தம் போல் சிவந்திருந்த ஏதோவொன்றைத் துப்பிக் கொண்டிருந்தார்கள்: இந்நாட்டு மக்கள் தங்கள் தேசத்துக்கே நேரக்கூடிய ஏதோவொரு வியாதியால் அவதிப்படுகிறார்களோ அல்லது அவர்களுடைய பற்கள் உடைந்துவிட்டனவோ என்று எண்ணினேன்; ஆங்கிலேய ஸ்திரீ ஒருத்தியை விஷயம் என்னவென்றும் இந்நாட்டு மக்கள் தங்கள் பற்களைப் பிடுங்கிக்கொண்டு விடுவது வழக்கமாவென்றும் கேட்டேன். நான் எதைப்பற்றி விசாரிக்கிறேன் என்பதை அறிந்து கொண்டவுடன் அவள், அது ஒருவிதமான நோயும் அன்று என்பதையும், நாட்டு மொழியில் "பான்" என்றும், போர்த்துகீஸிய பாஷையில் "பெதெலெ" என்றும் வழங்கப்பெறும் ஒரு வகை சுகந்த இலையால் ஏற்படுவது என்பதையும் விளக்கிக் கூறினாள். அவள் உடனே கொஞ்சம் இலைகளைக் கொண்டு வரச் சொன்னாள்: தானும் சிலவற்றைத் தின்றாள்: எனக்கும் தின்பதற்குக் கொஞ்சம் கொடுத்தாள். அவற்றை நான் தின்றவுடன் என் தலை கிறுகிறுத்தது. நான் இறந்து விடுவேனோ என்று பயந்து விட்டேன். அது என்னைக் கீழே தள்ளியது. என்னுடைய பொலிவு மங்கியது. நான் அவஸ்தைப் பட்டேன். அவள் அதைப் பார்த்துக் கொஞ்சம் உப்பை என் வாயில் போட்டாள். நான் என் உணர்வைத் திரும்பப்பெற்றேன். அந்த இலையை முதல் தடவை சாப்பிடுபவர்களுக்கு அத்தகைய உணர்ச்சி ஏற்படுவது சகஜம் என்று அந்தச் சீமாட்டி எனக்குத் தெரிவித்தாள்."

இவ்விதம் எழுதியிருக்கிறான் ஒரு வெள்ளைக்காரன். அவன் நிக்கோலோ மனுச்சி என்னும் வெனிஸ் தேசத்து யாத்ரீகன். கி. பி. 1653-ஆம் ஆண்டில் சூரத்தில் தான் கண்டதைத் தான் இவ்விதம் வருணித்திருக்கிறான்.

மற்றவர் எழுதியவை

அவன் மட்டும் அன்று பதினாறு பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளில் கீழ் திசைக்கு வந்து சென்ற எல்லா ஐரோப்பியர்களும் அநேகமாக அதே மாதிரித்தான் எழுதியிருக்கிறார்கள்.

பதின்மூன்றும் நூற்றாண்டின் இறுதியில் (சுமார் கி. பி. 1295-ம் ஆண்டில்) நம் நாட்டுக்கு வந்து போன மார்க்கோ போலோ என்பவரும் இதைப் போலவே தான் எழுதியிருக்கிறார் வட கொங்கணம், கூர்ஜர தேசங்களைப்பற்றிக் குறிக்கும் பொழுது "அந்நாட்டு மக்களுடைய பற்கள் மிகவும் கெட்டியானவை. ஒருவகையான மூலிகையை அவர்கள் சதா மென்று கொண்டிருப்பதால் அவை அப்படியாகின்றன. அந்த மூலிகை அவர்களுடைய தோற்றத்தை வசிகரமானதாகச் செய்கிறது; உடம்புக்கும் நல்லது" என்று சொல்லியிருக்கிறார்.

தமிழ்நாட்டுக் காயல் பட்டிணத்தைப்பற்றிப் பின் வருமாறு எழுதியிருக்கிறார்:

"அந்த நகரத்து மக்கள் இந்தியாவின் இதர பாகங்களில் உள்ளவர்களைப் போலவே, சதா காலமும் தங்கள் வாயிலே 'தெம்பூல்' என்று வழங்கும் ஒரு வகை இலையைத் தரித்துக் கொண்டிருப்பார். அது அவர்களுக்கு ஒரு வழக்கமாகவும், வேட்கையாகவும் ஆகிவிட்டது. அவர்கள் எப்பொழுதும் அதை மென்று கொண்டும், அதனால் உற்பத்தியாகும் எச்சிலை உமிழ்ந்து கொண்டும் இருப்பர். அரசன், பிரபுக்கள். பெரிய மனிதர் ஆகியவர்கள் அந்த இலையைக் கர்ப்பூரம் முதலிய வாசனைத் திரவியங்களால் பாடம் செய்து சுண்ணும்பு சேர்த்துப் போடுவர். அது உடல் நலத்துக்கு மிகவும் யோக்யமானது என்று சொல்லப்படுகிறது. ஒருவன் யாரையாவது பெரிதும் அவமானப் படுத்த விரும்பினால் அவனைப் பார்க்கும்போது இந்த இலையையாவது அதன் சாற்றையாவது அவன் முகத்தில் துப்புவான். இவ்விதம் அவமானப்படுத்தப்பட்டவன் உடனே அரச சமூகத்துக்கு ஓடித் தன்னுடைய குறையைத் தெரிவித்துக் கொள்வான்..."

பழக்கத்தைப் பற்றி

வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்ளும் வழக்கத்தை அறியாத ஐரோப்பியர்கள் நம் நாட்டுக்கு வந்த காலத்தை அதைப் பார்த்து இவ்விதம் பலவிதமாக எழுதி வைத்துப் போயிருக்கிறார்கள். பலர் அதைப்பற்றி விவரமாக விசாரித்து அறிந்து கொண்டும், பலவகையான விஷயங்களைச் சேர்த்தும் எழுதி இருக்கிறார்கள்.

வெற்றிலை போடும் பழக்கம் நம் நாட்டில் மட்டுமில்லை. இந்தியாவைச் சுற்றிப் பல பிரதேசங்களிலும் இருக்கிறது. இலங்கை, பர்மா, மலேயா, ஜாவா ஸுமத்திரா முதலிய கிழக்கிந்தியத் தீவுகள், இந்து சீனா. திபேத், சீனாவின் தென் பகுதி, அப்கானிஸ்தானம் பாரஸீகத்தின் ஒரு பகுதி ஆகிய பிரதேசங்களில் வசிக்கும் மக்களில் பெரும்பாலானவர்களுக்கு இந்தப் பழக்கம் உண்டு.

இது சாதாரணமாகத் தினசரி வழக்கத்தில், இப்பொழுது காப்பி இருப்பது போன்ற ஸ்தானத்தில் நின்றுவிடவில்லை. சாஸ்திர பூர்வமான சம்மதத்தைப்பெற்றும் இருக்கிறது. தேவாராதனை முதலிய காலங்களில் வெற்றிலை பாக்கைக் கடவுளுக்குப் படைக்கிறோம். கல்யாணம் கருமாந்தரம் ஆகிய இரண்டிற்கும் வெற்றிலையை உபயோகிக்கிறோம்: ஆம் மனிதனாக ஒருவன் பிறந்தது முதற்கொண்டு அவன் வாழ் நாள் முழுவதும் அவனைத் தொடர்ந்து வருவதுடன் நில்லாமல் அவன் இறந்த பிறகு அவனைப் பின் பற்றிச் செல்கிறது இந்தச் சரக்கு.

ஆனால் இவ்வளவு மகத்துவம் வாய்க்கப்பெற்ற இந்த இலையோ பாக்கோ முதன் முதலாக உற்பத்தியான தேசம் எது என்பது நமக்குத் தெரியவில்லை. அது நம் நாட்டுக்குச் சொந்தமானதன்று என்பதை மட்டில் கூறலாம். ஆராய்ச்சியாளர்கள் வெற்றிலையைச் சாவகத்தீவில் உண்டான சரக்காகத்தான் கொள்கிறார்கள்,

அது எவ்வாறாயினும் ஐரோப்பிய பாஷைகள் பலவற்றுள்ளும் வெற்றிலை பாக்குக்காக வழங்கப்பட்டுவரும் சொற்கள் யாவும் தமிழ்ச் சொற்களினின்றும் உண்டானவைகளே. இந்தியாவிலே பிற பாகங்களில் வழங்கும் சொற்களினின்றும் ஏற்பட்டன வல்ல.

பலதரப்பட்ட பெயர்

வட நாட்டிலே வெற்றிலை பாக்கை "பான்ஸுபாரி" (பான் வெற்றிலை; ஸுபாரி பாக்கு) என்றே சொல்லுகிறார்கள். ஹிந்துஸ்தானி, வங்காளி. குஜராத்தி முதலிய பாஷைகள் யாவும் அப்படியே குறிக்கின்றன. (அராபிய பாஷையில், தன்போல் என்றும், பராசீகத்தில், "தம்போல்," "தம்பூல்" என்றும் குறிக்கிறார்கள், இவை வடமொழிப்பதமான தாம்பூலம் என்பதினின்றும் ஏற்பட்டவை) ஐரோப்பியர்கள் அந்தப் பெயரைத் தங்கள் பாஷையில் எடுத்துக் கொள்ளவில்லை. தமிழ், மலையாளப் பெயர்களான வெற்றிலை, அடைக்காய் ஆகியவற்றை எடுத்துக்கொண்டனர். போர்த்துகீஸியம், ஆங்கிலம், முதலிய பாஷைகளில்'பீடல்'என்று இப்பொழுது வழங்கும் சொல் "வெற்றிலை" என்பதன் திரிபேயாகும். வெற்றிலை என்ற சொல்லைப் பாமர மக்கள் "வெத்திலை" என்று வழங்குகிறார்கள். அதுவே பெத்தல், பெத்தல், எனக் குறிக்கப்பட்டு வந்தது. (Bettle Betele, Betel) அதே எழுத்துக்களைக் கொண்ட சொல்லைத்தான் நாம் இப்போது பீடல் என்று சொல்லுகிறோம்.

அம்மாதிரியே அடைக்காய் என்னும் பதமே, "அரிகா" என்று பாக்கைக் குறிக்கும் சொல்லாக ஏற்பட்டது. இதை நான் மட்டும் கூறவில்லை. கி. பி. 1563-ஆம் ஆண்டில் கோவா பட்டணத்தில் இருந்து மாஞ் செடிகளைப்பற்றிய நூல் ஒன்றை எழுதிய "கிரேஷியாதா ஆர்த்" என்னும் போர்த்துகீசிய ஆசிரியரும் இவ்விதமே கூறு

சரண் புகுந்த சப்மரீன்



அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் பிரிட்டிஷ் கப்பல்களிடம் ஒரு ஜர்மன் ஸப்மரீன் சரண் புகுந்தது. அது பிரிட்டிஷ் துறைமுகத்திற்கு பத்திரமாகக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது. இந்த ஸப்மரீன் தப்பியோடாமலிருக்க ஆகாய விமானங்கள் மிகவும் ஜாக்ரதையாக மேலே பறந்து வந்தன. இம்மாதிரி 13-மணி நேரம் பாதுகாப்பில் ஸப்மரீன் இருந்த பிறகு பிரிட்டிஷ் யுத்தக் கப்பல் ஒன்று ஸ்தலத்திற்கு வந்து சேர்ந்தது.

கிறார். அவர் எழுதிய நூல் "வினு விடை" உருவத்தில் எழுதப்பட்டுள்ளது: சாதாரணமான குரு சிஷ்யவினுவிடை உருவம் அல்ல, சாஸ்திர ஞானம் உள்ள ஒருவனும், உலக ஞானம் கொண்ட மற்றவனும் நடத்தும் சம்பாஷணை உருவம். ஒருவன் சாஸ்திரத்தில் மேற்கோள் காட்டிக் கூறும் ஒரு விஷயத்தை மற்றவன் "நான் என் கண்ணுல் பார்த்திருக்கிறேன்" என்று சொல்லி தூக்கி எறிந்துவிடுவான். அந்த நூலுள் பின்வருமாறு காணப்படுகின்றது:-

("சாஸ்திர ஞானம் உடையவன்) "ருவானே" மற்றப்பெயர்களை விட்டு மலையாளப் பெயரை ஏன் உபயோகிக்கவேண்டும்? கோவாவில் வழங்கும் பான் என்பதையோ அல்லது இந்திய இலை என்னும் பெயரையோ கொடுப்பதுதான் முறையாகும்.

(உலக ஞானி) "ஆர் த ர": போர்த்துகீசியர்கள் இந்தியாவில் முதன் முதலாக அறிந்த பிரதேசம் மலையாளம் தான். அதனுல்தான் அந்தப் பெயரையே சொல்லுகிறோம். போர்த்துகல் தேசத்தில் நாம் இந்தியாவுக்குப்போவதாகக் குறிக்கும் வழக்கம் கிடையாது. கள்ளிக் கோட்டைக்குப் போவதாகத் தானே சொல்லுகிறோம். கள்ளிக் கோட்டையிலிருந்துதான் மேல் நாடுகளுக்கு வேண்டிய எல்லாச் சரக்குகளும், வாசனைப் பொருள்களும் அனுப்பப்பட்டு வந்தன...."

சில காரணங்கள்

அதே ஆசிரியர் அந்த நூலின் மற்றோர் இடத்தில், "மலபாரில் அதை பாக் என்று சொல்லுவார்கள். செல்வ வந்தர்களான நாயர்கள் அதை அரெகா (அடைக்காய்) என்று சொல்லுவார்கள். அந்தப்பெயரைத் தான் போர்த்துகீஸியர்தான் எடுத்துக் கொண்டார்கள்" என்று பாக்கைப்பற்றி கூறியிருக்கிறார்.

வடமொழியில் பாக்கு பூகபலம் என்று வழங்கப் பெறும். இந்த இரண்டு சொற்களுக்கும் என்ன சம்பந்தம் என்பதை இப்பொழுது நிச்சயமாகக் கூற முடியாது.

வடமொழியில் வெற்றிலையை நாகவல்லி என்று சொல்வர். பாம்பு போன்ற கொடியின் இலை என்றே அது பொருள் படும். வெற்றிலை என்னும் சொல்லையும் மலையாளத்தில் வெறுஇலை என்று பிரிப்பர். தமிழாசிரியர்கள் வெண்மை இலை என்று பிரித்துப் புணர்ச்சி விதி கூறுவது இலக்கணம் கற்ருர் யாவரும் அறிவர்.

இவ்விதம் இந்த இலைக்கு நம் முன்னோர்கள் வேறு பெயர் கொடுக்க முடியாமல் வெறும் இலை என்றே பெயரிட்டனர் போலும்.

வெற்றிலை போட்டு மெல்லும் பொழுது பாக்கு, சுண்ணும்புடன், ஏலக்காய், ஜாதிக்காய், வால்மிளகு, கிராம்பு, கர்ப்பூரம் கத்தக்காம்பு முதலியவற்றையும் சேர்த்துப் போட்டுக்கொள்வதை மேல் நாட்டார் நன்கு கவனித்துக் குறித்து வைத்திருக்கின்றனர். வடமொழி நூலார் அவற்றுள் பஞ்ச ஸுசந்திரம் என்று ஐந்தை மட்டுமே குறிப்பிடுவர்.

தாம்பூலம் தரித்தல்

நம் நாட்டில் தாம்பூலம் தரிக்கும் வழக்கம் சென்ற இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு அதிகமாக இருந்து வருகிறது. புத்த ஜாதக கதைகளிலும், புத்த மத சம்பந்தமான பாலி புத்தகங்களிலும், ஜைன மத நூல்களிலும் அதைப்பற்றிக் கூறப்பட்டுள்ளன, அரசாங்கத்தில் வெற்றிலை பாக்கை பாதுகாக்கும் அடைப்பைக்காரன் ஓர் உயர்ந்த அதிகாரியாகக் கல் வெட்டுக்களில் குறிக்கப்பட்டிருக்கிறுன். சுஸ்ருதர் எழுதிய வைத்திய நூலிலும் வெற்றிலையின் குணத்தைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. ஹிதோபதேசத்தில் அது வாயுவைக் கண்டித்து, கபத்தை வெளிப்படுத்தி, பூச்சிகளைக் கொல்லுவதுடன், கெட்ட நாற்றத்தைப் போக்கும் என்றும், முகத்தை அழகு படுத்தி, இன்பத்தை உண்டு பண்ணும் என்றும் கூறியிருக்கிறது.

வெற்றிலையைப் பாடம் செய்யும் முறை, அதைப் போட்டுக் கொள்ளும்போது அனுஷ்டிக்கப்பட வேண்டிய விதம், வெற்றிலை வைத்துக்கொள்ளும் செல்லப் பெட்டி முதலியவை நாட்டுக்கு நாடு கொஞ்சம் கொஞ்சம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. அவற்றை விவரித்துக் கொண்டே போனுல் பெருகும். ஆகவே அதிசயமான சில செய்திகளைக் கூறுவதுடன் நிறுத்திக்கொள்வோம்.

அதிசயமான செய்திகள்

பதின்மூன்றும் நூற்றுண்டின் மத்தியில் (சுமார் கி. பி. 1250) சௌ. ஜு-குவா ஏன்னும் சீனர் எழுதி வைத்துள்ள குறிப்புக்களில் இலங்கையைப் பற்றிய பகுதியில் பின்வருமாறு காணப்படுகின்றது:

"அந்த நாட்டு மன்னன் நாள் முழுதும் பாக்கு பவழச்சுன்னம் முதலியவை கொண்ட குழம்பு போன்ற ஒன்றை மென்று கொண்டிருப்பான்...... அரசன் மென்று உமிழும் பாக்குக் குழம்பு எச்சிலைப் பெறுவதற்காகத் தங்கக் கிண்ணம் தாங்கிய ஏவலாளர் இருவர் எப்பொழுதும் அவன் கூடவே இருப்பார். அந்தக் குழம்பு எச்சிலைப் பெறுவதற்கு அந்த ஏவலாளர்கள் அரசாங்கத்துக்கு மாதவாரி ஒரு பொன் வரி செலுத்துவார்கள். அதில் கர்ப்பூரம் முதலிய விலையுயர்ந்த பொருள்கள் கலந்திருப்பதே அதற்குக்காரணமாகும்" அரசனுடைய தாம்பூல உச்சிஷ்டமும் விற்கப்பட்டு வந்தது.

பிலிப்பைன் தீவுகளில் பாக்குக்கு ஆச்சரியமான பிரயோகம் ஒன்று காணப்படுகின்றது. புருஷன் மனைவிகளுக்குள் ஒற்றுமை குலைந்து அவர்கள் பிரிந்து போக விரும்பினுல், புருஷன் தன் மனைவியிடம் மூன்று கொட்டைப் பாக்கைக் கொடுத்து விட வேண்டும். அவற்றை ஒவ்வொன்றுகக் கொடுக்கும் போது கோபப் பார்வையுடன் "ஒன்றுதலால் (தலாக்) இரண்டு தலால் மூன்று தலால், இனி இந்த உலகத்திலும் அடுத்த உலகத்திலும் நீ என்னுடைய சகோதரியன்றி வேறேயாகமாட்டாய்" என்று கூறி விட வேண்டும். அவ்வளவுதான். அவர்களுக்குத் 'தலாக்' ஆகி விட்டது.

அதே போல மனைவி தனக்கு இஷ்டமில்லாவிட்டாலும், புருஷன் மீது கோபித்துக் கொண்டிருக்கும் காலங்களிலும் அவனைப் பார்த்து "ஏன் மூன்று கொட்டைப் பாக்கைக் கொடுத்து விடு" என்று ஏசலாகவோ அதிகாரத் தோரணையிலோ கேட்பதும் உண்டு.

தாங்கள் சாப்பிட்ட பிறகு மதுபானம் செய்வதைப்போலவே கீழ் நாட்டு மக்கள் சாப்பாட்டுக்குப் பிறகு வெற்றிலை பாக்கும் போட்டு வருகிருர்கள் என்று ஐரோப்பியர்கள் கருதி வருகிருர்கள், ஆனுல் புகையிலை உற்பத்தி அதிகமாக ஆக வெற்றிலை பாக்குப்போடும் வழக்கம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது.

பிரிட்டிஷ்-ருஷ்யத் துருப்புகள்

இரானில் இருக்கும் ருஷ்யத் துருப்புகளை ஒரு பிரிட்டிஷ் தளகர்த்தர் பார்வையிடுகிருர். படத்தில் காணப்படும் டாங்கி மீது அவர் நின்று கொண்டிருக்கிருர். இப்போது டெஹரானிலிருந்து நேச தேசப் படைகள் வாபீஸ் பெற்றிருக்கின்றன. அங்குள்ள அச்சு நாட்டினர் வெளியேற்றப்பட்டதே இதற்குக காரணம்.

ஹிந்திக்கதை

சாயா

ஸ்ரீ தாராதேவி எழுதியது

"சின்ன அம்மா வந்திருக்கு!" என்றுன் வேலைக்காரன். எஜமானியம்மாள் வாசற்படியருகே வந்து நின்ருள். மோட்டாரிலிருந்து இறங்கி ஓடிவந்த இலாவைத் தாய் தழுவிக் கொண்டாள். இலா சிரித்துக்கொண்டே "அம்மா! அண்ணுவும் மன்னியும் கூட என்னுடன் வந்திருக்கிருர்கள்!" என்ருள்.

"மதனியா! அது யாரடி அது மதனி?" அதே சமயம் முகத்தை மறைத்துக் கொண்டு சாயா எஜமானியம்மாளின் பாதங்களைத் தொட்டு வணங்கினுள். பின்னுல் சந்திரமோஹனும் வந்து நின்ருன். எஜமானி ஆசீர்வாதம் செய்து கொண்டே நாட்டுப் பெண்ணின் முக்காட்டைத் திறந்தாள். சாயாவைக் கண்டதும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆனுல் சட்டென்று தன்னைச் சமாளித்துக் கொண்டு சிரித்த முகத்துடன் "கடைசியில் மாப்பிள்ளையின் வார்த்தையை உண்மையாக்கி விட்டான் சந்திரமோஹன்! என்ன இலா? அடியாரங்கே! சமேலி! ராம்கலி! ஒரு தட்டில் ஆரத்தி கரைத்துக் கொண்டு வாருங்கள்! பெண்ணையும் பிள்ளையையும் இப்படியே வா உள்ளே அழைப்பது? இன்று நாத்தனுர் மந்திரம் இருந்திருந்தால்!" என்று எல்லோரையும் கூப்பிட ஆரம்பித்தார். பிறகு செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து அவர்களை உள்ளே அழைத்துச் சென்ருள். இலா ராம்தீனைத் தனிமையில் அழைத்து "அம்மாவிடம் ஒன்றும் சொல்லவில்லையே நீ?" என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா! நீதான் சொல்லக்கூடாதென்று தடுத்திருக்கிருயே! ஆனுல் அம்மா! இது நடந்தது சரியா? எனக்கென்னவோ பயமாக இருக்கிறது" என்ருன்.

இலா சிரித்து விட்டு "இனி எதற்குப் பயம்? கல்யாணமாகி விட்டது. நீயே சொல், ராம்தீன், சாயாவை நாம் அங்கே விட்டு விட முடியுமா?" என்ருள்.

அவளுடைய பாதங்களில் தன் கைகளை வைத்து "நீ ஸாக்ஷாத் லக்ஷ்மீ தேவி! அந்தப் பெண்ணை நீ உன் மதனியாக ஆக்கிக் கொண்டபோதே..." என்று ஏதோ ஆரம்பித்தான் அவன் கண்களில் கண்ணீர் வந்து விட்டது.

சந்தோஷமாக மூன்று மாதங்கள் கழிந்தன. இலாவை அழைத்துச் செல்ல நரேந்திரன் வந்தான். "ஜீஜி! உன்னை நான் போக விடமாட்டேன்!" என்ருள் சாயா.

"சாயா! என்னைத் தடுக்காதே. நாளைக்கே திரும்பி வந்து விடு என்று சொன்னுள் மாமி!" என்ருள் இலா.

சாயா சிரித்துக் கொண்டே "அவருடைய மாற்றுந்தாயா?" என்ருள். அதேசமயம் வெளியே யாரோ இரைந்து பேசும் சப்தம் கேட்டது. இருவரும் திடுக்கிட்டனர். சாயா பயந்து நடுங்கிக் கொண்டே "இவர்...இவர்... பம்பாய் மானேஜர்..." என்ருள்.

வந்திருந்த அந்த மனிதன், "எங்கள் கம்பெனியில் இருந்த நடியை நீங்கள் அழைத்துக் கொண்டு வந்து விட்டீர்கள். அது மாத்திரமல்ல, அவளைக் கல்யாணமும் செய்து கொண்டு விட்டீர்கள். எங்களுடன் அவள் மூன்று வருஷத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிருள். நான் அவளை ஜயிலுக்கனுப்பாமல் விடப்போவதில்லை. இது என்ன நியாயம்?" என்ருன்.

சந்திரமோஹன் தலை குனிந்தபடியே பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான். நரேந்திரன் கோபத்துடன் "யார் சொன்னுர்கள், அவள் நடிகை என்று, அவள் இந்தக் கிராமத்துப் பெண். நீங்கள் கொஞ்சம் நாக்கை அடக்கிப் பேசுங்கள்!" என்ருன்.

வீட்டிலுள்ள வேலைக்காரர்களெல்லாம் வந்து கூடினர். விஷயத்தை அறிந்துகொண்டாள் எஜமானியம்மாள். அவள் முன்னுல் வந்து நின்று "இந்த மனிதனுக்குத்தான் புத்தி புல் மேயப் போய்விட்டது என்ருல் உங்களுக்குக்கென்ன வந்தது? இவர் சொல்லுவதைக் கேட்கவா இங்கு வந்து நிற்கிறீர்கள். போங்கள், சென்று அவரவர்கள் வேலையைப் பாருங்கள். நரேந்திரா! நீ பேசாமல் இரு! இவரிடம் சாயா இந்தக் கிராமத்துப் பெண் என்று சொல்லிக்கொண்டிருப்பதில் யாதொரு லாபமும் இல்லை. அவசியம் நேர்ந்தால் இதைக் கோர்ட்டில் நிரூபித்துக்கொள்ளலாம். சந்திரமோஹன்! நீ உள்ளே போ! இவர் வார்த்தையால் நாட்டுப் பெண்ணும் இலாவும் ரொம்ப பயந்து விட்டார்கள், நீ அவர்களைச் சென்று பார்!" என்ருள்.

சந்திரமோஹன் சென்ருன். எஜமானி ஒரு சோபாவில் அமர்ந்து வந்திருந்த மானேஜரையும் ஜாடையினுல் உட்காரச் சொன்னுள். அவரும் ஒரு நாற்காலியில் அமர்ந்தார்.

"நரேந்திரா! நீ இப்படி உட்கார்! சரி, இப்பொழுது சொல்!" என்ருள் எஜமானி.

நரேந்திரன் சகல விஷயங்களையும் சொன்னுன். எஜமானியினுடைய ஒரே மிரட்டலில் மானேஜர் ஓய்ந்து போனுர். பிறகு அவள் "நீர் தனியாகத்தான் வந்திருக்கிறீரா? இல்லை ஏதாவது சேனை திரட்டிக் கொண்டு வந்திருக்கிறீரா?" என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா! தனியாகத்தான் வந்திருக்கிறேன்!" என்று ஆச்சரியத்துடன் சொன்னுர் மானேஜர்.

"உம், உமது அபிப்பிராயத்தில் ஸ்டேஷன் இங்கிருந்து எவ்வளவு தூரம் இருக்கும்?"

"குறைந்தது மூன்று மைல்!"

"எங்கள்வீட்டு விலாசத்தைக் கேட்டு அறிந்து கொண்ட நீர் இந்தக் கிராமம் அல்ல, இதைச் சுற்றியுள்ள முப்பது நாற்பது கிராமங்களும் எங்களுடையது என்பதை அறிந்துகொண்டிருப்பீர்! அடே யாரடா அங்கே! அந்த கங்கு, ராமு, தீனு, மூவரைம் இங்கே அனுப்பி வை!" என்ருள்.

இரண்டு நிமிஷங்களுக்கெல்லாம் மூன்று பயில்வான்கள் அவர்கள் எதிரில் வந்து நின்ருர்கள். "சரி, சொல்லலாம்!" என்ருள் எஜமானியம்மாள்.

மானேஜருக்கு நடுக்கம் கண்டது. எஜமானியம்மாள் அவரை நோக்கி "பாபு ஸாஹேப்! இது பம்பாயல்ல, நிமிஷத்திற்குள் போலீசுக்கு டெலிபோன்செய்ய. இது கிராமம், எனது கையசைந்தால் போதும் இவர்கள் உம்மை ...ஆனுல் நான் அதை விரும்பவில்லை. சாயா உம்மிடம் ஒப்பந்தம் செய்துகொண்டாளா? எங்கே அந்தக் காகிதத்தைக் காட்டும் பார்க்கலாம். நான் உன்னுடைய கடனைத் தீர்த்துவிடுகிறேன். நீயும் இனி இங்கு வந்து அவளைத் தொந்தரவு செய்வதில்லை என்று எழுதிக் கொடுக்க வேண்டும்" என்ருள்.

மானேஜர் நடுங்கும் கைகளுடன் அந்த ஒப்பந்தத்தை எஜமானியிடம் கொடுத்தார். நரேந்திரன் ஒரு வெற்றுக் கடுதாசியை அவரிடம் கொடுத்தான்.

"நான் என்ன எழுதிக் கொடுக்க வேண்டும்?" என்று கேட்டார் மானேஜர்.

எஜமானி சற்று யோசித்துவிட்டு "சரி இருக்கட்டும். நான் உமக்கு இரண்டாயிரம் ரூபாய் கொடுக்கிறேன். பிறகு உன் ஒப்பந்தத்தைக் கிழித்து எறிந்து விடலாம்!" என்ருள்.

மானேஜர் ரூபாயை வாங்கிக் கொண்டு புறப்படும் போது வணக்கத்துடன் எஜமானியம்மாளிடம் "அம்மா! என் தவறை மன்னித்துக் கொள்ளுங்கள்! தயவு செய்து உங்கள் மோட்டாரில் என்னை ஸ்டேஷன் வரை கொண்டு சேர்த்து விடுங்கள். உங்களுடைய இந்த பயில்வான்......"என்ருர்.

எஜமானியம்மாள் சிரித்துக் கொண்டே "இந்த இரவில் எங்கே போகப்போகிறீர்? வண்டிக்கு நேரமாகி விட்டது. காலையில் போகலாம். நரேந்திரா! இவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடு!" என்று சொல்லிவிட்டு அவள் எழுந்து உள்ளே சென்ருள்.

எஜமானியம்மாளின் தயவினுல் இன்றைய பெரிய ஆபத்து நீங்கியது. எல்லோர் முகத்திலும் சந்தோஷம் பொங்கியது. ஆனுல் சாயாவின் முகம் மாத்திரம் வெளிர் தட்டிவிட்டது. "ஏன் நாம் இப்படிச் செய்தோம்? முன்பே இலாவும் நரேந்திரனும் சொன்னதை ஏன் கேட்காமல் போனேம்? ஏன் பம்பாய் சென்றேம்? ஏன் சினிமாவில் சேர்ந்தோம்? புத்திசாலியான எஜமானியம்மாள் சொல்லிய சிறு வார்த்தைகளுக்கெல்லாம் நாம் ஏன் இப்படி கோபித்துக்கொண்டோம்? அந்தப் பாழாய்ப்போன மானேஜர் இங்குமா வந்து தொலைய வேண்

"கடைசியில் மாப்பிள்ளையின் வார்த்தையை உண்மையாக்கி விட்டான் சந்திர மோஹன். என்ன இலா?" என்றள் யஜமானியம்மாள். நரேந்திரன் விரும்பிய விதமே சாயாவின் விவாகம் நடைபெற்றது. சாயா மனதிலும் மாறுதல் ஏற்பட்டது. நாடகக் கம்பெனி மானேஜர் ஒருநாள் திடீரென்று வந்து சேர்ந்தது, புது தம்பதிகளின் வாழ்க்கையைக் கெடுத்தது. அது எப்படி? சாயாவின் மனதில் பலவித எண்ணங்கள் தாண்டவமாடின: தான் செய்த காரியத்தைப்பற்றி யெல்லாம் நொந்து கொண்டாள்! முடிவு எவ்விதம்? இவ்வாரம் முடிவாகும் இக்கதை மிகவும் ருசிகரமானது. சாயாவின் வாழ்க்கையில் ஏற்பட்ட சம்பவங்கள் படிப்பவரது உள்ளத்தில் நல்லுணர்ச்சியை உதயமாக்காமல் இருக்க முடியாது.

* • • • •

★ "ஜயம்" மொழி பெயர்த்தது ★



அகில இந்திய பத்திரிகாசிரியர்கள் கமிட்டி கூட்டததிற்கு வந்த ஜனுட் ப்ரெல்வியும் மிஸ்டர் கிர்ச்சனரும் சம்பாஷிக்கின்றனர். (என். என். பி. எஸ்)

டும்? ஆஹா இந்த வீட்டிலுள்ளவர்கள் நம்மை ஏழைப்பெண் என்று சொன்னதை வருத்தமாக எடுத்துக்கொண்டோம். அவமானம் என்று எண்ணினோம். இதை விட்டுச் சென்றோம். இன்று... இன்று அதைவிட அவமானத்தை கொண்டு வந்திருக்கிறோம். அந்த துஷ்டன்! ஆஹா! அவன் என்னை சொன்னான். நடனக்காரி! வேசி! நடிகை......என்னால் கூணவருக்கும் மாமிக்கும் கூட அவமானம். இனி வேலைக்காரர்கள் என்னை என்ன எண்ணுவார்கள்? எஜமான் இந்த ஏழைப் பெண்ணை 'மணந்திராவிட்டால் இந்த அவமானம் 'ஏற்பட்டிராது என்று தான் சொல்லுவார்கள். ஆஹா! கடவுளே! என்னை உன்னிடம் அழைத்துக் கொண்டுவிடு! இனி நான் வெளியே தலைகாட்ட முடியாது. என்று பலவாறு எண்ணமிட்டாள் சாயா. அன்றிரவே கணவனை எழுப்பி "ஸ்வாமி நான் போகிறேன். இலாவையும் அம்மாவையும் கூப்பிடுங்கள்!" என்றாள்.

பயமடைந்த சந்திரமோஹன் எல்லோரையும் கூப்பிட்டான். நரேந்திரனிடம் "அப்பா! எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. இவளுக்கு என்ன ஆகிவிட்டதென்று பார்!" என்றான். நரேந்திரன் பார்த்தான் அவன் கைகள் நடுங்கின. சாயாவுக்கு ஹார்ட் பெயிலியர் ஏற்பட்டுவிட்டது. அவன் மருந்து தயாரித்துக் கொடுத்தான். சாயா ஏஜமானியிடம் "அம்மா! அந்தப் பாதகனை இங்கு கூப்பிடுங்கள்!" என்றாள்.

வேலைக்காரர்கள் மானேஜரை எழுப்பி அழைத்துக்கொண்டு வந்தார்கள். தடங்கும் குரலில் சாயா அவனிடம் "ஐயா! நீர் செய்தது முற்றிலும் சரி! இப்பொழுது என் தாய், கணவன் இவர்கள் முன்னிலையில் உண்மையைச் சொல், நான் கற்புடையவளா இல்லையா என்பதை?" என்றாள்.

மானேஜர் அழுதுகொண்டே சாயாவின் கால்களில் வீழ்ந்து "அம்மா, என்னை மன்னித்துவிடு! பணத்தாசை என்னை மனிதத் தன்மையை இழக்கச் செய்தது. நீ ஸதி! நீ தேவி! நீ கற்புக்கரசி! நான் இந்த ரூபாயை எடுத்துக்கொள்ள மாட்டேன்!" என்றார்.

இலா அழுதுகொண்டே "பின்னே ஏன் இந்தப் பொய்ப் பழியெல்லாம் சுமத்தினீர்? உம்முடைய அபாண்டத்தைத்தான் அவளால் சகித்துக் கொள்ள முடியவில்லை!" என்றாள்.

மானேஜர் அழுதுகொண்டே வெளியே சென்றார். சந்திரமோஹன் பைத்தியம் பிடித்தவனைப்போல கையைப் பிசைந்து கொண்டே, "நரேந்திரா? உனக்குக் கைராசி உண்டு. நீயே சாயாவைக் காப்பாற்று!" என்றான்.

சாயா அவன் கைகளைப் பற்றிக்கொண்டு "ஸ்வாமி! இதென்ன இது! நீங்கள் புருஷர். நீங்கள் அதைரியப்படக்கூடாது. இது உங்களுக்கு அழகல்ல. கடவுளைப் போன்ற கணவனை அடைந்தேன். கொடுத்து வைக்கவில்லை. அம்மா! ஒன்றும் தோன்றவில்லை! உங்கள் பாததூளியைக் கொடுங்கள்!......... ஜீஜி! நீயும் டாக்டரும் என் கண்முன் வந்து நில்லுங்கள்... நான்...உங்களைக் கண் குளிரப் பார்க்கிறேன்...ஸ்வாமி! உங்கள் பாததூளியைக் கொடுங்கள்..."என்றாள். ஒரு பெருமூச்சு. அவளை இவ்வுலகத்தினின்றும் பிரித்தது.

இன்றைக்கும் உங்கள் இன்ஷ்யூரன்ஸ் மிக அவசியமே!

யுத்தகால நிலைமையை முன்னிட்டு எவ்வளவோ தற்காப்புகள் அத்யாவச்யமாக ஏற்பட்டுவிட்டன. ஆனால் வாழ்க்கையில் விபத்துக்களினின்றும் பாதுகாப்பளிக்கும் இன்ஷ்யூரன்ஸ்தான், தற்சமயம் ப்ரதானமாக இருக்கிறது. இன்று இன்ஷ்யூரன்ஸிற்குள்ள அவசியம் என்றுமே இருந்ததில்லை.

யுனைடெட் இந்தியாவில் இப்பொழுதே ஒரு பாலிஸி எடுத்துக்கொண்டால் அது உங்களுக்கு அவசியமான பத்திரமும் பாதுகாப்பும் அளிக்கும். இந்தியாவில் ஸிவிலியன்களுக்கு வழங்கப்படும் எல்லா பாலிஸிகளுக்கும் பிரத்யேக சார்ஜ் ஏதுமின்றி, யுத்த அபாய பாதுகாப்பு அளிக்கப்படும்.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

"யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்" எஸ்பிளனேட், மதராஸ்.

இந்தியாவெங்கும் கிளைகளும், ஏஜன்ஸிகளும் உண்டு.

டிரஸ்டி : மதராஸ் கவர்ன்மெண்ட் அபிஷியல் டிரஸ்டி.

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் என்றுமே ஒரு முக்கியமான விஷயம். தற்சமயம் அது நமக்கு ஜீவாதாரமானது. சொற்ப வருவாயில் என்ன செய்வதென்று தயங்க வேண்டாம். அதிலேயே உங்களுக்குப் போதுமான இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்பைத் தேடிக்கொண்டு, வருங்கால வறுமைக் கவலையில்லை என்ற மன நிம்மதியை அடையலாம். உங்கள் சக்திக்கு அனுசரணையான இன்ஷ்யூரன்ஸ் பாதுகாப்புத் திட்டம் வகுக்கிறோம்.

யுனைடெட் இந்தியா
பிராவிடெண்டு அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

"யுனைடெட் இந்தியா பில்டிங்" எஸ்பிளனேட், மதராஸ.

FOR FIRE & MOTOR CAR INSURANCE:

CONSULT

UNITED INDIA FIRE & GENERAL INSURANCE CO., LTD.,

The "Streatly" 5, Mcnicholl Road, Chetput. (Temporary Office)

Phone : 4241. :: Post Box. 1207. :: Grams : "UNIGEN"

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகாமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனை ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடைபெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டுபிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன. மேலும் சில பரிச்சயங்கள் இவர்களுக்கு ஏற்படுகின்றன ராஜ லக்ஷ்மிக்கு மட்டும் ஸ்ரீ காந்தனிடம் மட்டிலாத ப்ரேமை. அவன் தன்னுடன் சகஜமாக நடந்து கொள்வதையே அவள் கோருகிறாள்.

ராஜலக்ஷ்மி கைக்காரியமாக இருந்தவள் வந்து காலருகில் விழுந்து நமஸ்காரம் செய்தாள்.

"வீட்டில் எல்லோருக்கும் ஒரு தண்டனை இட்டுவிட்டாயே!" என்றாள். பிறகு வஜ்ரானந்தனைப் பார்த்து "ஆனால், ஆனந்தா இவர் வந்து விடுவார் இன்று என்று எனக்கு எப்படியோ தோன்றிற்று" என்றாள்.

நான் சிரித்துக் கொண்டே வாசலில் வாழை மரங்களையும் தோரணத்தையும் பார்த்து, உடனேயே நான் வரப்போவது உனக்குத் தெரிந்து விட்டது என்று கண்டு கொண்டேன்!" என்றேன்.

கதவு மறைவில் நின்று கொண்டு ரதன் "அதற்காக இல்லை, பாபு, இன்று வீட்டில் பிராமண போஜனம்-வக்கிரநாதருடைய மகிமை பாருங்கள், அம்மா!—" என்று ஆரம்பித்தான்.

ராஜலக்ஷ்மி உடனே குறுக்கிட்டு" நீ ஒன்றும் வியாக்கியானம் செய்ய வேண்டாம், உன் காரியத்தைப் பார்போ!" என்றாள்.

ரதனுடைய சிவந்த முகத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே வஜ்ரானந்தன் 'உங்களுக்குத் தெரியாதா அண்ணா, ஏதாவது ஒரு காரியம் கைகூடாவிட்டால் அதனால் எவ்வளவு மனவேதனை உண்டாகிறது? தாங்க முடிவதில்லை. அதிருஷ்டம் இப்படித்தான் கூட்டி வைக்கிறது, இல்லையா தாயே!" என்றான்.

ராஜலக்ஷ்மி பதில் ஒன்றும் சொல்லவில்லை. கோபத்துடன் வெளியே போய் விட்டாள்.

ஆனந்தன் என்னைப் பார்த்து "இனி மேல் இந்த மாதிரி சொல்லிக் கொள்ளாமல் போய் விடாதீர்கள். இத்தனை நாட்களையும் அவள் எப்படிக் கடத்தினாள் என்பதைப், பார்த்திருந்தால் தான் தெரியும்–சொல்ல முடியாது" என்றான்.

அது எனக்குத் தெரிந்தது. கண்ணால் பார்க்காமலேயே அதை நான் நம்பக்கூடும். ரதனை டீயும் புகையிலையும் கொடுத்து விட்டுப் போனான்.

வஜ்ரானந்தன், "நானும்வெளியே போகிறேன், அண்ணா! இப்பொழுது நான் இங்கே உங்களுடன் இருந்தால் ஓர் ஆசாமி இனிமேல் என் முகத்தில் கூட விழிக்கமாட்டாள்!" என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே போனான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ராஜலக்ஷ்மி உள்ளேவந்து வெகு சாதாரணமான பாவத்துடன் "அந்த அறையில் வென்னீர், மடிவேஷ்டி எல்லாம் வைத்திருக்கிறேன். கை கால்களை மட்டும் அலம்பிக்கொண்டு வேறு வேஷ்டி கட்டிக்கொள், போதும் தலையில் ஜலம் விட்டுக்கொண்டால் உடம்புக்கு ஆகாது!" என்றாள்.

"எனக்கு உடம்பு ஒன்றுமில்லையே!" என்றேன்.

"இல்லாவிட்டால் போகிறது. ஆனால் எவ்வளவு நேரமாக அப்படியோ?"

"அதெல்லாம் விவரமாக உன்னிடம் சொல்ல முடியாது. உடம்பெல்லாம் எரிகிறது. கட்டாயம் ஸ்நானம் செய்தாக வேண்டும்."

"ரொம்ப அவசியமோ! சரி. நீ தனியாக இருக்கக்கூடாது. கூட நானும் வருகிறேன், வா!'; என்று சொல்லி ராஜலக்ஷ்மி சிரித்துவிட்டு "எதற்காக எனக்கும் கஷ்டம் கொடுத்து நீயும் சிரமப்படுகிறாய்? இந்த அகாலத்தில் குளிக்காவிட்டால் என்ன?" என்றாள்.

இந்த மாதிரி உத்தேசத்தை மாற்றும் சாமர்த்தியம் ராஜலக்ஷ்மியிடம் இருந்ததைப்போல நான் வேறு யாரிடத்திலும்கண்டதில்லை. பிறர் சங்கடம முழுவதையும் மாற்றி தன் இஷ்டப்படி நடந்துகொள்ளும்படிச் செய்வதில் அவள் 'காட்டும் அன்பில் யாருமே அவள் வார்த்தையைத் தட்டிச் சொல்லமுடியாது. இது சின்ன விஷயம. ஸ்நானம் செய்யாமல் நான் இருக்க வேண்டியதுதான். அவள் உடனே எனக்கு சாப்பாடு வரவழைத்தாள்.

"பிராமணர்கள் சாப்பிடு முன் நான் சாப்பிட்டு சேஷமாக்கக் கூடாது!"

ராஜலக்ஷ்மி சிரித்துக்கொண்டே "பிராமண போஜனமிருக்கட்டும், அதற்காக உன்னைப்பட்டினி போட்டு நான் ஸ்வர்க்கம் போவதற்கு வழி தேடுவதைவிட ஒரே அடியாக நரகத்திற்கே போய் விடுவேன்!" என்றாள்.

என் அருகிலேயே உட்கார்ந்து எனக்குப் பத்தியமாக ஆகாரம் செய்வித்து வைத்தாள். நான் வந்த பிறகு, அவள், தானே எனக்காகத் தன் சமையல் செய்தாள் என்று அறிந்தேன். அப்படியிருந்தும், வந்தது முதல் அவள் நடத்தையிலும் பேச்சு வார்த்தையிலும் இருந்த மாதிரி முற்றிலும் நான் அறியாததல்லவென்றாலும், புதிதாக இருந்தது. நான் சாப்பிடும்போது அது இன்றும் தெளிவாகத் தெரிந்தது. அது எப்படித் தெளிவாயிற்று, என்ன சொன்னாள் என்பதை நான் லேசாகக்கூட அறிவுறுத்த முடியவில்லை. ஒருவேளை, மனிதர்களுடைய வேதனைப் பெருக்கின் பாஷையை வெளியிட்டுக் கூற முடியாதோ என்னவோ! ராஜலக்ஷ்மி எனக்கு போஜனம் அளித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள். ஆனால் அப்பொழுது அவளுடைய நடத்தையில் முன் போன்ற கெடுபடி இல்லை; கட்டளை இல்லை; வருத்தம் நிறைந்த வேண்டுகோள் இருந்தது. நிர்ப்பந்தம் இல்லை: கெஞ்சுதல் இருந்தது. பிறர் கண்களுக்கு அது தென்படாது; ஆனால் இரண்டு நிறைவுற்ற உள்ளங்கள் ஒன்றையொன்று நோக்கிக்கொள்ளும் நிமிஷப் பார்வையில் தென்படும்

சாப்பாடு முடிந்தது.

"நான் போகட்டுமா?" என்று கேட்டாள் ராஜலக்ஷ்மி.

வெளியே அதிதிகளுக்கு மரியாதைகள் தயாராகி இருந்தன.

"போ!" என்றேன்,

எச்சில் பாத்திரங்களை எடுத்துக்கொண்டு அவள் மெதுவாக வெளியே போனாள். நான் மனமபறி கொடுத்தவனாய் அவள் போன வழியையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். நான் ராஜலக்ஷ்மியை விட்டுப் பிரிந்த தினத்தன்று அவள் இருந்ததுபோல, மறுபடியும் சந்தித்த இன்று இல்லை என்று அறிந்துகொண்டேன். முதல் நாள் முதல் அவள் உபவாஸம். அன்று ஜலபானம் கூட இல்லை. அவள் உபவாஸம் எப்பொழுதுமுடியுமென்றும் தெரியவில்லை. தர்மத்தைப் பின்பற்றும் முறையில் அவள் எந்தவிதமான கடுமையான நியமத்திற்கும் பின் வாங்கினதில்லை என்பது எனக்கு வெகு நாளாகத் தெரியும். அந்த ஊருக்கு வந்தது முதல் சுநந்தையின் சேர்க்கையால் அவளுடையநியமம் மேலும் கடுமையாகி விட்டது. அன்று அவளை சிறிது நேரம்தான் பார்க்க முடிந்தது. ஆனால்அந்தக் கடுமையான ரகசியப் பாதையில் அவள் எவ்வளவு வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தாள் என்பதைக் கண்ட பொழுது அவளுடைய, இழுக்கு வாழ்க்கையில் திரண்ட அழுக்கு முழுவதும் எவ்வளவு பெரியதாயிருந்தாலும் இனி மேல் அவளை ஒன்றும்



சமீபத்தில் மைலாப்பூர் லஸ் முனையில் இருக்கும் "ஸ்வாமிநாத விலாஸ்"த்தில் சென்னை ஒய். எம். ஐ. ஏ. கிளை ஒன்று சென்னை மேயர் ஸ்ரீ வி. சர்க்கரை செட்டியாரால் ஆரம்பித்து வைககப் பட்டது. (பி. ப. பி)

செய்ய முடியாது என்று எனக்குத் தோன்றிற்று. ஆனால் நான்? நான் அவளுடைய பாதையில் பெரியமலைபோலக் குறுக்கிட்டுத் தடுத்துக்கொண்டிருந்தேன். காரியங்களையெல்லாம் முடித்துக்கொண்டு ராஜலக்ஷ்மி ஓசைப் படாமல் என் அறைக்குள் நுழைந்த பொழுது இரவு சுமார் பத்து மணி இருக்கும். விளக்கை இறக்கி விட்டு, வெகு சாவதானமாகக் கொசுவலையைத் தொங்க விட்டு விட்டு தன் படுக்கையில் போய் படுத்துக்கொள்ளப் போனாள்.

"பிராமண சந்தர்ப்பனை வேலை தான் சாயந்திரமே முடிந்து விட்டதே, இரவு ஏன் இவ்வளவு நேரம்?" என்று நான் அவளைப் பார்த்துக் கேட்டேன்,

ராஜலக்ஷ்மி முதலில் திடுக்கிட்டுப்போய் விட்டாள். பிறகு சிரித்து விட்டு "ஐயையோ, உன் தூக்கம் கலைந்து விடக்கூடாதென்று நான் எவ்வளவு ஜாக்கிரதையாக வந்தேனே? இன்னும் தூங்கவில்லையே. விழித்துக் கொண்டிருக்கிறாயே!" என்றாள்.

"உன்னை எதிர்பார்த்துக் கொண்டு தான் விழித்திருக்கிறேன்!"

"என்னை எதிர் பார்த்தா? பின் ஏன் கூப்பிட்டனுப்பவில்லை?" என்று சொல்லிவிட்டு ராஜலக்ஷ்மி கொசுவலையின் மூலையொன்றைத் தூக்கிக்கொண்டு என் படுக்கையில் தலை மாட்டில் வந்து உட்கார்ந்துகொண்டாள். வழக்கம்போல இரண்டு கைகளாலும் என் தலை மயிரைக் கோதிக் கொண்டே "ஏன், சொல்லி அனுப்பவில்லை?" என்று கேட்டாள்.

"சொல்லி அனுப்பினால் நீ வந்துவிடுவாயா? உனக்கு எவ்வளவோ வேலை!"

"காரியம் இருக்கட்டும். நீ கூப்பிட்டனுப்பினால் வராமலிருக்கும்படியாக அவ்வளவு சக்தி எனக்கு இருக்கிறதா?"

இதற்குப்பதில் என்ன இருக்கிறது? என்னுடைய அழைப்புக்கு அவளால் பதில் சொல்லாமலிருக்கமுடியாது என்பது எனக்குத் தெரியும். ஆனால் அன்று அந்த உண்மையை உண்மையென்று மதித்து அவளை வரவழைக்க என்னால் முடியவில்லை.

"ஏன் மௌனமாக இருக்கிறாய்?" என்று கேட்டாள் ராஜலக்ஷ்மி சிறிது நேரம் கழித்து.

"யோசனை செய்கிறேன்!"

"யோசனை செய்கிறாயா? என்ன யோசனை?" என்று கேட்டுக்கொண்டே மெதுவாக என் கன்னத்தின் மேல் தன் தலையை வைத்து "என்மேல் கோபித்துக் கொண்டு நீ வீட்டைவிட்டுப் போகலாமா?" என்று முணுமுணுத்தாள்.

"கோபித்துக்கொண்டு போனேன் என்று உனக்கு எப்படித் தெரியும்?"

ராஜலக்ஷ்மி தலையை எடுக்காமல் பரபரப்புடன் "நான் கோபித்துக்கொண்டுபோனால் உன்னால் கண்டு பிடிக்கமுடியாதா?" என்றாள்.

"முடியும் தான் என்று நினைக்கிறேன்!"

"நீ நினைக்கிறாய். எனக்கு நிச்சயமாகத் தெரியும்."

நான் சிரித்து "சரி கிடக்கிறது. இதைப்பற்றி விவாதம் செய்து வெற்றி பெற நான் விரும்பவில்லை. லக்ஷ்மி! நான் தோல்வியடைவது நல்லது; நீ தோற்பது எனக்கு நல்லதல்ல!" என்றேன்.

"அது எப்பொழுது தெரிகிறதோ, பின் ஏன் பேசுகிறாய்"?

"பேசவில்லை. பேசுவதையே வெகு நாளாகவே கட்டுப்படுத்தியாகி விட்டதே!"

ராஜலக்ஷ்மி மௌனமாக இருந்தாள். முன்பெல்லாம் அவள் என்னை லேசில் விடமாட்டாள். ஆயிரம் கேள்விகள் கேட்டு என்னிடம் ஒரு யாதாஸ்து பெறுமல் விடமாட்டாள். ஆனால் இப்பொழுது அவள் மௌனம் தட்டிப் போய் உட்கார்ந்திருந்தாள். வெகு நேரம் கழித்து அவள் தலையை நிமிர்த்தி வேறு பேச்சுப்பேச ஆரம்பித்தாள்.

"நடுவில் உனக்கு ஜ்வரம் வரவில்லையா? எங்கே வந்தது? எனக்கேன் செய்தி தெரிவிக்கவில்லை?"

செய்தி அனுப்பாததற்குக் காரணம் சொன்னேன். முதலாவது அனுப்ப ஆள் கிடையாது. இரண்டாவது யார் மூலம் அனுப்புவது என்றே தெரியவில்லை. ஆனால்நடந்ததைஎல்லாம் சொன்னேன். ஜ்வரம் வந்திருந்த பொழுது எனக்கு உதவி செய்த சக்கரவர்த்தி தம்பதிகளைப்பற்றியும் அந்த அம்மாளின் அன்பைப் பற்றியும் அவர்களுடைய பரம ஏழ்மையைப் பற்றியும் சொன்னேன்.

ராஜலக்ஷ்மி உடனே கையை தூர எடுத்துக்கொண்டு "அப்படியானால் அவர்கள் செய்த உபகாரத்திற்குப் பதிலாக ஏதாவது பணம் அனுப்ப வேண்டாமா?" என்றாள்.

"இருந்தால் கொடுப்பேன். என்னிடம் இல்லையே!"

இதைக்கேட்டு ராஜலக்ஷ்மி துடி துடித்துப் போனாள். ஆனால் அவள் பணம் என் பணம் தான் என்று முன்போல என்னுடன் சண்டை போட அவள் அப்பொழுது ஆரம்பிக்கவில்லை. வாயை மூடிக்கொண்டு இருந்து விட்டாள்.

இந்த மாதிரி அவளிடம் புதிதாகக் கண்டேன், என் பேச்சைக் கேட்டு அவள் அப்படிச் சமைந்து போய் உட்கார்ந்திருந்தது எனக்கே வருத்தமாகப் போய் விட்டது. சிறிது நேரத்திற்குப் பிறகு அவள் பெருமூச்சு விட்டுவிட்டு நிமிர்ந்து உட்கார்ந்தாள். நாலாபக்கங்களிலும் சூழ்ந்து வந்த கண்ணீர் மல்கிய காரிருள் மேகத்தை அந்தப் பெருமூச்சுக் காற்றைக் கொண்டு விலக்க முயன்றாள் போலும்!

அறையிலிருந்த விளக்கின் மங்கிய ஒளியில் அவள் முகம் எனக்கு நன்றாகத் தெரியவில்லை. ஆனால் அவள் பேச ஆரம்பித்தவுடன் அவள் குரலே ஆச்சரியகரமான மாறுதல் அடைந்ததைக் கண்டேன்.

"பர்மாவிலிருந்து உன் கடிதத்திற்கு பதில் வந்து விட்டது என்ன அவசரமோ என்று ஆனந்தனை விட்டுப் படிக்கச் சொன்னேன்"

"பெரிய துரை எழுதியிருக்கிறார். நீ திரும்பிப் போனால் உன் வேலையை மறுபடியும் அளிப்பதாக எழுதியிருக்கிறார்."

"அப்படியா?"

"ஆமாம். கடிதத்தைக் கொண்டு வரட்டுமா?"

"வேண்டாம். காலையில் பார்த்துக் கொள்ளலாம்."

மறுபடியும் இருவரும் மௌனமாக உட்கார்ந்திருந்தோம். என்ன சொல்வது மேலே, எப்படி அந்த மௌனத்தைக் கலைப்பது என்று வழி தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தேன்.

திடீரென்று ஒரு சொட்டு கண்ணீர் என் கன்னத்தின் மேல் விழுந்தது.

நான் திடுக்கிட்டுப் போய் "என் மனு மஞ்சூர் ஆனதில் எனக்கென்றும் சந்தோஷமில்லை, நீ ஏன் அழுகிறாய்?" என்றேன்.

ராஜலக்ஷ்மி தன் புடவைத் தலைப்பை எடுத்துக் கண்ணீரைத் துடைத்த வண்ணம் சாவதானமாகப் பேச ஆரம்பித்தாள்.

(தொடரும்.)

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணா. ஒரு காபி அனுப்ப அணா 14 மணியார்டர் செய்யவும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

BLACK LOCK& MACARTHUR LTD., GLASGOW



வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது. வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய வீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

3 உயர்தர டானிக்குகள்

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதராஸ்.
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி)

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ராம! ஸீதாராம! ராம!—ராம! ஸீதாராம! ராம!

சரணம்

1. தப்புலென்னபோதெ மாகு கொப்பதனமு ராது மா—
யப்ப தயஜேஸி கண்ட்ல கப்பு கொனி பாலிம்பவே
2. தாபுலேக நேனு நீது ப்ராபு கோரு கொண்டிகானி
ரேபு மாபனுசு தோவ ஜூபக ராவய்ய! ப்ரோவ
3. நீலவர்ண! பாபமுல காலய மைதினி னது
ஜாலி திரசி பயமுநீ கேல யனியாது கோவே
4. வாலாயமுக க்ருபால வால! ரக்ஷிம்சு கனக
சேல! யிந்த ரிலோனது சைலாகிய்ய ஸமயமு
5. இதருலந்து மனஸுபோது வெதலு நீகு தெலியராது
கதியு மும்மாடிகி லேது க்ஷிதி நெவ்வரினி வேடபோது
6. ராம ராம! நித்ய சத்ரு பீம! பீமனுத! கத
காம! காம வைரினுத நாம! நாமதினிராவே
7. தேவதேவார்சித! ஸர்வ ஜீவ ஜீவன! மஹானு—
பாவ! பரவஜ் ரூப! பாப பாவன! ராகவ
8. மாய மாயெட வத்துரச தேயதேய விஷயாலேல
ரோயரோ யெடுப்புடு தேவ ராய ராய யீதே ஹமு
9. ராஜ ராஜ நயன! த்யாக—ராஜ ராஜ! தசரத ராம!
ராஜ ராஜ நயன! த்யாக—ராஜ ராஜ! தசரத ராம!

II

ராமஸீதாராம!	—ஸ்ரீராமா! ஸீதாராமா!
தப்புலு என்னபோதே	—நாங்கள் செய்த பிழைகளை எண்ணிப் பார்த்தால்
மாகு	—எங்களுக்கு
கொப்பதனமு ராது	—பெருந்தன்மை ஒருக்காலும் ஏற்படாது.
மாயப்ப!	—எங்கள் ஐயனே!
தயஜேஸி	—தயவு செய்து
கண்ட்ல கப்புகொனி	—கண்களை மூடிக்கொண்டு (எங்கள் பிழைகள் பொருட்படுத்தாமல்)
பாலிம்பவே	—எங்களை ரக்ஷித்தருள்வாய்.
தாபுலேக	—வேறு வழியில்லாமல்
நேனு	—நான்
நீதுப்ராபுகோரு கொண்டிகானி	—உன்னைச் சரண் புகுந்து வேண்டிக்கொண்டேன்
ரேபுமாபுஅனுசு	—இன்றைக்கு நாளைக்கு என்று காலங் கடத்தி
தோவஜூபக	—எனக்கு ஒரு வழியும் புரியாமல் செய்து நான் துயருறும்வண்ணம் செய்யாமல்
ப்ரோவராவய்யா	—என்னை ரக்ஷித்தருள வருவாய் என் ஐயனே!
நீலவர்ண!	—கருத்த திருமேனி உடையவனே!
பாபமுலகு ஆலயமுஐதினி	—பாபங்களுக்கு இருப்பிடமானவனுனேன்.
நாது ஜாலிதீர்சி	—என் கஷ்டங்களைத் தீர்த்து
பயமு நீகேலயனி	—எனக்கு பயம் ஏதும் இல்லையென்று சொல்லி அபயமளித்து
ஆது கோவே	—என்னை ஏற்று ரக்ஷித்தருள்.
க்ருபாலவால!	—கருணா மூர்த்தியே!
வாலாயமுக	—எப்பொழுதும் போல்
ரக்ஷிம்சு	—என்னை ரக்ஷித்தருள்
கனகசேல!	—பீதாம்பரத்தை தரித்தவனே
இந்தரிலோ	—இவ்வுலகில்
நாது சைலாகிய்ய	—என் கைப்பிடித்து ரக்ஷித்தருள
ஸமயமு	—இது ஏற்ற ஸமயமாகும்.
இதருலந்து	—மற்றவர்களிடம்
மனஸுபோது	—என் மனம் நாடாது.
வெதலு	—என் மனோ வேதனை
நீகு தெலியராது	—உனக்கு தெரியாது.
கதியுமும்மாடிகிலேது	—முக்காலும் எனக்கு உன்னைத் தவிர கதி வேறு யாருமில்லை.
க்ஷிதிநெவ்வரினிவேடபோது	—இவ்வுலகில் நான் எவரையும் வேண்டப்போவதில்லை.
ராம! ராம!	—ஸ்ரீராம!
நித்தியசத்ரு பீம!	—காமக்ரோதாதி ஸத்ருக்களுக்கு பயங்கரனே!
பீமனுத!	—பாண்டவர்களில் ஒருவனுன பீமசேனனுல் துதிக்கப்பட்டவனே!

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மல விரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE

CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு, பி. டி., மதராஸ்.

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி
வடிகா

காமசக்தியை விருத்தி செய்து, துரித ஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும்சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோட், மதராஸ்.

ஜயவசிகரணி

அத்ருஷ்ட தாயத்து

கிரஹசார தோஷத்தால் ஏற்படும்எல்லா கஷ்டங்களும் நீங்கி, தொழில்விருத்தி குடும்ப சுகம் முதலிய நன்மைகள் ஏற்படும்.

விலை ரூ. 2-8-0 வி. பி. 0-7-0.

காந்தி ஜோசியர், திருத்தணி.

கத காம! —காமக்ரோதம் முதலான குணங்களற்றவனே!
காமவைரினுத நாம! —பரமசிவனுல் துதிக்கப்பட்ட பெயரையுடையவனே!
நாமதினிராவே —என் மனதில் அமருவாய்.
தேவ! —தேவனே
தேவார்ச்சித! —தேவர்களால் பூஜிக்கப்பட்டவனே!
ஸர்வ ஜீவ ஜீவன! —ஸகல உயிர்களுக்கும் ஆதாரமாய் உள்ளவனே!
மஹானுபாவ! —பரமாத்ம ஸ்வரூபனே!
பாவஜ ரூப! —மன்மதனுக்கு ஸமானமான ரூபங்கொண்டவனே!
பாபபாவன ராகவ! —பாபிகளை பரிசுத்தர்களாக்கும் ராமனே
மாய மாயெட வத்துரா —உன் மாய்கை எங்களிடம் வேண்டாமடா.
தேயதேய விஷயாலு ஏல —நினைக்க நினைக்க விஷயாதிகளின் செய்கை எம்மாத்திரம்
தேவராய ராய! —தேவராஜனை இந்திரனுக்கும் மேற்பட்ட தேவனே!
ஈ தேஹமு —இம்மானிட சரீரம்
எப்புடு ரோயரோ —எச்சமயம் நசித்து விடுமோ.
ராஜ ராஜ வந்தித! —சக்கரவர்த்திகளாலும் வணங்கப்பட்டவனே!
விராஜ ராஜ! —பக்ஷிராஜனை கருடனுக்கு யஜமானனே!
ஹரே! —ஸ்ரீ மஹாவிஷ்ணுவே!
தினராஜ ராஜ நயன! —சந்த்ர ஸூர்யர்களைக் கண்களாகக் கொண்டவனே!
த்யாகராஜ ராஜ! —த்யாகராஜனுக்கு அரசன் போன்று விளங்குபவனே!
தசரத ராம! —தசரதன் மைந்தனை ஸ்ரீராமா!

III

இது திவ்ய நாம ஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் ஸ்ரீராம கருணை கிடைக்கப்பெருது தான் படும் பாட்டை நன்கு எடுத்துரைத்து, தன் பிழைகளைப் பொறுத்து ரக்ஷித்தருள வேண்டுமென பகவானை ஸ்ரீ ராமனிடம் பிரார்த்திக்கிருர்.

நீலவர்ண ! :—ஸர்வ்தர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ | அஹம் த்வா ஸர்வ பாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி மாசுச:||—என்ற கீதா வாக்கியப்படி, பாபங்களுக்கு இருப்பிடமானவனுயிருந்தாலும், எல்லாவற்றையும் துறந்து பகவானை சரணமடைந்த தன்னை பகவான் புனிதனுக்கச் செய்து ஆட்கொள்ளவில்லையே என்று வருந்துகிருர்.

வாலாயமுக:—பக்தர்களை ரக்ஷித்தருளும் ஸ்வபாவத்தைக் கைவிடாமல், எப்போதும்போல் கருணு மூர்த்தியாக விளங்கி தன்னை ரக்ஷித்தருளப் பிரார்த்திக்கிருர்.

இதருலந்து:—தன் மனம் ஸ்ரீ ராமனைத் தவிர, வேறு ஒன்றிலும் நாடாது என்ற விஷயத்தைக் குறிப்பிடுகிருர். 'நீ வண்டி தைவமு நேகான' என்ற கீர்த்தனத்தில் இதன் காரணத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

வேதல நீகு—'ஸிக்கு மாலி நாவலெதர' என்ற கீர்த்தனத்தின் மூன்ருவது சரணத்தில் இதுபோன்றே தெரிவித்துள்ளார்.

யீதேஹமு:—மானிட சரீரம் நிலையற்றதென்ற உண்மையைத் தெரிவித்துக்கொண்டு, சரீரம் நசிப்பதற்குள் தனக்குக் காக்ஷியளித்து ரக்ஷித்தருளவேண்டுமென பகவானை பிரார்த்திக்கிருர்.

IV

ராகம் சங்கராபரணம் ஆதி தாளம்

(29–வது மேள ராகம்)

பல்லவி

; மா ; கா மா ; பா ;	; தா ; நீ	ஸா நீ ஸா ;
ரா . ம வி தா	ரா ம	ரா . ம
; ஸா ; ஸநி ஸாரி ரிஸ்ஸா	; ஸா ; ஸ்ரி	ஸ நி தா பா ;
ரா ம வீ . தா . .	ரா ம .	ரா . . ம
; ஸா ; ஸா ஸநிதா நீஸா	; தநி த ரி ஸ ரி	ஸ நி தா பா ;
ரா ம வீ . . தா .	ரா . . . ம .	ரா . . ம
; கா ; மா பா தா பா ;	; கா ; மப	ம க ரீ ஸா ;
ரா ம வீ , தா	ரா ம .	ரா . . ம

(சரணங்களை இதே போன்று பாட்வும்)

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இக்கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினுர்.)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம்

கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரீஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்திஞல் நிவூர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசர்ாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

FREE! (1) How to Enjoy Married Life. (2) How to Make Various Kinds of Scented Hair Oils and Perfumes at Home at a very Cheap Cost.

Please apply at once to:—

S. PAUL & Co., Dept. S. M.
4, Hospital St., Dharamtola CALCUTTA.

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள். இதுதான் மார்க்கட்டில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri. P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur. K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro, Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER TRADE MARK REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar, Kt.
„ C. Madhavan Nair, Sir M. D. Devadoss, Kt.
„ M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa,
Gold medals from Mysore, Pudukkottai Etc. States

MANUFACTURED BY—VAIDYARATNA
PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS, 3.

விலாஸ மாற்றம்

சென்னை, மயிலாப்பூர், பஜார் ரோட்டிலிருந்த நமது ஆனந்த பற்பொடி வியாபாரத்தை தற்காலம் பின்கண்ட விலாஸத்துக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

விலாஸம்:—

வைத்திய ரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரி,
வைத்திய வித்தாச்ரமம்,
25-B, யதோத்காரி :: கீழண்டை மாடவீதி,
சின்ன காஞ்சீபுரம்.

நீதிக் கதைகள்

ரஞ்ஜித் ஸிங்கும் ஹிந்துஸ்தானமும்

ஸ்ரீ. எ. எஸ். பி. அய்யர்,
ஐ. ஸி. எஸ். எழுதியது

பஞ்சாப் தேசத்தின் சிங்கம் என்று பெயரெடுத்த ரஞ்ஜித் சிங், சீக்கியர்களுக்குள்ளிருந்த பல தலைவர்களை வென்று அடக்கியாள பல முயற்சிகளைச் செய்துவந்தான். அந்தத் தலைவர்களுடன் அவன் மும்முரமாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கும்போது யஸ்வந்த்ராவ் ஹோல்கார் என்பவர் ரஞ்ஜித் சிங்கிடம் ஓடோடியும்சென்று தன்னை ஆங்கிலேயர்களிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். மத்திய இந்தியாவிலிருந்து தன்னை ஆங்கிலேயா துரத்தி விட்டதாக அவர் சொன்னுர்.

தன்னுடைய தேசமாகிய பஞ்சாப் தேசத்தில் தான் எடுத்துக் கொண்டிருக்கும் முக்கியமான வேலையை விட்டுவிட்டு, தக்ஷிண தேசத்திற்குச் சென்று ஆபத்துக்கிடமான யுத்தத்தில் தலையிட்டுக்கொள்வதில் ரஞ்ஜித் சிங்குக்கு இஷ்டமில்லை. ரஞ்ஜித் சிங்கின் பிரதானிகளோ வேறு அபிப்பிராயம் கொண்டிருந்தனர். அவர்கள் ரஞ்ஜித் சிங்கிடம் பின் வருமாறு எடுத்துரைத்தனர்: 'யஸ்வந்த்ராவுக்குச் சகாயமாகச் சென்று ஆங்கிலேயரை எதிர்த்து நாம் போர் செய்யலாம். நம்முடைய படைவீரர்கள் அதிக தைரியம் வாய்ந்த வீரர்கள். நம்முடைய சேனையும் மிகப் பெரிய சேனை என்பதில் ஐயமில்லை. சீக்கியர்களை அடக்கியாளுவதற்கு தாங்கள் செய்யும் முயற்சியினுல் தங்களுக்கு ஒரு சிறிய தேசம்தான் கிடைக்கும். தக்ஷிணதேசத்தில் நாம் வெற்றி பெற்ருல் தஙகளுக்கு ஹிந்துஸ்தானம் முழுவதும் கிடைத்து விடும்.!

'அதனுல் என்ன பிரயோஜனம். நீங்கள் சொல்லும்படி நடக்கும் என்றே நினைத்துக் கொண்டாலும், சீக்கியர்களின் உதவியிருந்தால்தான் நான் ஹிந்துஸ்தானத்தைக் காப்பாற்றிக்கொள்ள முடியும். 'எனக்குக் கிடைக்கும் ஹிந்துஸ்தானத்தை காப்பாற்றிக்கொள்ள சீக்கியர்களின் உதவி முக்கியமாக வேண்டும். சீக்கியர்கள் என் பகக்கம் இல்லாமல், ஹிந்துஸ்தானத்தைக் கைக்கொள்ளுதல், நானே என் கழுத்திற்கு சுருக்குப்போட்டுக்கொள்வதை ஒக்கும்' என்று ரஞ்ஜித் சிங் சொன்னுர், 'ஆனல் ஆங்கிலேயர்கள் வசம் ஹிந்துஸ்தானம் மாத்திரம்தானே இருக்கிறது. அவர்கள் நாசமடையவில்லையே' என்று சொல்லி பிரதானிகள் தர்க்கித்தனர். 'ஒவ்வொரு மரமும் தனக்கு வேண்டிய ஆகாரத்தைத் தன்னுடைய வேரின் மூலமாகவே அடைய வேண்டும். என்னையும் சீக்கர்களையும் பிரித்து விடுங்கள்: இந்தியாவில் இருக்கும் ஆங்கிலேயர்களை, இங்கிலாந்திலிருக்கும் கிழக்கு இந்தியா கம்பெனியாரிடமிருந்து பிரித்து விடுங்கள்; நாங்கள் வேரற்ற மரம் போல் கீழே விழுந்துவிடுவோம்' என்று ரஞ்ஜித் சிங் பதில் சொன்னுர்.

அநியாயச் சிலவை ஒழித்தல்

கடும் பஞ்சம் உண்டாயிற்று, மழையில்லாமையால் எங்கு பார்த்தாலும், பூமி வரண்டு கிடந்தது. ஆடு மாடுகள் ஆகாரமின்றி இறந்து போய்க்கொண்டிருந்தன. ஆடு மாடுகளைக் காப்பாற்றுவது அதிக கஷ்டமாக இருந்தது. ஒரு பெரிய குடியானவனிடம் முப்பது ஜதை உழவுமாடுகள் இருந்தன. அந்தப் பஞ்ச காலத்தில், ஆடுமாடுகளையும், தன் குடும்பத்தையும் காப்பாற்றுவது அவனுக்கு அதிக கஷ்டமாக இருந்தது. மாடுகளைக் காப்பாற்றும் கஷ்டத்தை எப்படியாவது நிவர்த்திசெய்துகொள்ள அவன் தீர்மானித்தான். 'இந்த வருஷம் மாடுகளுக்கு வேலையே இல்லை. நான் ஏன் அவைகளைத் தீனிபோட்டுக் காப்பாற்ற வேண்டும். வேண்டுமென்ருல் அவை பூமியிலிருக்கும் புல் முதலியவைகளைத் தின்று பசியாற்றிக் கொள்ளட்டும்' என்று அவன் எண்ணிக்கொண்டு தன்னிடமிருந்த மாடுகளையும், வரண்டுகிடக்கும் நிலங்களுக்கு ஓட்டிவிட்டான். அவனுடைய அண்டை வீட்டுக்காரன், அவன் செய்தது தவறென்று எடுத்துக் கூறினுன். 'நமக்கு பணம் பிரதானமல்ல, நமக்கு அன்பும், கருணையும் இருக்கவேண்டும். மனிதத்தன்மையை நாம் முற்றிலும் இழந்துவிடக்கூடாது. உன்னுடைய வாயில்லாப் பிராணிகளுக்குத் தீனி போட்டுக் காப்பாற்று என்று அண்டை வீட்டுக்காரன் சொன்னுன்.' இவ்வளவுதானு, நம்முடைய தேசத்தின் தரித்திரத்திற்கு இத்தகைய கொள்கைகள் தான் காரணம். இவ்வுலகம் அபிவிருத்தியடைய வேண்டுமானுல், உலகிலுள்ள ஜனங்களுக்கு அறிவு வழிகாட்டியாக இருக்க வேண்டுமேயல்லாமல் அன்பு வழி காட்டியாக இருக்கக் கூடாது. 'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' என்னும் பழமொழியையும், 'தடியெடுத்தவன் தண்டல்காரன்' என்னும் பழமொழியையுமே, ஒருவன் முன்னேற்றமடைய வேண்டுமானுல், இக்காலத்தில் அனுசரிக்க வேண்டும். இந்தக் கொடிய பஞ்ச காலத்தில் பிழைக்க முடியாமல் இவை இறந்துபோனுல், பஞ்ச காலத்திலும் வாழக் கூடிய சக்தியுடைய மாடுகள் இயற்கையில் தோன்றும்' என்று குடியானவன் சொன்னுன். 'இந்த மாடுகள் இறந்து போனுல், உனக்கு அதிக நஷ்டம் ஏற்படுமே' என்று அண்டை வீட்டுக்காரன் சொல்லிப்பார்த்தான். 'அதைக் குறித்து நான் ஏற்கனவே ஆலோசித்தாகிவிட்டது. இந்தப் பஞ்சம் இவ்வருஷம் முழுவதும் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த வருஷம் முழுவதும் இவைகளைக் காப்பாற்றுவதற்கு, இவைகளின் விலையைப் போல இரண்டு மடங்கு பணம் எனக்கு செலவாகும். ஆதலால் இந்த மாடுகளெல்லாம் இறந்துபோனுலும், இவைகளைக் காப்பாற்றுவதற்குச் சிலவாகும் பணத்தில் பாதியைக் கொண்டு, நான் இவை போன்ற மாடுகளைப் பிறகு விலைக்கு வாங்கிக் கொள்ளக்கூடும்' என்று குடியானவன் பதில் சொல்லி விட்டான். அவனிடம் பேசுவதில் பிரயோஜனமில்லையென்று அண்டை வீட்டுக்காரன் சும்மா இருந்து விட்டான்.

அந்த மாடுகளுக்கு ஒரு புல் கூடக் கிடைக்க வில்லை. குடிப்பதற்கு ஒரு துளி ஜலம் கூடக் கிடைக்கவில்லை. ஆதலால், பசியினுலும், தாகத்தினுலும், அவை ஒவ்வொன்ருக இறந்து போயின. ஈவு இரக்கமில்லாத அந்தக் குடியானவன் அவை இறந்து போவதைக் கண்டு, மனம் வருந்தாமல் இருந்து விட்டான். அவன் கல்லைப் போல், அசையாமல் இருந்தான். 'அறிவுள்ள மனிதன், இத்தகைய மாயமான துன்பங்களைக் கண்டு சிரிக்க வேண்டும் என்று அந்தக் குடியானவன் தன் அண்டை வீட்டுக்காரனிடம் சொன்னுன் சில மாதங்கள் கழிந்தன. மழை பெய்தது. குடியானவர்கள் மறுபடியும் பயிர்த்தொழில் செய்யத் தொடங்கினர். பூமியை உழுவதற்கு, பணக்காரனை அந்தக் குடியானவனிடம் எருதுகளே இல்லாமல் போயிற்று. பஞ்சத்தினுல் அநேகம் மாடுகள் இறந்து போய்விட்டதால், மாடுகளின் விலை பத்து மடங்கு அதிகரித்துவிட்டது. நல்ல மாடுகளைப் பார்த்துவாங்குவதற்கு சில நாட்கள் சென்றன. அவன் அவ்வாறு மாடுகளை வாங்குவதற்குள், உழ வேண்டிய காலம் மீறிப் போய் விட்டது. அவனுடய நிலங்கள் சாகுபடிச் செய்யப்படாமல் மைதானமாகக் கிடந்தன. அவனுடைய அண்டை வீட்டுக்காரர்களின் நிலங்களோ சாகுபடி செய்யப்பட்டு, கதிர் ஒரு முழத்துடன் காணப்பட்டன. 'நான் என்ன அசட்டுத்தனமான காரியத்தைச் செய்துவிட்டேன். நான் என்னுடைய மாடுகளைக் காப்பாற்றியிருந்தால், இப்போது அடைந்திருக்கும் நஷ்டத்தில் ஐம்பதில் ஒரு பங்கு நஷ்டத்தைக்கூட அடைந்திருக்கமாட்டேன்' என்று சொல்லி அந்தக் குடியானவன் மனம்வருந்தினுன். 'அதுமாத்திரமல்ல. அநியாயமாக அறுபது மாடுகளைக்கொன்ற பாபமும் உன்னை அணுகியிருக்காது. எப்படியிருந்தபோதிலும் மனிதர்கள் மனிதத்தன்மையுடன் இருந்தால்,எப்பொழுதாவது சுகப்படுவார்கள் என்பதில் சந்தேகமில்லை. மனிதர்கள் எப்போதும் ரூபாய், அணு, பைசாக்களையே கணக்குப் போட்டுப்பார்த்துக்

(பின்பக்கம் பார்க்க)



மார்புக் கோளாறுகள் வராமல் தடுங்கள்
பெப்ஸ் சுவாச மாத்திரைகள் உட்கொள்ளுங்கள்.

பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான சத்து தொண்டைக்கு சமனமூட்டி, சுவாச அடைப்பை நீக்கி, ஜலதோஷம், க்ருமிகளை ஒழித்துவிடும். விலை ரூ 1.

பேப்ஸ் உட்கோள்க:
PEPS
கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

சிறுவர் கதை

★

கிருபண சிகாமணி

★

கணேசய்யர்

ஓர் ஊரில் பாஸ்கரன் என்று ஒருவன் இருந்தான். அவன் மஹா லோபி. ஒரு காசு கூடச் செலவு செய்யமாட்டான். அவனை எல்லோரும் பாஸ்கரன் என்ற அழகிய பெயரிட்டு அழைக்காமல் "அடே கிருபண சிகாமணி" என்றே கூப்பிடுவது வழக்கமாகி விட்டது.

பாஸ்கரன் இருந்த ஊரில் ஒரு அழகிய விநாயகர் கோவில் இருந்தது. அக் கோவிலின் விநாயகமூர்த்தி மிகவும் சக்தி வாய்ந்தவர். அவ்வூரார் வெள்ளிக்கிழமை தினங்களிலும், சதுர்த்தி திதிகளிலும் மூன்று மரக்கால் அரிசியை உபயோகித்துக் குழக்கட்டை செய்து அவருக்கு நிவேதனம் செய்வார்கள். ஒருநாள் பாஸ்கரன் அந்தக் கோவிலுக்குப்போயிருந்தான். அவன் மனதில் ஒரு எண்ணம் உதித்தது. உடனே விநாயகரை நோக்கி அவன் "ஹே மூஷிகவாஹநா! மோதக ஹஸ்தா! சாமர கர்ணா! விக்ந விநாயக! வேழை முகனே! நீங்கள் மாத்திரம் எனக்கு நூறு ரூபாயும் ஒரு அணுவும் கிடைக்கும்படி அருள் செய்தால் நான் உங்களுக்கு ஒரு தேங்காய் கொண்டுவந்து உடைத்து நிவேதனம் செய்கிறேன்" என்று சொல்லிப் பிரார்த்திக் கொண்டான்.

விநாயகருக்கோ ஒரு பக்கம் கோபம்! ஒரு பக்கம் நகைப்பு!

சரி! இந்தப் பயலை இவன் கேட்டபடியே கொடுத்துத் தண்டிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்.

திரும்புகையில் பாஸ்கரன் வழியில் ஒரு மூட்டை கிடக்கக் கண்டான். அதை எடுத்து அவிழ்த்துப் பார்த்தான். அதில் அப்பொழுதுதான் அச்சிலிருந்து வெளி வந்தது போன்ற நூறு ரூபாய்களும், ஒரு ஓரணா நாணயமும் இருக்கக் கண்டான். அவனுக்கு வந்த சந்தோஷமோ சொல்ல முடியாது!

பாஸ்கரன் வீட்டில் ஒரு சாரளப் பொரை உண்டு. அதில் தான் அவன் தனக்குக்கிடைத்த அரையணா காலணாக்களைப் போட்டு வைப்பது வழக்கம். இப்பொழுது இருந்த நூறு ரூபாயும் ஒரு அணுவுமல்லவோ, மூட்டை அப்படியே அதில் வைத்து அதை அடைத்து மண் பூசிச் சுண்ணம்பு அடித்துவிட்டுப் பிள்ளையாருக்கு அளிக்கத் தேங்காய் தேடப்புறப்பட்டான். கீழவீதியிலிருந்த தேங்காய் கடைக்குச் சென்று "தேங்காய்க்காரா தேங்காய் என்ன விலே?" என்று கேட்டான். அவன் "ஒரு அணு" என்றான்.

"அடே! பிள்ளையாருக்கு உடைப்பதற்கடா! முக்கால் அணுவுக்குக் கொடுக்க மாட்டாயா?" என்றான். அவன் கோபமாய் "மேற்கு வீதிக்குப் போ!" என்றான்.

பாஸ்கரனும் மேற்கு வீதி சென்று அங்கு தேங்காயின் விலே முக்கால் அணு என்றறிந்து அரையணுவுக்குக் கேட்டுத் தேங்காய்க்காரன் கோபத்தில் சொன்னபடி வடக்கு வீதி சென்று அங்கு தேங்காயை அரையணுவுக்குக் கேட்டுப் பின்னர் தெற்கு வீதி சென்று காலணுவுக்குக் கேட்டுக் கடைசியாய்க் காசு கொடாமலே தேங்காயைப் பெறத் தெற்கு வீதி தேங்காய்க் கடைக்காரன் கோபத்தில் சொன்னபடி ஆண்டித் தோட்டத்தை அடைந்தான். அங்கிருந்த ஆண்டியைப் பார்த்து "அப்பா பிள்ளையாருக்கு உடைக்க ஒரு தேங்காய் இருந்தால் கொடேன்" என்று கேட்டான்.

ஆண்டியும் "குளக்கரையின் வடகோடியிலிருக்கும் மரத்தில் ஜலப் பக்கமாய் ஒரு தேங்காய் இருக்கிறது. வேண்டுமானால் ஏறிப் பிடுங்கிக்கொள்" என்றான்.

பாஸ்கரன் தென்னே மரம் ஏறியதே இல்லை. ஆயினும் ஒரேபிடியாய் அம்மரத்தில் ஏறினான். இவனே மரத்தில் கரைப் பக்கம் இருந்தான். தேங்காயோ ஜலப் பக்கம் இருந்தது! ஒரு மட்டையைப் பிடித்துக் கொண்டு ஜலப்பக்கம் போக முயன்றான். கால் தவறி மட்டையைப் பிடித்துக்கொண்டு ஜலத்திற்கு மேல் தொங்கிக்கொண்டிருந்தான். அச்சமயம் ஒரு யானைப்பாகன் தன் யானையின்மேல் அங்கு வந்தான். யானைக்கு ஜலமென்றால் போதும். வேகமாய் ஜலத்தில் சென்றது. பயந்த பாகன் தொங்குபவனது காலைப் பிடித்துக் கொண்டான். யானையும் நகர்ந்து போய்விட்டது. ஒருவன் ஒரு ஒட்டகத்தின் மேல் வந்தான். ஒட்டகம் ஒரு வேப்ப மரத்தின் இலையைத் தின்னக் கழுத்தை நீட்டியதால் விழுந்துவிடுபவன் போலிருந்த அதன் மேலிருந்தவன் யானைப்பாகன் காலைப் பிடித்துக்கொண்டான். ஒட்டகமும் நகர்ந்துவிட்டது.

யானைப்பாகனும், ஒட்டகக்காரனும் தலைக்கு மட்டையைப் பிடித்துகொண்டிருந்தவனுக்கு உதவி வரும்வரையில் அவன் பிடியை விடாமலிருந்தால் நூறு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார்கள்.

இருநூறு ரூபாய் அடங்கியுள்ள மூட்டையின் பருமனைக் காட்ட, கிருபண சிகாமணி கைகளை விரித்தான். மூவரும் தொப்பென்று ஜலத்தில் விழுந்தார்கள்.

ஆழம் அதிகம் இராததால் மூவரும் பத்திரமாய் கரை ஏறினார்கள்.

யானைக்காரன் யானையின் மீதும் ஒட்டகக்காரன் ஒட்டகத்தின் மீதும் ஏறிச் சென்றார்கள்.

கிருபண சிகாமணி வீடு சென்றான். சாளரப் பொரை காலியாக இருந்தது. விநாயகர் வேலையே தான் அது.

(முன் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கக் கூடாது' என்றான் அடுத்த வீட்டுக்காரன். 'எனக்கு இப்போது தான் உண்மை விளங்குகிறது. இந்த அற்ப விஷயத்தை நான் அறிந்து கொள்ளாமல் போனதற்காக, இப்போது நான் எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது!' என்று குடியானவன் வருந்தினான். அந்த மாடுகள் பட்ட கஷ்டத்தைப் பார்க்கிலுமா நீ இப்போது கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறாய்? ஐயோ, பாவம்! வாயில்லா அந்த ஜீவன்கள் பசியினாலும், தாகத்தினாலும் வருந்தியல்லவோ உயிரிழந்திருக்கவேண்டும். கொடியவர் சிலர் செய்யும் பாபக்ருத்யங்களினால் தர்மாத்மாக்களும் குற்றம் ஒன்றும் செய்தறியாத பேதைகளும், பல கஷ்டங்களுக்கு ஆளாகி, இவ்வுலகில் அவஸ்தைப்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறு உலகில் நேரிடுவது சகஜம்' என்று பக்கத்து வீட்டுக்காரன் சொல்லி பரிதவித்தான்.

தேவையில்லாத திமை

'சிநேகிதர்களே, துரைத்தனம் என்பது தீமையைத் தவிர வேறில்லை. நமக்குத் தேவையில்லாத ஒரு தீமை என்றே துரைத்தனத்தைச் சொல்ல வேண்டும்' என்று ஒரு பெரிய பிரசங்கியார் பிரசங்கம் செய்தார். சட்டத்திற்கு விரோதமானதும், ராஜத்துரோகத்தைக் காட்டுவதுமான அவ்வார்த்தைகளைக் கேட்ட கூட்டத்திலுள்ள சிலர் மனக்குழப்பமடைந்தனர். பத்துப் பனிரெண்டு பேர் எழுந்திருந்து அந்தப் பிரசங்கியாரை அடிப்பதற்குச் சென்றனர். 'போலீஸ் சேவகர்களைக் கூப்பிடுங்கள்! போலீஸ் சேவகர்களைக் கூப்பிடுங்கள்!' என்று அந்த பிரசங்கியார் தம்முடைய சிநேகிதர்களிடம் சொன்னார்.

'போலீஸ் உத்தியோகஸ்தர்கள் துரைத்தனத்தாரால் ஏற்படுத்தப்பட்டவர்கள், ஆதலால் துரைத்தனம் என்பது முற்றிலும் தீமை யென்று தாங்கள் கூறியது தப்பென்பதை இப்போது அறிந்து கொள்ளுங்கள்' என்று கூட்டத்திலிருந்த ஒரு கோமாளி சொன்னான், அதைக் கேட்டு அனைவரும் கொல்லென்று சிரித்தனர்.

மூன்று அவசிய குடும்ப ஔஷதங்கள்.

இரண்டும் அணு 10. ஸ்ரீகா கஸ்தூரி கோரோஜனை மாத்திரை இரண்டும் அணு 10.

பாலக்ஸ்—பேதியாக மாத்திரை, —பாட்டில் அணு 4.
யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர்தெரு, மதராஸ் (மாடுங்கா)

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ.கு.ப.ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

இந்திரநாதன் ஸ்ரீ காந்தனைவிட வயதில் பெரியவன். ஸ்ரீ காந்தனுக்கு அவனுடைய சிநேகத்தை சம்பாதிக்க அதிக ஆவல். இந்திரனுக்கும் ஸ்ரீகாந்தனுக்கும் தொடர்பு ஏற்பட்டது. இவ்விருவர்களும் தங்களது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் சாதித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கின்றனர். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தனுக்கு அவனது பழைய நண்டனை ஜமீன்தாரிடமிருந்து அழைப்புவருகிறது. அங்கு அவன் நடனம் செய்யும் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்புகிறான்: வழியில் ஒரு சந்யாஸியை அவன் அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீகாந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி ஸ்ரீகாந்தனை தன் வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அங்கிருந்து சொஸ்தமான பின் அவன் கிளம்புகிறான். ஒரு நாள் விவாக சம்பந்தமாக ஒரு கடிதம் கிடைக்க, அதை எடுத்துக் கொண்டு அவன் கிளம்பி முடிவில் பியாரி வீட்டிற்குப் போய் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்கம் ஏற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். அவர்கள் இருவருக்குமிடையே ரசமான சம்பாஷணை நடக்கிறது.

14

யாருடைய உத்திரவின் பேரில் பங்கு எங்களுக்கு ஒரு தனி வண்டி ரிசர்வ் செய்யப் போனான் என்பதைத் தெரிந்து கொண்டதை ராஜலக்ஷ்மி காது கொடுத்துக் கேட்டுக்கொண்டிருந்தாள். இப்பொழுது அவள் தனியாக ஓரிடத்திற்குப் போகப் பயப்படுவதாக அவன் எனக்குத் தெரிவித்தான். தனக்காக அவள் ஒன்றும் அநாவசியமாகச் செலவழிக்க விரும்புகிறதில்லை யென்றும், இவ்வளவு தூரம் அவள் இணங்கி விட்டது பெரும் பாக்கியமென்றும் தெரிவித்தான். 'முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பில் போவதால் யாருக்குத் திருப்தியோ அவர்கள் போகட்டும்! எங்களுக்குத்தான் பெண்கள் வண்டியிருக்கிறதே? எதற்காக அநாவசியமாக ரயில்வேக்காரனுக்குப் பணம் கொட்டவேண்டும்' என்றாளாம்.

பங்கு சொன்னது போல் அவனுடைய தாயார் அவ்வளவு செட்டாக இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால் ஸ்திரீகளிடத்தில் அப்படிச் சொல்வதால் சண்டைதான் ஏற்படும். ஆகையால் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்தேன், பதில் ஒன்றும் சொல்லவில்லை.

பொம்மையைப் பறிகொடுத்த மனிதன் பிளாட்பாரத்தில் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து அடுத்த வண்டிக்காக காத்துகொண்டிருந்தார். அவனைத் தாண்டி கொண்டு போகும் பொழுது "எந்த ஊருக்குப் போகிறீர்கள்?" என்று கேட்டேன்,

"வர்த்தமானம்!" (பர்துவான்)

கொஞ்சம் முன்னால் போய்க் கொண்டிருந்த ராஜலக்ஷ்மி என்னிடம் மெள்ள "அப்படியானால் அவர் சிரமமில்லாமல் நம் வண்டியில் வரலாமே. அவர் வேறு டிக்கட் வாங்க வேண்டாம். அவரிடம் சொல்லேன்" என்றாள்.

"டிக்கட் முன்பே வாங்கி இருப்பார், அந்தப் பணத்தைத் திரும்பி வாங்க முடியாது"

"அது போகிறது, பிரயாணக் கஷ்டத்தையாவது மாற்றலாமல்லவா?"

"அதெல்லாம் அவர்களுக்கு வழக்கம், கஷ்டமாகத் தெரியாது."

ராஜலக்ஷ்மி அப்பொழுது கொஞ்சம் கோபமடைந்து "இல்லை இல்லை, நீ அவரிடம் கொஞ்சம் சொல், மூன்று பேருமாகப் பேசிக்கொண்டே வழிப் பிரயாணத்தைக் கழிப்போம்" என்றாள்.

அப்பொழுது அவள் தான் செய்த பிசகை அறிந்து விட்டாள் என்று எனக்குத் தோன்றிற்று. பங்குவின் முன்னிலையிலும் மற்ற வேலைக்காரர் முன்னிலையிலும் என்னுடன் தனியாக ஒரு தனிவண்டியில் ஏறுவதை மறைக்கத்தான் அவள் அப்படி முயற்சித்தாள் என்று தான் எண்ணிக்கொண்டேன். ஆனால் அவளை இன்னும் பரிசோதிக்க எண்ணி "எதற்காக உபயோகமில்லாத மனிதனை நம் வண்டியில் உடன் ஏற்றிக்கொள்ள வேண்டும்? வேண்டுமானால் என்னுடன் பேசேன், பொழுதுபோகும்" என்றேன்.

ராஜலக்ஷ்மி என்னை முறைத்துப் பார்த்து "அது எனக்குத் தெரியும். உபகாரம் செய்வதற்கு இவ்வளவு சந்தர்ப்பம் கிடைக்கிறபொழுது நான் அதைக் கைவிடமாட்டேன்" என்று சொல்லி மௌனமாகி விட்டாள்.

ஆனால் வண்டி வந்ததும் நான் அந்த ஆசாமியிடம போய் "நீங்கள் எங்கள் வண்டியில் வரலாம். வண்டியில் எங்கள் இருவரைத் தவிர வேறு யாரும் கிடையாது. பொழுது போகும்" என்றேன்.

என் ஏற்பாட்டுக்குச் சம்மதிக்க அவருக்குச் சிரமம் ஏற்படவில்லை. சொன்னது தான் தாமதம், அவர் மூட்டையை எடுத்துக் கொண்டு எங்கள் வண்டியில் வந்து ஏறிக்கொண்டார்.

வண்டி இரண்டு மூன்று ஸ்டேஷன் போவதற்குள்ளேயே ராஜலக்ஷ்மி சமத்காரமாக அவருடன் பேச்சு வார்த்தை ஆரம்பித்து விட்டாள். இன்னும் இரண்டு மூன்று போவதற்குள் அவர் வீட்டு விவகாரம், ஊர் விவகாரம் அக்கம் பக்கத்து கிராம விசேஷங்கள் எல்லாவற்றையும் கிரஹித்து விட்டாள்.

ராஜலக்ஷ்மியினுடைய குரு காசியில் பேரன் பேத்திகளுடன் இருந்தார். அவர்களுக்காக ராஜலக்ஷ்மி அநேக சாமான்கள் வாங்கி வந்திருந்தாள். வர்த்தமானம் நெருங்கியதும் அவள் பெட்டியைத் திறந்து பச்சைப் பட்டுப் புடவை ஒன்றை வெளியே எடுத்து "ஸரளாவுக்குப் பொம்மைக்குப் பதிலாக இதைக்கொடுங்கள்" என்றாள்.

முதலில் அந்த மனிதன் திடுக்கிட்டுப் போனார். பிறகு வெட்கத்துடன் பதட்டமாக "இல்லை இல்லை, அம்மா! ஸரளாவுக்கு வருகிற தடவை நான் பொம்மை வாங்கித்தருகிறேன். நீங்கள் புடவையை வைத்துக்கொள்ளுங்கள். மேலும் இது மிகவும் விலையுயர்ந்தது, அம்மா!" என்றார்.

ராஜலக்ஷ்மி புடவையை அவர் பக்கத்தில் வைத்து விட்டு "விலை அப்படி ஒன்றும் அதிகமில்லை. விலை கிடக்கிறது. இதை அவளி



ஆசை நிராசை

★

சிறு கதை - வெங்கடேசன்

'தந்தி வந்திருக்கிறது' என்று வேலைக்காரன் கூப்பிட்டதும் மோஹன் திடுக்கிட்டு எழுந்திருந்து மாடியை விட்டுக் கீழே இறங்கி ஓடி வந்தான்.

ஒரு வாரத்திற்கு முன்பு தான் சென்னையிலிருந்து 'தாயாருக்கு உடம்பு சௌக்கியமில்லை, தங்கை மாலதி பிரசவத்திற்காக இங்கே வந்திருக்கிறாள், அவளுக்கும் உடம்பு சரியில்லை' என்று லெட்டர் வந்திருந்தது. அவற்றை நினைத்து அவன் மனம் கலங்கியது;

தந்தியைக் கையில் வாங்கிப் பார்த்ததும் அவனுக்கு இருந்த கலக்கமெல்லாம் போய் தாங்க முடியாத சந்தோஷமாக மாறி விட்டது.

தந்தியைக் கண்டு பயந்து போன வேலைக்கார ராமு பல விதமாகக் கடவுளைப் பிரார்த்தனை செய்தான்; மோஹன் தந்தியைப் படித்துக் கூத்தாடுவதைப் பார்த்து அவனுக்கும் மனம் சந்தோஷமடைந்தது. அந்த சமாசாரத்தைக் கேட்க ஆவல் கொண்டவனாய் 'என்னங்க, சின்ன அம்மாவுக்குக் கொளந்தை பொறந்திருக்குங்களா?' என்று கேட்டான்.

மோஹனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது, அதைக் கொஞ்சம் அடக்கிக் கொண்டே 'இல்லேடா; எனக்குக் கலியாணம்' என்றான்.

'பொண்ணு யாருங்க? நம்ம பக்கத்துப் பங்களாவிலே இருந்து துங்களே அதாம்?'

'ஆமாம்! அதுதான். இன்னிக்கே நாம்ப ஊருக்குப் போகணும். சாமான் பெட்டி எல்லாத்தையும் சரிப் படித்தி விடு' என்று சொல்லி விட்டு மாடிக்கு ஓடினான்.

2.

நுங்கம்பாக்கத்தில் மோஹனும் ராதாவும் பக்கத்து பக்கத்து பங்களாவில் இருந்தார்கள். மோஹன் ராதாவை விட இரண்டு வயது பெரியவன். மாலதி அவன் இளைய சகோதரி. ராதா அடிக்கடி தன் தோழி மாலதியைப் பார்க்க மோஹனுடைய வீட்டிற்கு வருவாள்.

மூவரும் சிறுவராக இருக்கும் பொழுது சேர்ந்து விளையாடியவர்கள். அதில் முக்கியமாக எதிலும் ராதா மோஹனுடன் தான் இருப்பாள். மோஹன் ஐந்தாவது படிக்கும் பொழுதிலிருந்து அவளும் மாலதியுடன் அதே பள்ளிக்கூடத்தில் மூன்றாவது படித்துக் கொண்டிருந்தாள்.

மாலதியும் ராதாவும் ஸ்கூல் பைனல் பாஸ் செய்ததும் தோழிகளிருவரும் பிரிய நேரிட்டது. மாலதிக்குக் கலியாணமாயிற்று. ராதா காலேஜ் படிப்புக்குப் போனாள். அதனால் ராதாவுக்குத் தோழிக்குப் பதில் தோழன் அகப்பட்டுவிட்டான்!

ஒரு நாள் ராதாவின் குடும்பத்தாரும் மோஹனுடைய குடும்பத்தாரும் சேர்ந்து ரெட்ஹில்ஸுக்குப் போனார்கள். பெரியவர்கள் எல்லோரும் சுற்றிப் பார்ப்பதற்காகப் போனார்கள். ராதாவும மோஹனும் தனித்திருந்தார்கள்.

சிறு வயதில் வெறும் விளையாட்டாக விளையாடியது, இப்பொழுது இருவருக்கும் காதலாக மாறியது. ஆனால் இருவரில் யார் முன்பு அதை வெளியிடுவது என்பது தான் ஒரு புதிராக இருந்தது. அதற்கு இன்று ஒரு சந்தர்ப்பம் மோஹனுக்குக் கிடைத்தது. சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் மோஹன் அவளை மார்புடன் அணைத்து முத்தமிட்டுவிட்டான். அவ்வளவு தான்! அவளுக்குக் கோபம் வந்துவிட்டது. அவனை உதறித் தள்ளிவிட்டு 'இந்த மாதிரி காரியம் இனிமேல் செய்யாதே மோஹன்! இதனால் நம்மிருவருக்கும் மனஸ்தாபம் ஏற்படும்' என்றாள்.

மோஹனுக்குத் தூக்கிவாரிப் போட்டுவிட்டது. அவன் கட்டிய மனக்கோட்டை இடிந்து விழுந்தது போல் அவனுக்குத் தோன்றியது. அவள் தன்னைத் தானே கலியாணம் செய்து கொள்ளப்போகிறாள் என்ற தைரியத்தால் இந்த மாதிரி செய்தான். அவள் அவ்விதம் சொல்லுவாள் என்று அவன் கற்பனைகூடச் செய்ததில்லை. தன்னைக் கொஞ்சம் திடப்படுத்திக்கொண்டு 'ராதா நீ சொல்லுவது எனக்குப் புரியவில்லையே. எதற்காக இந்த மாதிரி சொன்னாய்?' என்று கேட்டான்.

'புரியாதுதான்! உன் நடத்தை தான் என்னை இந்தமாதிரி சொல்லச் சொன்னது' என்றாள்.

திரும்பவும் திடுக்கிட்டுப்போய் சட்டென்று பதில் ஒன்றும் சொல்லத் தெரியாதவனாகித் திகைத்துவிட்டான்.

"இவள் ஏன் இப்படிப் பிதற்றுகிறாள்? நான் இவளுக்கு என்ன தவறு செய்தேன்? என் மனமார ஒரு கெட்ட பழக்கங்களிலும் நான் ஈடுபடவில்லையே?" என்று மனதில் பலவிதமாக யோசனை செய்தான். பிறகு ராதாவின் முகத்தைப் பார்த்துக்கொண்டே 'நீ சொல்லுவதைப் பார்த்தால் ஏதோ மர்மமாக இருக்கிறது. அதை நன்றாக வெளிப்படுத்திச் சொல்லேன்' என்றான்.

ராதாவும் கொஞ்சம் சாந்தமடைந்து 'நீ அவர்களுடன் சேர்ந்துகொண்டு சிகரெட் பிடிக்கவில்லையா, அது தான்!' என்றாள்.

அப்பொழுதுதான் அவனுக்கு விஷயம் தெரிந்தது. தன் தவறு சிகரெட் பிடிப்பதுதான். அதற்காக அவள் தன்னை வெறுக்கிறாள் என்றும் தெரிந்துகொண்டான்.

'ராதா, உனக்காக அந்தப் பழக்கத்தை விட்டுவிட முடியும். அதற்காகவா என்னை உதறித் தள்ளிவிட்டாய்?' என்று கேட்டான்.

ராதாவுக்கு அவன் கொஞ்சம் பதிலைக் கேட்டதும் மனம் இளகிவிட்டது. கண்களில் கூடச் சட்டென்று கண்ணீர் வரலாயிற்று.

'சரி, உன்னை நிராகரிக்க மாட்டேன்' என்று சொல்லிக் கொண்டே அவன் மார்பில் தன் முகத்தைப் புதைத்துக்கொண்டாள்.

இந்த சமாசாரம் நடந்த சில வருஷங்களில் மோஹன் பி. ஏ. பாஸ்செய்து அக்கவுண்ட்ஸ் பரிக்ஷையும் பாஸ்செய்துவிட்டான்.

கலியாண சம்பந்தமாகப் பேச்சுக்கள் நடந்தன. முடிவில் ஏதோ காரணத்தால் ராதாவை மோஹனுக்குக் கொடுக்க அவள் தந்தை மறுத்துவிட்டார். அதனால் மோஹனுக்கு மனக்கவலை அதிகமாயிற்று.

மோஹன் ரயில்வே கம்பெனியில் அக்கவுண்டெண்டாகி டில்லிக்கு மாற்றப்பட்டான். அவன் சென்னையிலிருந்து வரும் பொழுது தன் வீட்டுப் பழய வேலைக்காரன் ராமுவையும் கூடவே கூப்பிட்டுக்கொண்டு வந்திருந்தான்.

மோஹன் டில்லிக்கு வந்தது முதல் அவன் நினைவெல்லாம் ராதாவின் பேரிலேயே இருந்து வந்தது. சென்னையிலிருந்தாலாவது தினம் ஒரு முறையேனும் அவள் முகத்தைப் பார்க்கலாமே, அவள் என்னுடன் வாய் திறந்து பேசாவிட்டாலும் அவளது கண்களாவது பேசுவாளே! என்று ஏங்கியபடி அவளுடைய புகைப்படத்தைக் கையில் வைத்துப் பார்த்துக்கொண்டே எத்தனை இரவுகள் ஏங்கித் தவித்திருப்பான் என்பது அவனுக்குத்தான் தெரியும்!

அதே ராதாவைத்தான் இன்று அடைந்துவிட்டதாகத் தந்தியைக் கண்டதும் தலைகால் தெரியாது கூத்தாடினான்.

3

வண்டியை விட்டு இறங்கினதும் தாயார் இருக்கு மிடத்திற்குப் போய் அவள் பாதங்களில் வீழ்ந்து நமஸ்காரம் செய்து எழுந்து பக்கத்தில் நின்றுகொண்டு, புன்சிரிப்புடன் 'ஏன் அம்மா எப்படி ராதாவையே எனக்கு முடித்துவிட்டீர்கள்? அவர்கள் தான் எனக்குக் கொடுக்கமாட்டேன் என்றார்களே? நீ தான் ஏதாவது தந்திரமாக முடித்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்பாவால் முடியாது. அப்பா மாத்திரமென்ன வேறு யாராலும் இது முடிகிற காரியமா?" என்று ஒரே மூச்சாகக் கேட்டுக்கொண்டே போனான்.

மோஹனின் தாயாருக்கு அவன் கேட்கும் கேள்விகள் ஒன்றும் புரியவில்லை. அவள் மனதில் ஏதேதோ கலவரம் உண்டாயிற்று. அவன் கேட்கும் கேள்விகளிலிருந்து அவன் நினைத்துக் கொண்டிருப்பது ஒன்று—இங்கு நடந்திருப்பது வேறு, என்று தெரிந்த அவள் அதை எப்படி அவனிடம் சொல்லி அவனைச் சமாதானப் படுத்துவது என்பதைப்பற்றித் திர யோசிக்கலானாள். பிறகு கொஞ்சம் நிதானித்துக் கொண்டு தன் பேச்சை அவன் மறுக்கமாட்டான் என்ற நம்பிக்கையால் 'நீ பக்கத்துப் பங்களா ராதாவை நினைத்துக் கொண்டு கேட்கிறாயா, அவளில்லை இவள்! இவள் உன் தூர பந்து சீனு மாமாவின் பெண்' என்றாள்.

அவனுடைய சந்தோஷமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது. அவன் கண் முன்னால் உலகமே சுழல்வதுபோலாகிவிட்டது. தொண்டை வரண்டது. நாக்குக் குளறியது. கால்கள் தன் சக்தியை இழந்தன—மொத்தத்தில் அவனுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. ஏதோ பெருத்த அவமானம் அடைந்தவன்போல அவன் மனம் கலங்கியது. கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது.

அவன் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு மிகுந்த கோபத்துடன் 'நான் பெரிய முட்டாளாகிவிட்டேன். என்னுடைய வாழ்க்கையில் அவளைத் தவிர வேறு பெண்களைக் கனவில் கூட நினைக்கமாட்டேன். எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவன் கால்கள் கோபத்தின் காரணமாக நடுக்க மெடுத்தன. நிற்க முடியாமல் அப்படியே பிரமித்துப் போய் உட்கார்ந்து விட்டான்.

மோஹனின் தாயாருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. தாங்கள் நினைத்து முடித்ததை இவன் இப்படி மறுப்பான் என்று அவள் சொப்பனத்திலும் நினைக்கவில்லை. தான் நினைத்ததற்கு நேர்மாறாக அவனது எதிர்பாராத கடுஞ் சொல்லைக் கேட்டு தான். கட்டிய மனக்கோட்டை இடிந்து விட்டதை நினைந்து அப்படியே திகைத்து நின்றுவிட்டாள்.

"நீ பக்கத்து பங்களா ராதாவை நினைத்துக்கொண்டிருக்கிறாயா? அவள் இல்லை இவள். இவள் உன் தூர பந்து சீனு மாமாவின் பெண்" என்றாள் மோஹனின் தாயார். அவனுடைய சந்தோஷமெல்லாம் எங்கோ பறந்தோடிவிட்டது. ஏதோ பெருத்த அவமானம் அடைந்தவன்போல் அவன் மனம் கலங்கியது. பிறகு அவன் "நான் பெரிய முட்டாளாகி விட்டேன்" என்று கூறிக் கொண்டே பிரமித்து உட்கார்ந்து விட்டான். தாயாரும் திகைத்து நின்று விட்டாள். ஆசை நிராசையாகிவிட்டது. அது எப்படி?

நவநாகரீகம்

★

ஒரு தலை அணி

★

காசினி எழுதியது

* * * 'சுலோசனா புதிசாக ஒரு திருகுப் பூப் பண்ணிக்கொண்டிருக்காள்; ரொம்பவும் நன்றாக இருக்கு! அதை நீங்கள் யாராவது பார்த்தீர்களோ?' என்று மாலினி கேட்டாள்.

'இல்லையே? எப்படி இருக்கு? என்ன தினுசு?' என்று பங்கஜம் ஆவலுடன் பதில் சொன்னாள்.

'நானும்தான் பார்த்தேன்! அதை எப்படித்திருகுப்பூ என்று சொல்லலாம்? பின்னலில் திருகிக்கொண்டால் திருகுப் பூ; இது கொண்டை ஊசினா?' என்று கமலினி ஆக்ஷேபித்தாள்.

'எந்தப் பேர் சொன்னால் என்ன? நகை எப்படி இருந்தது? சொல்லுங்கோளேன்!' என்று பங்கஜம் கேட்டாள்.

'சுலோசனா ஒரு புதிய தினுசில்தான் செய்துகொண்டிருக்கிறாள்; நன்றாகத்தான் இருந்தது!' என்று சொல்லி நளினா தேவி நிறுத்தவே பங்கஜத்திற்கு ஆத்திரம் பொறுக்க முடியவில்லை:—'நீங்களாவது சொல்லுங்கோளேன்!' என்று என் பக்கம் திரும்பினாள்.

சுலோசனா பண்ணிக் கொண்டிருந்த கொண்டை ஊசி இவர்கள் சொன்ன மாதிரிப் புதிய தினுசாகத்தான் இருந்தது. இவளுக்கு தலையில் மயிர் நன்றாக அடர்ந்து இருக்கும். இதை ஒரு முறுக்கு முறுக்கிச் சற்றே தூக்கின மாதிரியில் பிச்சடா போட்டுக் கொள்ளுவாள். அப்படியும் காது வரை நீண்டு பெரிய கொண்டையாகத்தான் இருக்கும்.

இந்தக் கொண்டையைப் பூ வைத்துச் சுற்றின மாதிரியில் இவள் கொண்டை ஊசிசெய்து கொண்டிருக்கிறாள். மல்லி, சிறிய ஜெவந்தி, அசோகா, முதலிய புஷ்பங்களையும், இலைகள், மொட்டுகளையும் சேர்த்துப் பின்னின மாதிரியில் இது செய்யப் பட்டிருக்கிறது. பூக்களுக்கும் இலைகளுக்கும் தகுந்த மாதிரியில் இனுமலில் வர்ணம் பூசி இருக்கிறது. ஒரு சாண் நீளத்துக்கு மேல் இது நீண்டு இருப்பதுடன், பிச்சடாவின் மேல் படிந்து நிற்கும்படி, வளைவாகவும் இருக்கிறது. அகலம் அதிகமில்லை: தொடுத்த மல்லி சரம் அகலம்தான் இருக்கிறது. வளைவின் இரண்டு ஓரங்களிலும், நடுவிலுமாக மூன்று சிறிய கொண்டை ஊசிகள் பொருந்தி இருக்கிறது. சொருகிக்கொண்டால் அப்படியே பூச்சரம் வைத்த மாதிரியில் பிச்சடாவின் மேல் நிற்கும்.

ஐந்து பவுன்கள் ஆச்சு என்பதை மட்டும் சுலோசனா சான்னாள். கூலி தனக்குத் தெரியாது என்று சாதித்து விட்டாள். என்ன கூலி கொடுத்திருந்தாலும் தகும் என்று தான் சொல்ல வேண்டும். நகை அவ்வளவு நாசூக்காக, நேர்த்தியாக இருந்தது.

பயம் ஏன்?

'உயிருக்கு பயந்து எத்தனை கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு இப்படி ஜனங்கள் ஓடு, ஓடு என்று ஓடுகிறார்கள்! இந்த பயம் ஏன்?' என்று பங்கஜம் திடீரென்று ஒரு கேள்வி கேட்டாள்.

'நன்னா இருக்குப்போ உன் சமத்து! உயிர் வெல்லம் இல்லையா? அது போய் விட்டால் அப்புறம் என்னத்தைக் கண்டோம்? உயிரது போன உடலது தன்னைக் காலும் ஆற்றும்—!' என்று என் அத்தை சொல்லிக்கொண்டிருக்கும் போதே:—

'அப்படி என்றால் சாவுடன் நின்று விடுவதில்லை! ஆத்மா நிரந்தரமாக இருக்கு! உடல் ஒரு சட்டை மாதிரியில் என்று எதுக்காகச் சொல்லணமாம்!' என்று பங்கஜம் குறுக்கிட்டாள்.

'ஆத்மா அழிவற்ற பொருள் தான்! இல்லை என்று சொல்ல முடியுமா? ஆனால் இந்த உடல் மூலம் தானே அது தன் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியும்? அது தான் உடலை இழக்கும்படி நேர்ந்தால் ஆத்மா தவியாத் தவிக்கிறது! எப்படியாவது உடலைக் காப்பாத்த வழி தேடரது!' என்றாள் என் அத்தை.

'இந்த ஆத்மாவுக்குத்தான் தனக்கு அழிவில்லை என்பது தெரியுமே? சாவு உடலுக்குத் தானே? மேலும் இந்த அழிவில்லா ஆத்மாவுக்கு, இத்தனை ஜன்மங்கள் எடுத்த பின்னுமா தான் செத்துச் செத்துப் பிறக்கணும் என்பது தெரியாது?' என்று மாலினி பங்கஜம் கக்ஷியில் சேர்ந்துகொண்டாள்.

'ஆமாம்னு! இயற்கையில் நமக்குள் ஏற்பட்டிருக்கும் தற்காப்பு சக்தி, மரணம் ஏற்பட்டால் ஒரே முடிவுதான் என்பதை ஓயாமல் சொல்லிக் கொண்டே இருக்கு; இதுதான் மரண பயத்தின் காரணம்! ஆத்மாவாவது சத்துமா ஆவது' என்று கமலினி ஒரு போடு போட்டாள்.

அத்தைக்கு ஏற்பட்ட பிரமிப்பில் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. திகைத்தே போனாள். இதற்குள் 'அதுதான் சரி; இல்லாவிட்டால், நல்ல வேளை இந்த உடல் பாரம் தீர்ந்தது! ஆவி ரூபமாகக் கொஞ்ச நாள் சுயேச்சையாகத் திரியலாமே என்று ஆத்மா சந்தோஷப்படாதோ? ஏன் பயப்படும்?' என்றாள் பங்கஜம்.

'இப்படி உலகம் முழுக்க யுத்தம் மூண்டு, எல்லாம் எரிந்து சாம்பலாவானேன்! என்ன காரணம் என்று யோசித்தேன். புரிஞ்சுது! ஹிந்துக்குடும்பங்களில் பிறந்து வளர்ந்த பெண்களே இப்படிச் சொன்னால் ஏன், உலக பாரம் தீர, பகவான் ஆக்கிரமிக்க மாட்டார்?' என்றாள் என் அத்தை.

ஒரு ஊறுகாய்

இந்த வேதாந்த தர்க்கம், எங்கேயாவது மனஸ்தாபத்தில் முடியப் போகிறதே என்று பேச்சை மாற்றினேன். சில நாட்களுக்கு முன் ஒரு சிநேகிதி வீட்டில் போட்டிருந்த அரிநெல்லிக்காய் ஊறுகாயைப்பற்றி நான் சொல்லவே, இவர்கள் கவனம் (புதிய தினுசு என்ற மாத்திரம்) இதில் திரும்பி விட்டது.

இவர்கள் வீட்டில் அரிநெல்லிக்காய் காய்ச்சிருந்ததாம். சமையல்க்காரனை ஊறுகாய் போடச் சொன்னாளாம். அவனுக்கு அன்று ஏதோ சோம்பலாக இருக்கவே, இதை அலம்பி மாங்காய் ஜாடியில் போட்டு விட்டானும், அதாவ்து வடு மாங்காய் ஊறுகாய் போட்டிருந்தார்களாம். வடு கொஞ்சம் ஆகவே தண்ணீர் அதிகம் பாக்கி இருந்தாம், பாக்கி வடு கெட்டுவிடுமே என்று அவனை வைதார்களாம். இரண்டு தினங் தினங்கள் கழித்து, நெல்லிக்காய் ஊறுகாய் புதிய மணமாக, ருசியாக இருக்கக் கண்டார்களாம். எவ்வளவு ருசியாக இருந்தது என்றால், அரிநெல்லி ஊரப்போட என்றே, வடு மாங்காய் ஊறுகாய் போட்டுத் தண்ணீர் தயாரிக்கலாம் போல் இருந்ததாம். நீங்கள் தான் ஜாடி, ஜாடியாக வடு போட்டிருப்பீர்களே இதில் கொஞ்சம் அரிநெல்லிக்காயை ஊறப் போட்டு என்னமாக இருக்கு என்று பார். மற்றைய விவரம் அடுத்த கடிதத்தில்.

ரிடயர்ட் போலிஸ் டிபுடி சூபரண்ட் மணவாசி ஸ்ரீ பி. ஸ்ரீநிவாஸய்யங்கார் தௌஹித்ரி சௌ. சுகந்தாவுக்கும், ராஜஸேவாஸக்த திவான்பஹதூர் டாக்டர் எஸ் கிருஷ்ணசாமி அய்யங்கார் புத்ரன் சி. பார்த்தசாரதிக்கும் சமீபத்தில் திருச்சியில் விவாஹம் நடைபெற்றது.

சங்கீத ஆசிரியர் ஸ்ரீ கே. ஆர். ஐயராமனுக்கும், சௌ. ருக்மணிக்கும சமீபத்தில் வெள்ளூர் கிராமத்தில் விவாகம் நடந்தது.

சங்கீத விதவான ஸ்ரீ கே. ஆர். குமாரசாமிக்கும் சௌ. சந்திரவல்லிக்கும் சமீபத்தில் வெள்ளூரில் விவாகம் நடைபெற்றது.

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ வித விதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தல் ஜோடிக்கு முன்னர் கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,

ஆர். எஸ். புரம் — கோயமுத்தூர்.

பிர்லா மாளிகைக்கு

மஹாத்மா காந்தி பம்பாயில் பிர்லா மாளிகையில் வந்திறங்கினர். முதலில் அங்கிருந்த ஸ்திரீகளைக் குசலப்ரச்னம் செய்தபோது மேற்படி படம் பிடிக்கப்பட்டது.

மகாத்மாவுடன்

பேட்டி விவரம்

"தீங்கான கொள்கை"

★

"தற்கொலைக்கொப்பானது நாசகாரியம்"

★

டாக்டர் கிரேடி கூறும் விவரம்

பம்பாயிலுள்ள அமெரிக்கத் தொழில் நிபுணர் கோஷ்டித் தலைவர் டாக்டர் கிரேடி காந்திஜியைக் கண்டு சம்பாஷித்தார். காந்திஜியிடம் டாக்டர் கிரேடி தாங்கள் வந்துள்ள காரணத்தை விளக்கி இந்திய விஷயங்களைப்பற்றி அமெரிக்கரின் கருத்தின்னதென்பதையும் எடுத்துச் சொன்னார். அவர் இதைப் பத்திரிகா நிருபர்களிடம் பின் கண்டவிதம் சொன்னார்:—

உலகிலேயே சிறந்த ஒருவரான மகாத்மாவைக் கண்டது விசேஷம். இதற்கு முன் மகாத்மாவை நான் நேரில் பார்த்ததில்லை. ஸினிமா படத்தில் தான் அவரைப் பார்த்தேன். மகாத்மா விஷயத்தில் என் மனைவி மிக்க பிரேமை கொண்டவள். நான் அவரை நேரில் கண்டு எனது வணக்கத்தைச் செலுத்த விரும்பினேன். அதற்காகத் தான் இப்போது அவரைக் கண்டேன்.

நாங்கள் இருவரும் கலந்து பேசினோம். இதுவரை சொல்லாத ஒன்றையும் அவர் என்னிடம் புதிதாகச் சொல்லவில்லை. யுத்தத்துக்குப் பின் இந்தியாவின் கைத்தொழில் நிலை எவ்விதம் இருக்குமென்பதைப்பற்றியும் நாங்கள் பேசினோம். இந்த யுத்தத்தில் இந்தியா இன்னும் அதிகமாக ஈடுபடவேண்டுமென்ற எங்கள் கருத்தையும் நாங்கள் மகாத்மாவிடம் எடுத்துச் சொன்னோம். பிற்கால உலகநிலை, சாமாதானத்தையும் நாகரீகத்தையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என மிஸ்டர் ரூஸ்வெல்ட் அபிப்பிராயப்படுகிறார். அவ்விஷயத்தில் மகாத்மாவுக்கும் அவருக்கும் ஒருமித்த அபிப்பிராயம் இருக்கிறது.

* * *

நாசவேலைக்கு எதிர்ப்பு

"பயிர்கள், உணவு, தண்ணீர் முதலியவை போன்ற பொது ஜனங்களுக்கு உபயோகமாக உள்ள சாதனங்கள் விஷயத்தில் நாசவேலைக் கொள்கை அநுஷ்டிக்கப்பட்டால் அதை நீங்கள் எதிர்ப்பீர்களா?" என்று பத்திரிகைப் பிரதிநிதிகள் பம்பாயில் மகாத்மாஜியைக் கேட்டனர்.

இதற்கு காந்திஜி, "ஆமாம் கண்டிப்பாக அதை நான் எதிர்ப்பேன். ஏனெனில் அக்கொள்கை தீங்கானது; தற்கொலைக்கொப்பானது; அபாவசியமுமானது" என்று பதிலளித்தார்.

ஆனால் யுத்த தளவாட தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட மட்டில் மகாத்மா விலக்கு காட்டினர். இவை அழிக்கப்படலாமென்றும், ஆயினும் தம்முடைய திட்டத்தில் யுத்த தளவாடங்களுக்கும் அவற்றைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளுக்கும் இடமே கிடையாதென்றும் அவர் உரைத்தார்.

மகாத்மா தமது பேட்டியில் மேலும் கூறியதாவது:—

"இந்தியா பலாத்காரத்தில் நம்பிக்கை கொண்டாலும் சரி, அல்லது அஹிம்சையில் நம்பிக்கை கொண்டாலும் சரி ரஷ்யர் அல்லது சீனர் என்ன செய்கின்றனரோ அதைப் பின்பற்றுவதை நான் ஆதரிக்கவில்லை. வேறு ஏதோ ஒரு தேசம் மேற்கண்ட முறைகளை அனுஷ்டிக்கிறதென்பதற்காக அம்முறைகள் காட்டுமிராண்டித்தனமானவை என்பதே என் கருத்து. நான் அவற்றைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை.

எதிரிகள் இங்கு வந்து பயிர் பச்சைகளைப் பயன்படுத்திக் கொள்வார்களானால் இவற்றைக் காக்க எனக்கு இஷ்டமில்லையாதலால், நான் இவற்றை அப்படியே விட்டுவிடலாம். அதன் மூலம் எதிரி கொழுப்பதைப்பற்றியோ அல்லது தாகசாந்தி செய்து கொள்ளுவது பற்றியோ எனக்குக் கவலையில்லை.

பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்க நான் அனுமதிக்கப்படுகின்றேனா என்பதை நான் கூர்ந்து கவனித்து வருகிறேன்; இந்த என்னுடைய கோரிக்கை த்வேஷத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல என்பதையும் எடுத்துக்காட்ட நான் முயல்கிறேன். பகை உணர்ச்சியே என்னிடம் கிடையாது. ரொம்ப சரியான காரியத்தையே நான் செய்திருக்கிறேன். எல்லோரது நன்மை

பம்பாய் ஸ்டேஷன் வந்து சேர்ந்தார்

மஹாத்மாஜி சென்றவாரம் பம்பாய் வந்து சேர்ந்தார். ரயில் வண்டியிலிருந்து அவர் கீழே இறங்கும் காட்சியை படத்தில் பார்க்கலாம். மஹாத்மாஜியை வரவேற்க அநேகர் அங்கு கூடியிருந்தனர்.

யையும் கருதியே நான் அங்ஙனம் செய்திருக்கிறேன் அது சிநேக பூர்வமான காரியமே. நான் வெகு ஜாக்கிரதையாகவே நடந்துகொள்ளுகிறேன். முன்பின் யோசியாமல் நடந்துகொள்ளவில்லை. ஆனால் ஒரு விஷயம். மிகுந்த மன உறுதியுடனே நடந்து வருகிறேன்.

அராஜகத்தைப் பற்றி நான் பிரஸ்தாபித்திருக்கிறேன். ஒழுங்கான அராஜகத்திலேயே இப்பொழுது நாம் இருந்து வருகிறோம். இதுவே எனது திடமான அபிப்பிராயம். இந்தியாவில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்ஷியை இந்தியாவின் நன்மையை வளர்க்கும் ஆக்ஷி என்று கூறுவது தவறாகும்; ஆகவே ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவுமுள்ள அராஜகம் ஒழிய வேண்டும். இதன் பலனாக சட்ட விரோதமான காரியங்களே நடக்கும்படியான நிலைமை ஏற்படுமாயின் 'அதன் விளைவுகளுக்கு நான் தயார். 22 வருஷங்களாக அஹிம்ஸையை இந்தியாவுக்குப் போதித்துவந்திருப்பது வீண் போகாதென்றும், குழப்பம் மூலம் ஜனங்கள் ஒழுங்கை நிலைநாட்டிக் கொள்ளுவரென்றும் நான் நம்புகிறேன்.

ஆகவே சிறந்த முயற்சிகளெல்லாம் வீணாகுமாயின் தங்கள் சொத்துக்கள் அழிக்கப்படுவதை எதிர்க்கும்படி கண்டிப்பாக நான் ஜனங்களுக்குச் சொல்லுவேன்."

* * * *

ஹரிஜனைத் தடுத்தால்?

"தாங்கள் மிக்க கடுமையாக எழுதுகிறீர்கள்; தாங்கள் கூறுவது போல் பொது ஜனங்கள் நடக்க ஆரம்பித்தால், யுத்த ஏற்பாடுகளுக்குத் தடை ஏற்படும் என்பதைத் தாங்கள் அறியவேண்டும். தாங்கள் இவ்விதம் எழுதுவதைக் கவர்ன்மெண்டார் அனுமதிக்கமாட்டார்கள். அவர்கள் அனுமதித்தால் பிரிட்டிஷார் தான் இவ்வளவு தாராள புத்தி காட்ட முடியும் என்பதைத் தாங்களே ஒப்புக் கொள்ளுவீர்கள். 'ஹரிஜன்' பத்திரிகையைத் தடுத்துவிட்டால் தாங்கள் என்ன செய்வீர்கள்?" இவ்விதம் ஒரு நிருபர் மகாத்மாவுக்கு எழுதினர். அதற்கு மகாத்மா பின் வருமாறு "ஹரிஜன்" பத்திரிகையில் பதில் எழுதியிருக்கிறார்.

"எந்தக் கவர்ன்மெண்டும் தாராளபுத்தி காட்ட முடியாது. ஒருவர் அவருக்கு அசவுகரியம் நேர்ந்தாலும் அதைக் கவனிக்காமல் ஒரு காரியம் செய்வது தான் தாராள புத்தி காட்டுவதாகும். சர்க்கார் இவ்விதம் செய்து தங்களுக்கு அசவுகரியத்தைத் தேடிக்கொள்ள மாட்டார்கள். சர்க்கார் நியாயமாக நடக்காத காலத்திலும் தாங்கள் தாராளபுத்தி காட்டியதாகச் சொல்லி எப்போதும் பொதுஜனங்களை நம்பும்படி செய்து விடுகிறார்கள். 'நியாயம்' என்பது கொடுக்க வேண்டிய ஒரு கடனைப் போன்றது. அதைத் தீர்த்தாக வேண்டும். ஆகவே சர்க்கார் ஹரிஜன் வழக்கப்படி நடந்து வர அநுமதித்தால், அவர்கள் அதுவே சரியான வழியென நினைப்பதாகத் தான் அர்த்தம். அதை அனுமதிப்பது தவறு எனத் தோன்றினால் அதைத் தடுத்துவிட அவர்கள் சற்றும் தயங்கமாட்டார்கள்.

மறுபடியும் நான் 'ஹரிஜன்' பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தபோது சர்க்கார் தடுத்தாலும் அதைப் பிடிவாதமாக நான் வெளியிடப் போவதாகச் சொல்லவில்லை. சர்க்கார் தடுக்கவிரும்பினால் நான் அதைப் பிரசுரிக்காமல் நிறுத்தி விடுவேன். சர்க்கார் அதைத்தடுத்தால் அதனால் பொது ஜனங்களுக்குத்தான் நஷ்டம். நான்வெளியிடும் மூன்று வாரப் பத்திரிகைகள் போக. லக்ஷ்மணபுரியிலும், லாகூரிலும், வர்தாவிலும் உருது பாஷையிலும், மராத்தி பாஷையிலும் ஹரிஜன் வியாசங்கள் அநுமதியுடன் மொழி பெயர்க்கப்பட்டு வெளியிடப்படுகின்றன. தெலுங்கிலும் ஓரியா பாஷையிலும்கூட வெளியிடப்படுகின்றன. முன்னதாகவே அவர்களுக்கு நான் வியாசங்களை அனுப்பிவிடுகிறேன். வாரந்தோறும் மற்றும் பல பத்திரிகைகளும் இந்த வியாசங்களை ஆங்காங்கு மொழிபெயர்த்து வெளியிடுகின்றன. அவ்விதம் பலராலும் விரும்பப்படும் ஒரு வாரப் பத்திரிகையை நடக்க அநுமதிப்பதில் தாராளபுத்தி எதுவுமில்லை: நான் எழுதும் வியாசங்களால் யுத்த ஏற்பாடுகளுக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது. அதற்கு மாறாகக் காரியம் நடந்தால் வேறு எங்கோ தவறிருப்பது நிச்சயம். அதற்காக ஹரிஜனை நிறுத்திப் பயனில்லை: அதில் வெளியிடப்படும் குறைகளைப் பரிகரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். நான் எழுதும் வியாசங்கள் யுத்த ஏற்பாடுகளுக்குப் பேருதவியைச் செய்வதாகவே நான் கருதுகிறேன். குறைகளை எடுத்துச்சொல்வதால் நன்மையே விளையும் என்பது என் கருத்து."

• • • •

வகுப்புப் பிரச்னை தீர

மகாத்மா காந்தியை நிருபர் ஒருவர் பின் வருமாறு ஒரு கேள்வி கேட்டார்:—

வகுப்புப் பிரச்னையை ஒருவாறு தீர்க்க இந்தியாவிலுள்ளவர்களை முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், பார்ஸிகள் ஆகியவர்களை ஒரு பிரிவினராகவும், ஹிந்துக்கள் சீக்கியர் தாழ்ந்த வகுப்பினர் முதலியவர்களை இன்னொரு பிரிவினராகவும் பிரித்து முதல் பிரிவினர் 5 வருஷங்களுக்கும் இரண்டாம் பிரிவினர் பிறகு ஐந்து வருஷங்களுக்கும் ஆட்சி நடத்த ஏற்பாடு செய்தால் நன்மையாக விருக்காதா? இவ்விதம் செய்தால் அவநம்பிக்கை நீங்காதா? இந்திய சமஸ்தானாதிபதிகளை பொறுத்தமட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட சில அதிபதிகள் அடங்கிய கமிட்டியினர் எல்லா சமஸ்தானங்களையும் நிர்வகிக்க வழி செய்யக் கூடாதா?

இதற்கு மகாத்மா பின் வருமாறு 'ஹரிஜன்' பத்திரிகையில் பதில் கூறியிருக்கிறார்:—எழுத்தளவில்தங்கள் கேள்வி நன்றாகத்தானிருக்கிறது. ஆனால் அநுபவத்தில் தங்கள் யோசனை ஒத்து வராது: தங்கள் யோசனைப்படி நடந்தால் அந்த ஆட்சி பிறர் சூத்தி கயிற்றைக் கொண்டு ஆட்டும் ஒருயந்திரமாகவேயிருக்கும். அது நமது ஆட்சியாக விருக்காது: கயிற்றை இழுப்பவர் இஷ்டப்படித் தான் காரியங்கள் நடக்கும் இது பழைய வழி. நான் இதை விடச்சிறந்தவழி காட்டினேன். அது தான் அஹிம்ஸா வழி. எப்படியிருந்தாலும் முதலில் இந்த நாட்டிலிருந்து அந்நியர் ஆதிக்கம் ஒழியவேண்டும். அப்போது தான் நமது நிலை இன்னதென நமக்கு விளங்கும் நமது பலம் எவ்வளவு என்றும் நமது பலஹீனத்தின் தன்மை இன்னதென்றும் அப்போது நாம் திட்டமாக அறிந்துகொள்ளலாம். அந்நியர் ஆதிக்கம் மறைந்தால் தினசரிப் பிரச்னைகளை எவ்விதம் சமாளிப்பதென் நாம் தெரிந்து கொள்ளலாம். அதன் பின் தாங்கள் குறிப்பிடும் வழியில் நாம் ஆளப்படமாட்டோம். அதற்குப் பிறகு கத்தி கொண்டோ நியாயம் சொல்லியோ ஒரு முடிவு செய்யவேண்டியிருக்கும்.

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1	4
உலகரீகசியம்	1	0
நவரத்னலாகெட்	0	12
சாணக்கி சாஸ்திரம்	0	8
ஜெய காந்தன்	0	8
அசலாம்பிகை	2	4
தீனதயாளு	0	10
ஜகஜ்ஜாலன்	1	10
நாத லோசனம்	1	0
மறு கமலம்	0	12
லோகமான்ய திலகர்	0	8
இரஞ்சிதமாலா	0	8

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை

★ **புத்தக அபிமானிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!** ★

1-6-1942 முதல், 1-8-1942 வரை.

அல்லயன்ஸ் எல்லா வெளியீடுகளும், எங்களிடமுள்ள ஏனைய நூல்களும்—எங்கள் பதிப்புகள் மிகக்குறைந்த விலைக்கும்---மற்றைய நூல்களின் விலையில் குறைவு செய்தும் கொடுக்கப்படும். குறைந்த விலை விற்பனை ஜாப்தா 25—5—42 முதல், எழுதுவோர்க்கு அனுப்பப்படும்: (கதைக்கோவை 2-ஆம் தொகுதி ரூ. 5—0—0.)

அல்லயன்ஸ் கம்பெனி, 138, பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை. — அல்லது — **அல்லயன்ஸ் கம்பெனி,** (கிளை ஆபீசு) நியூ டவுன், காரைக்குடி.

சித்திரமும் சிருங்காரமும்

வஸந்த கால சந்திப்பு — வேடிக்கை மயமானது — 'விஜ:லா' — நஸிம் ப்ருத்விராஜ் நடிக்கின்றனர் — சித்திரக் கலைக்கு உயர்ந்த ஸ்தானம் — நடிப்பும் கீதமும் ஒருங்கே சேர்ந்தது — உயர்தர நடனக் காட்சிகள்.

"வஸந்த கால சந்திப்பு".

"வஸந்தகால சந்திப்பு" (ஸ்ப்ரிங் மிடிங்) என்ற பிரிட்டிஷ் டிஸ்ட்ரிப்யூட்டர் ஸாரின் படத்தின் கதை ரஸமானது. இந்தப் படம் கஸீனோ தியேட்டரில் இவ்வாரம் ஆரம்பமாகிறது.

நோவா பில்பீம், பேஸில் ஸிட்னி, ஹென்ரி எட்வர்ட்ஸ், ஸாரா சர்ச்சில் முதலியோர் இதில் நடிக்கின்றனர். இந்தப் படத்தின் கதை பின்வருமாறு: டைனி பாக்ஸ் சாலிப் என்ற ஸ்திரீ நடுத்தரவயதினள்: ஆயினும் அழகு நிரம்பியவள்: டோனி என்ற பெயர் கொண்ட அவளுடைய புத்திரனும் ரூபவான்: இருவரும் பணம் பூராவும் செலவழித்துவிட்டு வழியறியாமல் தவிக்கின்றனர்.

இதற்கு முன்பும் இதேமாதிரி பல தடவை அவர்கள் கஷ்டப்பட்டதுண்டு: ஆனால் அவை இப்போது ஏற்பட்ட கஷ்டத்திற்கு ஈடாகமாட்டா. டோனிக்கு மட்டும் தன் தாயார் கூறும் யோசனையில் அபார நம்பிக்கை உண்டு: கஷ்டத்தின் கொடுமையிலிருந்து அவள் தான் காக்கமுடியும் என்பது அவனது திட்டமான கருத்து: கடைசியில் டோனி அயர்லாந்திலிருந்த பெரிய பணக்காரரான ஸர் ரிச்சர்ட் பார்ஸ் என்பவரைப் பார்த்துப் பேச புறப்படுகிறான்: ஸர் ரிச்சர்ட் மனைவியை இழந்தவர்: இருபுத்திரிகள் அவருடன் வாழ்ந்து வந்தனர்: முன்பு அவருக்கும் டோனியின் தாயாருக்கும் நட்பு இருந்ததுண்டு. சென்ற 25 வருஷகாலமாக அவரைத் தான் சந்திக்காவிட்டாலும், அதனால் பாதகமில்லை என்கிறாள் டோனியின் தாயார். டோனி விவாகம் செய்து கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பது அவளுடைய முடிவு.

ஸர் ரிச்சர்ட் மாளிகைக்கு அம்மாவும் பிள்ளையும் போய்ச் சேருகின்றனர். ஸர் ரிச்சர்ட் சகோதரிக்கு இவர்களது வருகை கொஞ்சமாவது பிடிக்கவில்லை. பிறகு இருவரும் ஸர் ரிச்சர்டையும் அவரது குமாரிகளையும் சந்திக்கின்றனர். ஒருத்தி பேர் ஜோன்: மற்றொருத்தி பேர்

பல தினுசான சௌகர்ய ஆடைகள்

இப்போது லண்டனில் தைக்கப்பட்டு வரும் பல தினுசு சௌகர்ய ஆடைகள் காட்டப்பட்டன. ராணிக்கு ஆடைகளைத் தயாரித்துக் கொடுக்கும் நார்மன் ஹார்ட்னல் என்பவர்தான் இப்புது மாதிரி ஆடைகளையும் தயாரித்தவர். படத்தில் சில மாதிரிகளைப் பார்க்கலாம். (இ. என். பி.)

பேபி: அந்த மாளிகையில் சர்வாதிகாரம் வஹிப்பவன் அங்கிருக்கும் ஜேம்ஸ் என்ற பட்லர் தான் என்பது டோனிக்கும் டைனிக்கும் தெரிய வருகிறது. இந்த பட்லர் உள்ளொன்று வைத்து புறமொன்று பேசாதவன்: தன்னிஷ்டப்படி காரியம் செய்வதில் விருப்பம் கொண்டவன். இந்த நிலைமையில் டோனியின் தாய் தன் மகனுக்கு ஸர் ரிச்சர்டின் புத்ரிகளில் ஒருத்தியைக் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இருந்து வருகிறாள்: அதற்கான சந்தர்ப்பங்களைக் கண்டுபிடிப்பதிலேயே அவளுடைய கருத்து இருந்து வருகிறது.

சிறிது காலத்திற்கெல்லாம் பெரிய பெண்ணான ஜோனின் பெயரில் அவளது தகப்பனார் தமது சொத்து பூராவையும் எழுதி வைத்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது. ஆகவே டைனி தனது புத்திரனிடம் போய், அவன் ஜோனின் காதலைப் பெறவே முயற்சி பண்ண வேண்டும் என்று வற்புறுத்துகிறாள்: இந்த உண்மையை அவள் அவனிடம் எடுத்துரைத்து தன் ஆசை நிறைவேற உதவும்படிக் கோருகிறாள். ஆனால் ஜோன் டோனியிடம் ஆசை கொள்ளவில்லை. அவள் தன் தகப்பனாரின் மாஜி குதிரைக்காரனிடம் காதல் கொண்டிருந்தாள். ஆகவே டோனி பேபியின் நட்பை சம்பதிக்கிறான். பேபிக்கு ஸர் ரிச்சர்ட் ஒரு தம்பிடிகூட வைக்கவில்லை. ஸர் ரிச்சர்டின் மனோநிலை மிகவும் அற்பமானதா

மேலும் சில தினுஸுகள்

யுத்தத்தை முன்னிட்டு சிக்கனமாகத் தயாரிக்கப்பட்டு வரும் சௌகர்ய ஆடைகளை சிலர் அணிந்துகொண்டிருப்பதை இந்தப் படத்தில் காணலாம். இவை யாவும் மிக்வும் நேர்த்தியாகவும், நாசூக்காகவும், உடுக்க சௌகர்யமாகவும் இருக்கின்றன. (இ. என். பி.)

யிருந்தது. டோனிக்கும் பேபிக்கும் அவர் சொத்து கொடுப்பார் என எதிர்பார்ப்பது தகாது என்று எல்லோரும் எண்ணும் படியாகவும் நிலைமை இருந்தது.

இந்த சமயத்தில் டோனியின் தாயார் நிலைமையைத் திருப்திகரமாகச் செய்துவிடுகிறாள்: அதில் தான் அவளது திறமை இருந்தது. ஸர் ரிச்சர்டை மயக்கிவிடுகிறாள்: தனக்கு ஒரு புருஷனைச் சம்பாதித்துக் கொள்கிறாள்: டோனி-பேபி, ஜோன்—மைக்கேல் ஆகியவர்களது விவாகத்திற்கு அவள் ஏற்பாடு செய்து விடுகிறாள்.

தொடக்கத்திலிருந்து சமாப்தி வரை ஸ்வாரஸ்யம் அளிக்கும் படம்: ஹாஸ்யமும் சிருங்காரமும் ஒருங்கே அமைந்த படம்.

* * * *

"உஜலா"

தாஜ்மஹால் பிக்சர்ஸாரின் முதல் படமான "உஜலா" (ஹிந்தி,) மற்ற படங்களைக் காட்டிலும் பல் விஷயங்களில் வேறுபட்டதாகும். இந்தப் படத்தை டைரக்ட் செய்த ஜனுப் மஹம்மது இஸான் ஒரு இளைஞர்: கலாசாலையை விட்டு சமீபத்தில் தான் வெளிவந்தவர். மற்றொரு முக்கியாம்சம் என்னவென்றால் இதில் நஸீமும், ப்ருத்விராஜும் நடிக்கின்றனர். இதற்கு முன்பு இவ்விருவரும் ஒரே படத்தில் நடித்ததில்லை. இதை டைரக்ட் செய்தவர் ஸ்ரீ கே.எம். முல்டானி.

சியாமகிருஷ்ணு என்பவர் உயர்ந்த லக்ஷியம் கொண்டவர்: சிறந்த சங்கீத வித்வான். கட்டுப்பாட்டில் அதிக சிரத்தை கொண்டவர்: இவர் ஒரு டிராமா கம்பெனியை நடத்திவருகிறார். இந்தக் கம்பெனியில் நடிக்கும் மாயா என்பவள் எல்லோராலும் போற்றப்பட்ட நடிகை. அவளைப்பற்றித்தான் பலரும் பேசி வந்தனர். டிவாரி என்பவர் நகரில் இருந்த பெரிய பணக்காரர்: நடிகர் நடிகைகளிடம் அடிக்கடி போய், அவர்களைப் புலவிதமாக முகஸ்துதி செய்து அவர்கள் தன்னுடன் சிரித்துக் கொண்டு பேசும்படி அவர் செய்வது வழக்கம்.

டிவாரி மாயாவிடம் வந்து அடிக்கடி மோக வார்த்தைகள் பேசுவார். இது காரணமாக மாயா தனது கம்பெனிக்கு தாமதித்து வர ஆரம்பித்து விட்டாள். இந்த சமயத்தில் தான் தகராறு ஏற்பட்டது: இதைக் கண்ட சியாம கிருஷ்ணு நடிகர் யாவரும் கட்டுப்பாடு விதிகளை மீறி நடக்காமல் இருக்க வேண்டும் என்று நிர்ப்பந்தப் படுத்தலானார்.

இது விஷயமாக வாக்குவாதம் அதிகரித்தது: மாயா சியாம கிருஷ்ணுவை எதிர்த்து நிற்கவும் துணிந்துவிட்டாள். ஒரு நாள் டிராமா நடந்துகொண்டிருந்தது: பாதிக் காட்சியில் மாயா நாடக மேடையை விட்டுக் கிளம்பிவிட்டாள். இதற்குக் காரணம் டிவாரி அவளிடம் அளித்த பொய்ப் பிரமாணங்கள் தான்: பாவம், அவை யாவும் உண்மையானவை என மாயா நம்பிவிட்டாள்.

இதற்குப் பின்பு சியாம கிருஷ்ணு மாயாவின் ஸ்தானத்திற்குத் தகுதியானவளைக்கண்டு பிடிக்க வேண்டியதாகியது. அவரோ லக்ஷியவாதி: சீரிய கருத்து கொண்டவர்: பிரதிதினமும் அவர் தொடர்ந்த முயற்சிக்குக் குறைவு கிடையாது: அவர் பட்ட சிரமத்திற்கும் அளவே இல்லை: ஆனால் முயற்சியும் கஷ்டமும் பலனடையவில்லை. ஒரு நாள் ஒரு இனிய கானத்தை அவர் கேட்கிறார்: அவ்வளவு இன்பகரமாகப் பாடியவளைத் தேடிக் கொண்டு போகிறார் அவர்: கடைசியில் அங்கு போனதும் அவருக்கு திருப்தியானவரவேற்பு கிடைக்கவில்லை.

பிறகு ஒரு நாள் சியாம கிருஷ்ணு ஸிட்டார் வாத்திய கீதத்தை ரேடியோ மூலம் ஒலி பரப்பியதை அந்தப் பெண் ஸரோஜ் கேட்டு பரவசமடைகிறாள்: அவ்வளவு மனோஹரமாகப் பாடியவரிடம் அவளுக்குப் பிரேமையும் உதயமாகிறது. அவசரம் அவசரமாக அவள் ரேடியோ நிலயத்திற்குப்போய் அங்குசியாமகிருஷ்ணுவை சந்திக்கிறாள்: மறுபடியும் இருவருக்கும் தகராறு ஏற்படுகிறது. ஏனெனில் நாடக மேடை மீதேறி நடிக்க ஸரோஜா திரும்பவும் மறுக்கிறாள். முன்பைவிட அதிக பிடிவாத புத்தியுடன் இருவரும் இப்போதும் பிரிந்து போகின்றனர்.

ஸரோஜின் பிடிவாதத்தை எப்படியாவது மாற்றி விடுவது என்ற சங்கல்பத்துடன் சியாம கிருஷ்ணு அவள் தங்கியிருக்கும் விடுதியில், தானும் ஓர் அறையைத் தன் வாசத்திற்காக வாடகைக்கு அமைத்துக்கொள்கிறார். அங்கு ஒரு நாள் அவர் ஸிட்டார் வாத்தியத்தை வாசிக்க ஆரம்பித்து விட்டார்: ஆரம்பித்தவர் ஓயவே இல்லை. ரமணீயமான கீதம்: கேட்டவர் யாவரும் கரைந்துருகும்படியான கானம்: மனதையும் மயக்கும் மோஹனாஸ்திரம் போன்றிருந்தது அது: அவர் ஆர்வத்துடன் வாசித்தார்.

காரிய சித்தியிலேயே கருத்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் சிறிது நேரம் ஸரோஜ் உணர்ச்சியை அடக்கிப் பார்த்தாள். எவ்வளவு காலம்தான் முடியும்? அவளை சியாம கிருஷ்ணுவிடம் வலித்திழுத்தது அந்த மனோஹர கீதம்: பாட்டுக் கேற்ப நடனம் புரிய ஆரம்பித்து விட்டாள் அவள் தன்னையு மறியாமல். நடனமாடி ஆடி அவளுக்கு களைப்பு ஏற்பட்டு விட்டது. தனக்குச் சோர்வு ஏற்பட்டவுடனேயே அவள் சியாம கிருஷ்ணுவிடம் விரைந்தோடினாள். சங்கீதத்தை சமாப்தி செய்யும்படி மன்றாடிக் கேட்டாள்: தான் தோல்வியடைந்து விட்டதாகவும் ஒப்புக்கொண்டாள். நாடகக் கம்பெனியில் சேர சம்மதிப்பதாகவும் தெரிவித்தாள். ஆனால் சியாம கிருஷ்ணு நிபந்தனையை ஏற்க மறுத்து விட்டார்.

சியாமகிருஷ்ணுவின் நாடகக் கம்பெனியின் ப்ரக்யாதி பிறகு நாளுக்கு நாள் க்ஷீணிக்கலாயிற்று. காலக்கிரமத்தில் அவர் தமது கம்பெனியைத் தமது மானேஜரிடம் ஒப்படைத்து

சென்ற வார நிகழ்ச்சிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று 43 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. 17 ஸோவியத் விமானங்கள் நஷ்டம்.

பாரெண்டஸ் கடலில், 12000 டன் எடையுள்ள ஜெர்மன் கப்பலொன்றை ஒரு ஸோவியத் கப்பல் மூழ்கடித்தது.

ராய்ட்டர் விசேஷ நிருபர் பின் வருமாறு எழுதுகிறார்:— கொர்ச் தீபகற்பத்தில் விமானங்களும் பீரங்கிகளுமே அதிகமாக உபயோகப்படுத்தப்படுகின்றன. 15-மைல் அகலமுள்ள இக்குறுகிய போர் முனையில் ஏராளமாக டாங்குகளும் விமானங்களும் உபயோகப்படுத்த முடியாது. பதுங்கி யடிக்கும் விமானங்களை ஜெர்மனியர் அதிகமாக உபயோகிக்கின்றனர் ரஷ்யருக்கும் அதிக விமான பலமிருக்கிறது. ஜெர்மனியரிடம் மூன்று அல்லது நான்கு காலாட்படை டிவிஷன்களும், ஒரு டாங்கி டிவிஷனுமிருப்பதாகத் தெரிகிறது. கிரிமியாவில் கோடை காலம் ஆரம்பமாகி சாகுபடி ஆரம்பமாகி விட்டது.

* * * *

மத்திய முனையில் ரஷ்யரின் வெற்றி

மத்திய முனையில் ஸ்மாலன்ஸ்க் பகுதியில் முக்கியமான ஜெர்மன் அரணொன்றை ரஷ்யர் பிடித்தார்கள். இரு ஜெர்மன் படைகள் விரட்டி யடிக்கப்பட்டனவென்று 'ரெட்ஸ்டார்' கூறுகிறது.

காலினின் பிரதேசத்தில் 700 ஜெர்மனியர் ரஷ்யரால் அழிக்கப்பட்டார்கள்.

வடமேற்கு முனையில் 'கே' என்ற கிராமத்தை ஸோவியத் துருப்புகள் இன்று கைப்பற்றியதாக மாஸ்கோ ரேடியோ அறிவிக்கிறது.

* * * *

மத்தியதரைக் கடலில்

இம்மாதம் 11-ந்தேதிபிற்பகல் கிழக்கு மத்தியதரைக் கடலில் 4 பிரிட்டிஷ் நாசகாரி கப்பல்களை ஜெர்மன் ஆகாய விமானப் படையினர் தாக்கினார்கள். மூன்று கப்பல்கள் மூழ்கி விட்டன. மேற்படி கப்பல்களிலிருந்த சுமார் 500 அதிகாரிகளும் மாலுமிகளும் காப்பாற்றப்பட்டனர். உயிர்ச்சேதம் அதிகமில்லை. மூழ்கடிக்கப்பட்ட கப்பல்களின் பெயர்கள் லைவ்லி, ஜாக்கால், கிப்ளிங் என்று சொல்லப்படுகிறது.

விமானப் படைத் தாக்குதலின் பொழுது பிரிட்டிஷ் விமானப் படையினர், ஜெர்மன் விமானங்களில் சிலவற்றை நாசம் செய்தனர்.

* * * *

ஹாங்காங்கை கடற்படை தளமாக்க

ஹாங்காங்கை முக்கியமான கடற்படை தளமாகச் செய்து உபயோகிக்க ஜப்பானியர் திட்டம் போட்டிருக்கலாம். ஹாங்காங்கிலுள்ள அமெரிக்க ஐரோப்பிய பந்தோபஸ்துக் கைதிகள் அப்புறப் படுத்தப் படுவதால் இம்மாதிரி செய்யக் கூடுமென சங்கிங்கிற்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

* * * *

சீனர் மீது விஷ வாயுப் பிரயோகம்

ஜப்பானியர் விஷ வாயுவையும் தொத்து நோய்க் கிருமிகளையும் போரில் உபயோகிக்கின்றனர் என்பது நேச நாட்டு சர்க்கார்களுக்குச் சீன சர்க்காரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது, என அதிகாரி யொருவர் அறிவிக்கிறார்.

மிஸ்டர் சர்ச்சில் ஹிட்லருக்கு எச்சரித்ததுபோல் ஜப்பானுக்கு எச்சரிக்கக் கூடிய பலமிராததால் தான் சீனா இவ்விதக் கொடிய உபயோகத்தை இதுவரை தடுக்க முடியவில்லை. ஆனால் இனி நேச நாட்டினர் முன்னேறித் தாக்க முடியுமாதலால் ஜப்பான் இக்கொடுமையை நிறுத்தக் கூடும் என அவ்வதிகாரி மேலும் கூறினார்.

* * * *

விட்டு கீத வாத்யத்தில்தனது காலத்தைக் கழிக்கத் தீர்மானிக்கிறார், மானேஜரான மிர்ஸா திடீரென்று ஒரு நாள் ஸரோஜினியை நாடக மேடைக்குக் கொண்டு வந்து விடுகிறான்; ஸரோஜினி நடிக்கப்போவதாகவும் விளம்பரம் பண்ணுகிறான் அவள் நடிக்கும் முதல் தினத்தன்று சியாம கிருஷ்ணு தியேட்டருக்குக் கட்டாயப்படுத்தி அழைத்துக் கொண்டு போகப்படுகிறார்: ஸரோஜினி ஸரோஜ் தவிர வேறில்லை என்பதை அவர் காண்கிறார்.

பிறகு ஸரோஜின் நடிப்பு பிரசித்தமாகிறது. பார்த்தவர் அனைவரும் கொண்டாடுகின்றனர். சியாம் அவளைக் காதலிக்க அவளும் அவரைக் காதலிக்கிறாள். நடிகைகளை உபத்ரவிக்கும் டிவாரி இதுவரை ஸரோஜிடம் அணுகவில்லை. சியாம்—ஸரோஜினி நட்பு வெகு விரைவில் பலப்பட்டு, இருவரும் மணம் புரியவும் ஒப்புகின்றனர். விவாக தினத்தன்று டிவாரி ஸரோஜினியை அபகரித்துக்கொண்டுபோய் விடுகிறான். அவளை அவன் பலாத்காரம் பண்ணுகிறான்.

இதனால் சியாம் மனமுடைந்து போகிறார். ஒரு நாள் ஸரோஜியை டிவாரி பலாத்காரம் பண்ணப் பிரயத்தினம் செய்தபோது ஒரு ஜன்னல் வழியாக கீழே அவள் குதித்துவிடுகிறாள்: இதனால் அவள் சாஸ்வதமாய் படுத்த படுக்கையாய் இருக்க நேரிடுகிறது. ஸரோஜினியின் உத்சாகக் குறைவும் தேக நிலையும் டிவாரியின் மனதையும் உருக்குகின்றன, பிறகு டிவாரிக்கு நல்ல புத்தி வருகிறது: இதற்கப்புறம் கதை எல்லோருக்கும் திருப்திகரமாகப் பூர்த்தியாகிறது.

இந்தப் படத்தின் காட்சிகள் மிகவும் திருப்திகரமாய் இருக்கின்றன. சியாம் கிருஷ்ணுவாக ப்ருத்விராஜும், ஸரோஜாக நஸீமும் மிகச் சிறப்பாக நடித்திருக்கின்றனர்.

ஜெர்மன் படை பின்வாங்குதல்

★

ருஷ்யாவில் மலேயா ரோஸ்லோவாட்டில் ஜெர்மன் படைகள் ஆயுதம் தரித்த வண்டிகளை விட்டு விட்டு ஓடுகின்றன.

★



ருஷ்யாவில் கொரில்லாப் படை

★

ருஷ்யா கொரில்லாப் படைத் தலைவர் தமது படையினருக்கு யுக்தி சொல்லிக்கொடுக்கிறார்.

★

பொருட் காட்சி சாலை நாசம்

★

ருஷ்யாவில் பிரசித்தி பெற்ற பொரோடினோ பொருட் காட்சி சாலை நாஜிகளால் நாசமாக்கப் பட்டது.

★



திராவிட ரத்தினம்

★

ஸ்ரீமான் கிருஷ்ணஸ்வாமி சர்மா

இயற்றியவை

	ரூ. அ.		ரூ. அ.
மகாத்மா காந்தி	1 8	இராஜ இராஜ சோழன்	0 10
நெப்போலியன்	1 8	ஆத்ம சக்தியும் சாந்தி நிலையும்	0 10
இராஜரீக சாஸ்திரம்	1 0	அசோக சக்ரவர்த்தி	0 8
புத்தர் ஜாதகக் கதை	0 10	கும்பமஹாராணா	0 6
இந்தியா இழந்த தனம்	1 0	ஜோஸப் மாஜினி	0 12

வேதோபநிஷத ஆசிரியர்

ஜம்புநாதரின் நூல்கள்

	ரூ. அ.		ரூ. அ.
அதர்வ வேதம்	5 0	கதா ரதம்	0 9
யஜுர்வேதம்	3 0	திரிமூர்த்தி உண்மை	0 8
ஸாமவேதம்	1 8	வேதசந்திரிகை	0 8
மாஜினியும் மனிதர் கடமைகளும்	1 0	யோகாசனம் (தமிழ்)	0 8
யஜுர்வேத கதைகள்	0 9	கடோபநிஷதம்	0 4
உபநிஷத் கதைகள்	0 8	ரோஜாத் தோட்டம்	0 4
ஜினவேதம்	0 8	Yoga Asanas	0 8
சிரத்தானந்தர் சரித்திரம்	0 8	Yoga Body	1 0

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

ஏமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான அக்ப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"[illegible]" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C.R. Srinivasan, B A